உபதேசம் நாற்பது

உன் கீழான மனதுக்கு முற்றுமே நீ பகைவனானால் அன்றி, உன் உடலிலுள்ள சகல அங்கங்களை விட்டும் பிரிந்தவனானாலன்றி, உன் ஜீவிதத்திலுள்ள சகல அசைவுகளையும் ஒய்வான நிலைமைகளையும், கேட்பதையும், பார்ப்பதையும், பேசுவதையும், வைத்திருப்பதையும், செயலையும், அறிவையும், மற்றும் உன் ஆத்மீக ஜீவிதம் உண்டா வதற்கு முன்பு உன்னிடமிருந்து வெளிப்பட்ட சகலவற்றையும் விட்டு விலகினாலன்றி ஆத்ம ஞானியர் கூட்டத்தில் சேர்க்கப்படுவாய் என்று எண்ண வேண்டாம். ஆத்ம ஜீவிதம் உன்னுள் ஊதப்பட்டதும், உனக் கும் உன் இறைவனுக்கும் இடையில் திரையாக இருந்த இவை யாவும் மறைந்துவிட வேண்டும். அந்நிலையில் நீ பரிசுத்தமான கல்புடைய வனாகி, உன் ஆத்ம ரகசியங்களுக்கெல்லாம் ரகசியமானதும் மறை வானவற்றுள் எல்லாம் மறைவானதும், அந்தரங்கத்தில் மற்றவற்றை விட்டும் தனி ஆனதுமான நிலையை எய்தியதும், உன் இறைவனைத் தவிரமற்றுள்ள சகலமும் பகையானவைகளாயும், திரியானவையாயும் இருப்பதை உணர்வாய், “நிச்சயமாக, என் சர்வலோக ரட்சகனையன்றி (மற்ற) இவை யாவும் எனக்குப் பகையானவைதாம், (அவன் மட்டுமே என் நேயனாவான்)'' (26 : 77) என்று இப்ராஹீம் கலீலுல்லாஹ்(அலை) அவர்கள் சொன்னது போன்று நீயும் கூறிவிடுவாய். அவர்கள் விக்ரஹங்களைப்பற்றி இவ்விதம் கூறினார்கள். எனவே, நீ உன் உடலையும் அதன் அவயவங்களையும் பிற சிருஷ்டிகளையும் விக்ரஹங் களாகக் கருதவேண்டும். அவற்றில் எதற்கும் நீ கீழ்ப்படியக் கூடாது; கண்டிப்பாய் அவற்றைப் பின்பற்றக் கூடாது. அப்போது உன்னிடம் ரகசியங்கள் வெளியிடப்படும்; தெய்வ ஞானமும் அதன் அபூர்வமான விஷயங்களும் உன்னுள் உதிப்பதாகும். சிருஷ்டிக்கும் சக்தியும், சொர்க்கத்திலுள்ளவர்களான மெய்விஸ்வாசிகளிடம் காணப்படும் அற்புதங்கள் நிகழ்த்தும் சக்தியும் உனக்கு அருளப்படும்.

இதன்பின், நீ மறுமையில் உயிர்த்தெழுப்பப்படுவது போன்ற நிலைமையிலாவாய். அல்லாஹ்வின் சக்தி வெளிப்படும் ஒரு கருவியாய் இருப்பாய்; அல்லாஹ்வின் மூலம் கேட்பாய்; அவன் மூலம் பார்ப்பாய்; அவன் மூலம் நடப்பாய்; அவன் மூலம் அறிந்து கொள்வாய்; அவன் மூலம் சுகமும் ஆஸ்வாஸமும் அடைவாய். அவனையல்லாத சகலவற்றின் விஷயத்திலும் குருடாகவும் செவிடாகவும் இருப்பாய். ஏவல் விலக்கல்களை அனுசரித்துச் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடப்பின், இதன் மூலம் அவனையன்றி வேறு எதுவும் ஜீவித்திருப் பதையே உணராதவனாவாய். அதன் பின்னும் உன்னிடத்தில் சட்டத் தின் அவசியத்தைத் தேவை எதுவும் குறைவாய் இருப்பின் ஷைத்தா னின் ஊசாட்டங்களால் நீ அலைக்கழிக்கப்படுகிறாய் என்று உணர். சன்மார்க்க நெறிமுறையின் கட்டளைகளின் படி நட; சன்மார்க்க நெறிமுறையைப் பற்றிப்பிடித்துக் கொள். கீழான இச்சைகளை விட்டும் ஒதுங்கிவிடு. சன்மார்க்க நெறிமுறையில் உறுதி சொல்லப்படாத எதுவுமே தெய்வ நிந்தனையானது என்பதை உணர்.

உபதேசம் நாற்பத்து ஒன்று

வளமுயர்ந்த நிலைபற்றிய ஓர் உபமானத்தை உனக்குச் சொல் கிறேன்; சாதாரணமான மனிதன் ஒருவனை அரசன் தன் பிரதிநிதிப் பதவியில் நியமித்து, ஒரு மாகாணத்தின் தலைமைப் பதவியையே அவனிடம் ஒப்படைப்பதில்லையா? அம்மனிதனுக்கு கௌரவமான உடையையும், கொடிகளையும், முரசங்களையும், படைகளையும் அளிப்பதில்லையா? இத்தகைய நிலையில் சில காலம் சென்றதும், தன் பதவி சாஸ்வதமாகிவிட்டது என்று எண்ணியதும், அவன் தன் பழைய சாதாரணமான நிலையையும், அப்போது தரித்திரத்திலும் துயரத்திலும் யாரும் அறியாமல் சங்கடப்பட்டதையும் மறந்து விட்டு அகந்தை கொள்கிறான். ஆடம்பர வாழ்வில் இறங்குகிறான். இதைக் கண்ட அரசன் உடனே அவனைப் பதவியை விட்டு விலக்கி அவன் செய்த குற்றங்க ளுக்குக் காரணம் கேட்கிறான்; தன் ஏவலையும் விலக்கலையும் ஒழுங்காக அனுஷ்டிக்காதது ஏன் என்று வினவுகிறான், இக்குற்றங்க ளுக்காக அரசன், அவனை ஓர் ஒடுக்கமான இருட்டறையில் சிறைப் படுத்துகிறான்; அவன் சிறை வாழ்க்கையை நீடிக்கச் செய்கிறான். இந்தத் துயரத்திலும், தரித்திரத்திலும், சங்கடத்திலும் கஷ்டப்படும் அம்மனிதன், தன் அகந்தையும், அகங்காரமும் உருகித் தன்னுடைய 'தான்' தன்மை உடைந்து, தன் இச்சை நெருப்பு அவிந்தவனாய் ஆகி விடுகிறான். இவை

யாவும் அந்த அரசனின் கண் முன்னேயே அவன் அறியவே நடக்கின்றன. அதன்பின் அந்த அரசன் அம்மனிதன் இடம் கருணை கொள்கிறான். அவனைச் சிறையிலிருந்து விடுவிக்கச் செய்து பல வெகுமதிகளைக் கொடுத்துப் பழைய கௌரவமான பதவியை மீண்டும் கொடுத்து, இப்போது வேறொரு மாகாணத்துக்கு அவனைத் தன் பிரதிநிதியாக்குகிறான். இவை யாவையும் அம்மனிதனுக்கு இனாமாக நன்கொடையாகவே வழங்குகிறான். இந்தப் பதவியில், அவன் நிலையாகவும், சுத்தமாகவும், திருப்தியுடனும் தொடர்ந்து இருந்து வருகிறான்.'

ஒரு மெய்விஸ்வாசியை அல்லாஹ் தன் பக்கல் இழுக்கும்போது நிலைமை இதுவாகவே இருக்கும். அவன் மனக்கண் முன்னர் கருணை, பரிவு, சம்மானம் ஆகிய கதவுகளை அல்லாஹ் திறந்துவிடுகிறான். இதனால் அந்த மெய்விஸ்வாசி எந்தக் கண்ணும் காணாததைத் தன் அகக் கண்ணால் காண்கிறான்; எந்தக் காதும் கேளாததைத் தன் அகக் காதால் கேட்கிறான்; சொர்க்க ராஜ்ஜியங் களிலும் பூமி ராஜ்ஜியத்திலும் உள்ள மறைவான விஷயங்கள் பலவும், எந்த இதயத்துக்கும் புலப்படாத அளவு அவன் இதயத்துக்குப் புலனாகின்றன. அல்லாஹ்வுக்கு அருகிலாதலும், இனிய அரிய வார்த்தையும், இன்பமான வாக்கும், நிறைந்த அன்பும் தொழுகையும், உண்மையும் ஏற்கப்பட்டதும் வாக்கு நிறைவேற்றமும் அவனுக்குத் தெளிவாகிறது. அதிகமான ஞானங்கள் அவன் இதயத்துள் பொழியப் பட்டு அவை அவன் வாய்ச் சொற்களாய் வெளிப்படுகின்றன. இவற்று டன் புறத்தில் அவன் உடல் அங்கங்களின் விஷயத்திலும் அல்லாஹ் தன் அருளைச் சொரிகிறான் அதாவது: அவனுக்கு உண்ணவும், அருந்தவும், உடுத்தவும் தேவையானவற்றைத் தருகிறான்; ஆகுமான மனைவியைத் தருகிறான்; மற்றும் ஆகுமானவற்றை உதவுகிறான். சட்ட வரம்புக்கு மதிப்புக் கொடுத்து, புற ஜபதபங்களிலும் ஒழுங்காக நடக்கச் செய்கிறான்.

தன் மெய்விஸ்வாசியான அடியான் தன் பக்கல் ஈர்க்கப் பட்டவ னானதும், அவனை இவ்வித நிலையிலாக்கி இதே நிலையிலேயே நீடிக்கச் செய்கிறான். ஆனால், இது உறுதிப்பட்டதும், அடியான் ஆனவன் இதுவே

சதம் என்று எண்ணிக் கொண்டு, இதில் மயங்கி விடுகிறான், உடனே அல்லாஹ் துயரக் கதவுகளை அவனுக்குத் திறந்து விடுகிறான். உயிர், சொத்து, மனைவி, குழந்தைகள் போன்ற வற்றின் பல்வேறுவித நஷ்டங்களை உண்டாக்ககிறான். முன்னர் தான் அவனுக்கு வழங்கிய நன்கொடைகளை எல்லாம் அகற்றி விடுகிறான். இதனால் அவன் நிர்க்கதியாகி மனம் உடைந்து, தன் கூட்டத்தாரி டமிருந்து துண்டிக்கப்பட்டவனாகி விடுகிறான்.

தன் புற நிலைமைகளை அந்த மெய்விஸ்வாசி நோக்கினால் தனக்குத் தீமையாகப் படுபவற்றைக் காண்கிறான். தன் இதயத் தையே, அகத்தின் ஆழத்தையே நோக்குங்கால் அவனைத் துயரப்படுத்துவது எதுவோ அதை அங்குக் காண்கிறான். அதன் தொல்லைகளை அகற்றும்படி அவன் அல்லாஹ்விடம் வேண்டுதல் விடுத்ததும், அது ஏற்கப்படாது போகிறது. அவன் எந்த நன்மையையும் வேண்டினால், அது விரைவில் கிடைப்பதில்லை. அவனுக்கு எதுவாவது அருளப்படும் என்று வாக்களிக்கப்பட்டால் அது அருளப்பட்டது அவனுக்குத் தெரிவிக்கப்படுவதில்லை. அவன் ஏதாவது கனவு கண்டால், அவனால் அதைப் புரிந்து அதன் உண்மையை அறிந்து கொள்ள இயல்வதில்லை. அவன் மீண்டும் மக்கள் கூட்டத்தில் சேர எண்ணினால் அதற்கும் மார்க்கம் தென்படுவதில்லை. ஏதாவது மாற்று வழி தோன்றி அதில் அவன் இறங்கினாலும், அங்கும் தண்டனை காத்துக் கொண்டிருக்கிறது. அவன் உடலை ஜனங்கள் வருத்துகின்றனர். அவன் கௌரவத்தை அவர்கள் நாவுகள் இழிவுபடுத்துகின்றன. தான் இருக்கும் நிலையில் கடமையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, அவன் ஏற்கப்பட்டதற்கு முன்பு உள்ள சாதாரணமான நிலைக்காவது போய்விடலாம் என்று எண்ணி அவன் வேண்டினாலும், அவன் பிரார்த்தனை ஏற்கப்படுவதில்லை. தன்னைச் சுற்றியுள்ள துயரங்களுக்கிடையில் மகிழ்வுடனும் மனப் பூர்வமாகவும் அடிபணிந்து மனமகிழ்வோடு இருக்கவாவது அருளப்பட வேண்டும் என்று அவன் பிரார்த்தித்தாலும் அதுவும் அனுமதிக் கப்படுவதில்லை.

இதன் பின்னரே அவன் அகம் கரைந்து, அவன் கீழான இச்சைகள் மறைகின்றன. அவன் ஆசைகளும் நோக்கங்களும் விலகு கின்றன. இவ்வித நிலை கொஞ்ச காலம் நீடிக்கப்படுகிறது. அதிகமாக ஆக்கவும்படுகிறது. கடைசியில் அந்த அடியான் தன் மானிடப் பண்புகளை விட்டு முற்றும் விலகி ஆத்மாவாக மட்டும் ஆகிறான். அப்போது அவன் அகத்திலிருந்து ஒரு குரல் எழுகிறது. "உம் பாதங் களைத் (தரையில் தட்டும்; இதோ, குளுமை நிறைந்த ஓர் இடமும் குடிப்பதற்கான தண்ணீரும் உள்ளன" (38 : 42) என்று ஐயூப் நபி (அலை)க்கு அருளப்பட்டது போல அக்குரல் அவனிடமும் செய்தி ஒலிக்கிறது. பின்னர் அதன் கருணை, பரிவு, அன்பு எனும் கடல்களை அவன் இதயத்துள் புகச்செய்து, தன் மகிழ்வையும், ஞானத்தின் இனிய மணத்தையும் அதன் சிறந்த அம்சங்களையும் கொடுத்துப் புத்து யிரூட்டி, தன் அருட்கொடைகள் என்ற கதவுகளைத் திறந்து விட்டுச் சகலவித நிலைகளிலும் ஜனங்களின் கரங்கள் அவன் பக்கம் நன் கொடைகள் அளிக்கவும் சேவை புரியவும் நீளும்படியும், ஜனங்களின் நாவுகள் அவன் பெருமையையும், நற்செயல்களையும் புகழும்படியும், ஜங்களின் பாதங்கள் துரிதமாக அவனை நோக்கி வரும்படியும், அவர்கள் சிரங்கள் அவன் முன் குனியும்படியும், அரசர்களும், அவன் அதிகாரிகளும் அவனுக்குப் பணியும்படியும் வெளி, அக அருட்கொடைகளை அல்லாஹ் அருளுகிறான், தன் சிருஷ்டி மூலம் அவனுடைய புற வளர்ச்சியைப் பற்றிய பொறுப்பை அல்லாஹ்வே ஏற்றுக் கொள்கிறான். தன் அன்பாலும் அருளாலும் அவன் புற வளர்ச்சி யைச் சம்பூரணமானதாக ஆக்குகிறான். அந்த அடியானைத் தான் சந்திக்கும்வரை இந்நிலை நீடிக்கச் செய்கிறான், பின்னர் எந்தக் கண்ணும் கண்டிராத, எந்தக் காதும் கேட்டிராத, எந்த இதயத்திற்கும் தோன்றியிராததற்கு, "கண்களைக் குளிரச் செய்பவற்றில் அவர்கள் (நற்) செயல்களுக்குச் சம்மானமாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது எவ்வளவு என்று எந்த ஆத்மாவுக்கும் தெரியாது" (32 : 17) என்று அல்லாஹ் வருணிக்கும் நிலைக்கு அவன் வருமாறு அல்லாஹ் கிருபை புரிகிறான்.

உபதேசம் நாற்பத்து இரண்டு

மனிதனின் மனம் மகிழ்ச்சியான நிலை, தொல்லையான நிலை என்ற இருவித நிலைகளில் ஏதாவது ஒன்றிலேயே இருக்கும்; மூன்றாம் நிலை

எதுவுமில்லை. இதனால் அது தொல்லையில் இருக்கையில் கவலையும், புகாரும், அதிருப்தியும், குறை கூறலும், இறைவன் மீதே குற்றஞ்சாட்டலும் நேர்கின்றன. பொறுமை, மனப்பூர்வமான அடி பணிதல், மனப்பொருத்தம் ஆகியவை இல்லாது போகின்றன. அத்துடன் தீய ஒழுக்கமும், சிருஷ்டிக்கப்பட்டவைகளைச் சிருஷ்டித்தவனும் இணை வைத்தலும் உண்டாகும். ஆனால், மனிதனின் மனம் மகிழ்ச்சி யான நிலையில் இருப்பின் அதில் பேராசை, பிடிவாதம், கீழான போக உணர்ச்சிகள் முதலியவை தலை தூக்குகின்றன; ஓர் ஆசை பூர்த்தி யானதும் மறு ஆசை கிளர்ந்தெழும். ஏற்கனவே தான் அனுபவித்துக் கொண்டிருக்கும் பாக்கியங்களைப் பற்றிக் குறைவாக எண்ணும் நிலைமையுண்டாகும். அவற்றில் மனம் குறை காணும். இவற்றைவிடச் சிறந்த–தனக்கு உரியதாக ஒதுக்கப்படாத–பெரிய சுகத்தை நாடும்; தனக்கு ஒதுக்கப்பட்டதை அலட்சியம் செய்யும். இதனால் சம்பந்தப்பட்ட மனிதனுக்கு பலவகையிலும் தொல்லைகள் உண்டாகின் றன. கையில் உள்ளதில் திருப்தியடையாத மனம் தொல்லையில் மாட்டிக் கொண்டு, இம்மையிலும் மறுமையிலும் முடிவில்லாத கஷ்டங்களுக்கும், துயரங்களுக்கும், அழிவுக்கும் ஆளாகிறது. "நிச்சயமாக தண்டனைகளுள் மிகவும் துயரம் தருவது தனக்காக ஒதுக்கப்படாததைத் தேடுவதற்குத் தரப்படுவதுதான்" என்று கூறப்பட்டு இருப்பதற்கு ஒப்ப அது தொலையாத கஷ்டத்தைச் சேர்த்து விடுகிறது.

இவ்விதம் மனம் கஷ்டத்துக்கு உள்ளாகையில் அதிலிருந்தும் விடுபட வேண்டும் என்பதன்றி வேறு எதையும் அது விரும்புவதில்லை; சகல சுகங்களையும் ஆசைகளையும், இன்பமானவற்றையும் அது மறந்து விடுகிறது; இவற்றில் எதையும் கேட்பதில்லை. பிறகு சம்பந்தப் பட்ட நபருக்குச் சுகமும் வசதியான வாழ்க்கையும் வாய்த்ததும், அவன் மீண்டும் அகந்தையும், பொறாமையும் பணிவற்ற தன்மையும் உடையவனாகத் தன் இறைவனுக்குக் கீழ்ப்படியாது, தன் பாவகரமான தொழில்களில் மூழ்கிவிடுகிறான். அதற்கு முன்பு வரை அவன் உட்பட்டிருந்த துயரங்களையும் அவன் ஆளாக்கப்பட்ட தொல்லை களையும் உடனே மறந்து விடுகிறான்.

இதனால் அவன் ஏற்கனவே அனுபவித்ததைவிட அதிகமான கஷ்டங்களுக்கு ஆளாக்கப்படுகிறான். அவன் கொஞ்சமும் மாறாது நடந்துவந்த தீய ஒழுக்கத்துத் தண்டனையாக இவ்விதம் செய்யப்படுகிறான். சுகமும் வசதியும் அவனைத் திருத்தமாட்டா என்றானதும், அவனுக்கு இவ்விதம் தண்டனை வழங்கப்பட்டு மேலும் மேலும் அவன் தன் பாவங்களில் அழுந்தாதபடி செய்யப்படுகிறது.

துயரம் அகற்றப்பட்டதும் நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்து கீழ்ப்படிதலும், தனக்கு விதிக்கப்பட்டதை மனமுவந்து ஏற்றலும் உடையவனாக அவன் இருந்திருப்பின் அவனுக்கு இம்மையிலும் மறுமை யிலும் நன்மை உண்டாகி இருக்கும்; அப்போது அவனுக்கு உலக வசதிகளும், அல்லாஹ்வின் அருளும் மகிழ்வான வாழ்வும், சுகமும் அதிகரித்திருக்கும்.

எனவே, இம்மை மறுமையில் பாதுகாப்புத் தேடுபவன் பொறுமையையும் மனமுவந்து அடிபணிதலையும் வளர்த்து ஜனங்களுக்கு எதிராய்ப் புகார் செய்வதைத் தவிர்க்க வேண்டும் தன் தேவையை எல்லாம் தன் சர்வலோக ரட்சகனிடமிருந்தே பெறவேண்டும்; அவனுக்கு அடிபணிவதைக் கடமையாகக் கொண்டு, சுகம் வருவதற்காக காத்திருந்து, அவனுக்கே சேவை செய்ய வேண்டும். அவனுடைய சிருஷ்டிகள் சகலவற்றிலும் உள்ள எதையும்விட அவன் சிறந்தவன் அன்றோ!

அனேகமாக, அவன் பறிப்பது ஒரு நன்கொடை ஆகவும் அவன் தண்டனை ஒரு பாக்கியமாகவும், அவன் அனுப்பும் துயரம் ஒரு நிவர்த்தியாகவும் அவன் வாக்குறுதி ஒரு ரொக்கமாகவும், அவன் வார்த்தை செயலாகவும் இருக்கின்றன. அவன் ஏதாவது ஒன்றைச் செய்ய நாடினால், அவன் கூறும் வார்த்தையும் கட்டளையும் 'ஆகுக' என்பதுதான்; உடனே அது ஆகிவிடுகிறது. ஆகவே, அவன் செயல்கள் யாவும் நன்மையானவையாகவும் ஞானத்தையும், அனுபவத்தையும் அடிப்படையாகக் கொண்டவையாகவும் இருக்கின்றன. ஆனால், அவன் தன் அனுபவத்தின் ஞானத்தைத் தன் அடியான் அறியாத ஒன் றாய்த் தன்னகத்தே வைத்திருக்கிறான். இதனால் அடியான் மனமு வந்து அவனுக்குப் பணிந்து. தன்னை அர்ப்பணித்து, அவன் ஏவல் விலக்கல்களின்படி ஒழுகி அவனுக்குச் சேவை செய்து, அவன் தனக்கு ஒதுக்கி உள்ளதில் மனப் பொருத்தங் காட்டி, சிருஷ்டியை ஊட்டி வளர்க்கும் ஈடுபாடுகளில் மனங் கொள்ளாது இருக்க வேண்டும். இப்படி இருப்பதே சகல உணவு ஒதுக்குதல்களின் மூலஸ்தான மாகவும், அவை வெளிப்படும் இடமாகவும், அடிப்படையாகவும் இருக்கிறது. இத்துடன் நடப்பவை பற்றி ஏன், எப்படி எப்பொழுது என்ற எதுவும் கேளாது மௌனமாகி அல்லாஹ்வின் செயல்கள், செயலற்ற நிலைகள் பற்றி எதுவும் குறை கூறாது இருந்து வரவேண்டும். இதற்கு ஹதீஸில் ஆதாரமுள்ளது. இந்த ஹதீஸ் அதா இப்னு அப்பாஸ் அவர்களிடம் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் அவர்கள் அறிவித்ததாகக் காணப்படுகிறது. இதில் இப்னு அப்பாஸ் அவர்கள் கூறுவதாவது: நபி பெருமானார் (ஸல்) அவர்களின் பின்னால் நான் சவாரி போய்க் கொண்டிருந்தேன். அப்போது அவர்கள் சொன்னார்கள்: "தம்பி, அல்லாஹ்வுக்கு நீ செய்ய வேண்டிய கடமைகள் விஷயத்தில் பேணுதலுடன் நடந்துகொள்; அல்லாஹ் உன்னைக் கவனித்துக் கொள்வான். அல்லாஹ்வுக்குச் செய்யவேண்டிய கடமைகள் விஷயத்தில் பேணுதலுடன் நடந்துகொள்; அப்போது அவனை உன் முன் காண்பாய்" என்று.

ஆகவே, நீ கேட்க வேண்டியதை அவனிடமே கேள். நடக்கவிருப்பதை எல்லாம் எழுதிவிட்ட பேனாவிலும் மை உலர்ந்துவிட்டது. அல் லாஹ் விதிக்காத ஒன்றை உனக்குப் பெற்றுத்தர அவன் அடியார்கள் எவ்வளவுதான் முயன்றாலும் அவர்களால் அது சாத்தியப்படாது. உனக்கு எதிராக அல்லாஹ் விதிக்காத தீங்கொன்றை உனக்கு உண்டாக்க, அவன் அடியார்கள் சகலரும் சேர்ந்து முயன்றாலும் அது சாத்தியப்படாது. ஆகவே, அல்லாஹ்வின் கட்டளைகள் விஷயத்தில் மெய்விஸ்வாசத்தின் அந்தரங்க சுத்தியுடன் நடந்து கொள்ள முடியுமெனின் அவ்விதம் செய்; அவ்விதம் செய்ய இயலாவிடின், நீ வெறுப்பதில் பொறுமையுடனிரு, அதில் அதிக நன்மையிருப்பதை உணர்.

மெய்விஸ்வாசி ஒவ்வொருவனும் ஹதீஸைத் தன் இதயத்தையும், அதன் அக, புற உடையையும், நோக்கையும் பார்க்கும் கண்ணாடியாக ஆக்கிக்கொண்டு சகல செயல்களிலும், அசைவுகளிலும் அதன்படி

நடப்பதையே லட்சியமாக்கிக் கொள்ள வேண்டும். அதன் மூலமே அவன் இம்மையிலும் மறுமையிலும் பாதுகாப்புப் பெற்றவனாகி, அல்லாஹு தஆலாவின் கருணையால் இருலோகங்களிலும் கண் ணியம் பெற முடியும்.

உபதேசம் நாற்பத்து மூன்று

மானிடரிடம் உதவி கேட்பவன், அல்லாஹ்வைப் பற்றிய தன் அறியாமை காரணமாகவும், மெய்விஸ்வாசம் பலமின்மையாலும், சத்தியத்துவம், நிச்சயத்துவம் பற்றிய ஞானமின்மையாலும், பொறுமை யின்மையாலும் அவ்விதம் செய்கிறான். அப்படிக் கேட்காதிருப்பவன் அல்லாஹ்வைப் பற்றிய அதிகமான ஞானத்தாலும், தன் மெய்விஸ்வாசத்தின் யதார்த்த உணர்வின் பலத்தாலும், ஒவ்வொருக் கணமும் மகா பரிசுத்தனான அல்லாஹ்விடம் கொண்ட நாணத்தாலும் அவ்விதம் கேட்காதிருக்கிறான்.

உபதேசம் நாற்பத்து நான்கு

ஆத்ம ஞானம் பெற்றவனின் சகல பிரார்த்தனைகளும் அல் லாஹ்வால் ஏற்கப்படுவதுமில்லை. அவனுக்கு அளிக்கப்பட்ட சகல வாக்குறுதிகளுமே உடனுக்குடன் நிறைவேற்றப்படுவதுமில்லை. ஏனெனில், எதிலும் தான் கேட்பது கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அவன் அழிவுக்கு ஆளாகிவிடக் கூடாதல்லவா! பயமும் நம்பிக்கையும் சேர்ந்தல்லாது மற்றபடி எந்த மெய்ப்பொருள் அறிவு ஞானமோ, மெய்ஞ்ஞானப் படித்தரங்களோ கிடையாது. இவை இரண்டும் ஒரு பறவையின் இறக்கைகளை ஒக்கும்; இவற்றில் ஒன்று இல்லாவிடிலும் பூரணமாகப் பறக்க இயலாது.

ஒவ்வொரு படித்தரத்தையும் பொறுத்தவரை இது உண்மை யாகும். ஆனால், அந்தந்தப் படித்தரத்துக்கு ஏற்பப் பயமும் நம்பிக் கையும் குறைவாகவோ அதிகமாகவோ இருக்கும். இவ்விதம் இறை யருள் ஞானம் பெற்ற ஒருவன் அல்லாஹ்வின் சமீபத்துவத்தை அனுபவிக்கிறான்; அவன் நிலையிலும் அந்தஸ்திலும் அவன் அல்லாஹ்வையன்றி வேறு எதையும் விரும்புவதில்லை; அவனல்லாத வேறு எதன் பக்கமும் இழுக்கப் படாது, வேறு எதனிடமும் திருப்திப் படாது, வேறு எதனாலும் மகிழ்ச்சி அடையாது

இருப்பான். எனவே, தன் பிரார்த்தனை ஏற்கப்படவேண்டும் என்று கேட்பதோ, தனக்குத் தரப்பட்ட வாக்குறுதி நிறைவேற்றப்பட வேண்டும் என்று வேண்டுவதோ அடியான் செல்லும் பாதைக்கு முரணானது; அவன் நிலைமையுடன் ஒவ்வாதது.

இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவதாக, அல்லாஹ் வின் திட்டங்கள் மூலம் ஓர் அடியான் மயக்கத்தாலோ, நிச்சயமான நம்பிக்கையாலோ வழி தவறி, அல்லாஹ்வை நெருங்குவதில் தான் கொள்ள வேண்டிய நல்லொழுக்கத்தின் அளவை மறந்து, அழிவுக்கு ஆளாகிவிடக்கூடாது என்பது. இரண்டாவதாக, எதையாவது ஒன்றை அல்லாஹ்வுக்கு இணைவைப்பதற்கு அது ஒப்பாகிவிடக்கூடாது என்பது. ஏனெனில், நபிமார்களைத் தவிர பாவத்திலிருந்து பூரணமாக விடுபட்டவர்கள் இவ்வுலகில் யாருமில்லை. இதனால்தான் அல்லாஹ் தன் அடியானுக்கு அளிக்கும் வாக்குறுதியை உடனுக்குடன் நிறை வேற்றுவதும், பிரார்த்தனையை ஏற்பதுமில்லை. அப்படி நிறைவேற்ற ஏற்றால் அல்லாஹ்வின் கட்டளைகளுடன் சம்பந்தம் இல்லாத வகையில், தன் இயற்கையால் உந்தப்பட்டு அடியான் எதையாவது கேட்டுவிடலாம். அதனால் இணை வைத்தல் (ஷிர்க்) உண்டாகிவிடும். பலவிதப் படித்தரங்களிலும் பலவிதமான இணைவைத்தலுக்கு இடமுண்டு. ஆனால் பிரார்த்தனைகள் ஒரு குறிப்பிட்ட கட்டளைக்கு இணங்கியவையாய் இருப்பின், அல்லாஹ்வுக்கு ஒருவனை அருகினில் ஆக்கும் தொழுகை, நோன்பு போன்ற கடமைகள், மார்க்கக் கடன்கள் சம்பந்தப்பட்டவைகளாய் இருப்பின், இவற்றில் அல்லாஹ்வின் கட்டளைக்குப் பணிவு காட்டுதல் இருப்பதால் ஏற்கப்பட இடமுண்டு.

உபதேசம் நாற்பத்து ஐந்து

ஜனங்கள் இருவகைப்பட்டவர்கள் என்பதை அறிந்து கொள். ஒரு வகையினர் இம்மைக்குரிய நலன்களால் பாக்கியம் பெற்றவர் களாவர்; மற்றொரு வகையினர் இறைவன் விதித்துள்ள சோதனைகளுக்கு ஆளாகுபவர்கள். இம்மையின் பாக்கியங்கள் வழங்கப்பட்டவர்கள் அதைச் சுகிப்பதில் பாவ மாசுக்கு ஆளாகாமல் இருப்பதில்லை. இவற்றால் கிடைத்த சுக போகங்களில் ஒருவன் திளைக்கும்போது, திடீரென அல்லாஹ்வின்

உத்தரவு உண்டாகி, வியாதிகள், வேதனைகள், சொத்து, உயிர்ச்சேதங்கள், குடும்பத்தினர், பிள்ளைக்குட்டிகள் கஷ்டம் போன்ற துயரங்களாலும், சோதனை களாலும் அவன் பாதிக்கப்படுகிறான். இதனால்தான் சுகமே அனுப விக்காதவன் என்ற நிலைமை அடைகிறான். சுகத்தையும் அதன் இனிமையையும் அவன் மறந்து போகிறான். அவன் செல்வ நிலை நீடித்து, ஆண் பெண் குற்றேவல்காரர்களும் பகைவர்களிடமிருந்து பாதுகாப்பும் கிடைப்பின் தனக்கு ஆபத்து என்பதே கிடையாது என்று அகந்தை கொண்டிருக்கிறான். ஆனால், ஆபத்து வந்துவிட்ட பின் னரோ தனக்கு மகிழ்ச்சி என்பதே இல்லையோ என்று மனம் மகிழ் கிறான். இவையெல்லாம் தன் எஜமானனைப் பற்றிய அறியாமை யாலேயாம்.

தன் எஜமானன் அவன் விரும்பியபடி எதையும் செய்யக் கூடியவன், மாற்றக்கூடியவன், மாறுதல் உண்டாக்கக்கூடிய்வன், இனிமையையும்–கசப்பையும், செல்வத்தையும்–வறுமையையும், உன்னதத்தையும்–அதல பாதாளத்தையும், கண்ணியத்தையும்–கேவலத்தையும், ஜீவனையும்–மரணத்தையும் உண்டாக்குபவன். ஒருவனை முன்னுக்குத் தள்ளுவான், பின்னுக்கும் தள்ளுவான் என்பதை அவன் அறிந்திருந்தால், இம்மையின் சுகபோகங்களிடையே தான் மெத்த சுகமாய் இருப்பதாக அவன் ஒருக்காலும் கருதியே இருக்கமாட்டான்; அவை பற்றிப் பெருமை கொண்டும் இருக்க மாட்டான்; துயரம் வந்தணைந்த சமயத்தே நம்பிக்கை இழந்திருக் கவுமாட்டான்.

இவ்வித–ம் அவன் ஒழுக்கம் தவறி நடந்து கொள்ளக் காரணம் இம்மை பற்றிய அவன் அறியாமை தான். இம்மை என்பது சோதனை கள், கசப்பு, அறியாமை, வருத்தம், இருள் என்பனவற்றால் சோதிக்கப் படுவதற்குரிய இடம்தான் என்பதையும், சோதனையே அதன் பொதுவான நிலவரம், மகிழ்ச்சி அதில் விதிவிலக்கானது என்பதையும் அவன் அறிந்து இருக்கவில்லை. இம்மை என்பது ஒரு கரியபோள மரம் போன்றது; அதன் முதல் ருசி மிகவும் கசப்பானது; ஆனால், கடைசி யில் அது தேன்போல் மதுரமாகி விடுகிறது. முதலில் அதன் கசப்பை ருசி பார்த்தால் அன்றி யாரும் அதன் இனிப்பை அனுபவிக்க முடியாது. அதன் கசப்பில் பொறுமை

காட்டினாலன்றி சோதனைகளில் பொறுமை காட்டுபவன் அதன் பாக்கியங்களைப் பெற அருகதை யுடையவனாகிறான்.

ஓர் உழைப்பாளி தன் நெற்றி வியர்வையை நிலத்தில் சிந்திய பிறகே, தன் உடம்பைக் கசக்கி உழைத்த பின்பே, தன் மனத்தை அலட்டி, இதயத்தைச் சுருங்க வைத்துப் பாடுபட்ட பிறகே, தன்னைப் போன்றதொரு மானிடனுக்குப் பணி செய்து அவன் ஆணவம் மறைந்த பிறகே அவனுக்குரிய சம்பளம் தரப்படுகிறது. இது போல் ஒருவன் இக்கசப்பையெல்லாம் பருகிய பின் அவனுக்கு நல்லுணர்வும், கனிகளும், உடையும், சுகமும், மகிழ்வும் சிறியவை ஆயினுங்கூட அதன் பிறகே கிடைக்கின்றன. இவ்விதம் இம்மை, மேலே கசப்புடன் அடியில் மதுரமான தேன் இருக்கும் ஒரு பாண்டம் போன்றது, இதனால் தேனை உண்ண விரும்புபவன் மேலேயுள்ள கசப்பை அருந்துமுன் கீழேயுள்ள தேனைப் பருக இயலாது.

மகா பரிசுத்தமானான அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்று வதிலும்; அவன் விலக்கியவற்றை விட்டு ஒதுங்குவதிலும், அவன் முன் தன்னைப் பணியவைத்து அவன் விதிப்புக்கு உட்படுவதிலும் ஓர் அடியான் தன் பூரண முயற்சியையும் பயன்படுத்த வேண்டும். இவ்விதம் அவன் அதிலுள்ள கசப்பான பாகத்தை அருந்தியதும், அதன் கனத்தைத் தூக்கிச் சுமந்ததும், தன் கீழான இச்சைகளை எதிர்த்துப் போராடியதும், தன் நோக்கங்களை உதறி எறிந்ததும், இதன் பயனாய் நல்வாழ்வையும், அன்பான கவனத்தையும், சுகத்தையும், கண்ணியத்தையும் அல்லாஹ் அவனுக்கு அருளுகிறான். அல்லாஹ் அவனுடைய பாதுகாவலனாகி ஒரு சிறு குழந்தைக்குப் பாலூட்டுவது போல அவனுக்கு உணவூட்டி, அவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் எந்தச் சிரமமுமில்லாது கவனித்துக்கெள்கிறான். மேலேயுள்ள கசப்பான பகுதியை உண்டுவிட்டவன் கீழேயுள்ள மதுரமான தேனை உண்பதில் இன்பங்காண்பது போன்று இந்த அடியானும் விளங்குவான்.

ஆனால், அல்லாஹ்வின் அருளைப் பெற்றுவிட்ட அடியான் அதனால் மயங்கி, தான் பூரணப் பாதுகாப்பில் இருப்பதாகவும், அல்லாஹ்வின் சோதனையே உண்டாகாது என்றும் எண்ணவோ, அது சதம் என்று நம்பி

அதன்மூலம் நன்றி தெரிவிக்க மறந்துவிடவோ, அதன் கட்டுப்பாடுகளை தளர்த்திக் கொள்ளவோ கூடாது. நபி பெருமான் (ஸல்) அவர்கள், ''இம்மையின் சுகமான சந்தர்ப்பங்கள் முரடானவை; எனவே, நன்றியறிதல் மூலம் அவற்றைக் கட்டுப் படுத்திக் கொள்ளுங்கள்'' என்று அருளியுள்ளார்கள்.

செல்வம் அளிக்கப்பட்டுள்ளதற்கு நன்றி தெரிவிப்பது என்பது, எல்லையில்லாது உதவி புரிபவனும் அதைத் தந்தவனுமான அல்லாஹ் வின் தயாளத்தைப் புகழ்வதும், வாழ்க்கையில் சகலவித நிலைமைகளிலும் தன் அகத்திடமே அதுபற்றிக் கூறுவதும், அவன் தயாளத் தன்மையை உணர்வதுமாகும். ஆனால், அல்லாஹ்வின் தயாளத்தில் தனக்கு ஏதோ பாத்தியதை இருப்பது போல் நினைக்கவோ, அதில் வரம்பு கடந்து நடந்துகொள்ளவோ, அது பற்றிய கட்டளைகளை மீறவோ கூடாது. இதன் பின் ஜக்காத்தையும் மற்றும் தான தருமங்களையும் கொடுக்கும் கடமையை நிறைவேற்றவேண்டும். கஷ்டப்படுபவர்களுக்கும் தேவையானவர்களுக்கும் உதவவேண்டும், உடலிலும் அவயவங்களிலும் சுகம் உண்டாகியிருப்பதற்காக நன்றி தெரிவிப்பது எப்படியெனின் அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுவதில் அவையும் உழைக்கும்படி செய்வதன் மூலமும், பாவகரமான, விலக்கப்பட்ட செயல்களிலிருந்து அவற்றைத் தடுத்துக் கொள்வதன் மூலமுமேயாம்.

இவ்விதமே பாக்கியங்கள் பாழ்படாமல் காப்பாற்றப்பட வேண்டும்: காப்பாற்றி அதன் செடியைப் பண்படுத்தி வளர்க்க வேண்டும்; வளர்த்து அது காய்த்து, அழகிய கனிகள் பழுத்து. மதுரமானவையாய் உண்பதற்கு இனியவையாய், உண்பதால் சுகம் தருபவையாய், உடலை வளர்ப்பவையாய், பல்வேறு செயல்கள் மூலம் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு அடிபணியும், அவன் நினைவில் நிலைபெறச் செய்யும் செயல்கள் மூலம்—அவற்றின்பயன் உடலிலிருந்து வெளிப்படும்படியாய், மறுமையில் அல்லாஹ்வின் கருணையில் அந்த அடியானைப் புகும்படி செய்பவையாய், சுவனப்பதியிலே நபிமார்கள், ஸித்தீகீன்கள், ஷுஹதாக்கள், ஸாலிஹீன்களின் அழகிய கூட்டத்தில் அவன் சேர்ந்திருக்கும்படி செய்பவையாய் இருக்க வேண்டும்.

ஆனால், ஒருவன் இப்படி நடக்காமல், இந்த வாழ்க்கையின் புறத் தோற்றத்தில் மயங்கி, அதன் போகத்தில் திளைத்து, அந்தக் கானல் நீரின் பளபளப்பிலும், மின்னல் போன்ற தோற்றத்திலும் திருப்தி அடைந்து, இவை யாவும் கொடுங்கோடை காலத்துக் காலைக் காற்றின் தன்மையைப் போன்று சதமற்றவை, நல்ல பாம்பின் மேல் தோலைப் போன்று மென்மை ஆனவை என்பதை உணராது. அதனுள் உள்ள விஷத்தையும், ஏமாற்றையும், சூட்சியையும் மறந்து, இவையாவும் தன்னைப் பிடித்துச் சிறைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டவை என்பதை உணராது இருந்து வருவானாயின் அவன் நிராகரிக்கப் படுவான், விரைவில் அழிந்து விடுவான், கேவலமான தரித்திர நிலையை அடைவான், மறுமையில் கொடிய நரக நெருப்பில் கிடந்துழன்று தண்டனையடைவான் என்று தெரிந்து கொள்ளலாம்.

மனிதனுக்கு ஏற்படும் சோதனைகள் பல திறப்பட்டவை, சில சமயங்களில் அவை சட்டத்தை மீறியதற்கும், பாவஞ் செய்ததற்கும் தண்டனையாக ஏற்படுவதுண்டு. வேறு சில சமயங்களில் மனிதனிடமுள்ள குறைகளை அகற்றி, அவன் இயல்பைப் பண்படுத்துவதற்காக உண்டாகின்றன. மற்றும் சில சமயங்களில் ஒருவனுடைய ஆத்மீகத் தரத்தை உயர்த்தவும், இறைவனுடைய நல்ல அருளை முன்னரே பெற்ற நல்லடியார்களின் கூட்டத்தில் உயர்த்தப்படுவதற்கும் சோதனைகள் உண்டாவதுண்டு. இத்தகைய சோதனைகள் அழிப்பதற்காக வருவன வல்ல வாதலின் இவற்றின் இடையிலும் ஆறுதல் தண்காற்றும், அருட்கண்பார்வையும் அவர்கள்மீது படுமாறு அவன் செய்கிறான். இச்சோதனைகள் மூலம் அவர்களைத் தேர்ந்தெடுத்து; அவர்களிடமிருந்து மெய்விஸ்வாசத்தின் யதார்த்த நிலை வெளிப்படச் செய்து இணை வைப்பதையும், கீழான மனத்தின் அகந்தையையும், நயவஞ்சகத்தையும் விட்டு அவர்களை அப்பாலாக்கிப் பலவிதமான இரகசிய ஞானங்களை அவர்கள் அடையுமாறு அருளுகிறான்.

எனவே இத்தகையவர்கள் அகமும் புறமும் தூய்மையானவர்கள் ஆனதும், அவர்கள் இதயங்கள் பரிசுத்தம் அடைந்ததும், தன்னுடைய விசேஷ அருளுக் குரியவர்கள் கூட்டத்தில் அவர்களையும் சேர்க்கிறான்;

இம்மையில் அவர்கள் தம் இதயத்தாலும், மறுமையில் தம் உடல்களாலும் அப்பெரியார்களோடு தொடர்பு கொள்ளும்படி அருள் புரிகிறான். இவ்விதமாகச் சோதனைகள் இணை வைத்தல் எனும் அழுக்கை அகற்றி, ஜனங்களுடனும் இம்மைக்குரிய சாதனங்களுடனும், இச்சைகளுடனும் உள்ள தொடர்புகளை அறுத்தெறிகின்றன. தற்பெருமை, பேராசை, கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்ததற்குப் பிரதியாய்ச் சுவனத்தில் உயர்ந்த பதவிகளையும் நிலைமை களையும் எதிர்பார்ப்பது போன்ற மாசுகளையும் இச்சோதனைகள் உருகச் செய்கின்றன.

தண்டனையாகச் சோதனைகள் ஏற்படுவதன் அறிகுறி என்னவென்றால், அவை ஏற்பட்டதும் பொறுமை இழந்துவிடுவதும், ஜனங்களிடம் அவை பற்றி முறையிடுவதுமாகும். பரிசுத்தப்படுத்துவ தற்கும் பலஹீனங்களை அகற்றுவதற்கும் சோதனைகள் உண்டாவதன் அறிகுறியாவது, பொறுமையை மகிமையுடன் கைக்கொண்டிருத் தலும், நண்பர்களிடமும், அயலகத்தார்களிடமும் எத்துயரையும் வெளிக்காட்டாமையும், கட்டளைகளை நிறைவேற்றுவதிலும் அல்லாஹ் வுக்குக் கீழ்ப்படிவதிலும் கொஞ்சமும் வெறுப்புக் காட்டாமல் இருப்பதுமாகும்.

நிலை உயர்த்தப்படுவதற்காகச் சோதனைகள் உண்டாவதன் அறிகுறியோவெனின் மகாவல்லமையாளனான அல்லாஹ்வின் செயல் குறித்து மகிழ்ச்சியும், மனத்திருப்தியும், நிம்மதியும் கொண்டிருப்பதும், இந்தச் சோதனையில் தன்னை முற்றும் ஈடுபடுத்தி, அது அகலுவதற்கு உரிய காலம் வரும்வரை அதை ஏற்று இருப்பதுமாகும்.

உபதேசம் நாற்பத்து ஆறு

"என்னுடைய நினைவில் ஈடுபட்டிருந்து அதனால் என்னிட மிருந்து எதுவும் கேட்க நேரமில்லாத நிலையில் இருப்பவனுக்கு என்னிடங் கேட்பவர்களுக்கு நான் கொடுப்பவற்றைவிட அதிகமாகக் கொடுக்கிறேன்'' என்று அல்லாஹ் கூறியிருப்பதாக ஹதீஸில் காணப்படுகிறது. இது எதனாலெனின், மெய்விஸ்வாசி ஒருவனைத் தன் நோக்கங்களுக்காக அல்லாஹ் தேர்ந்தெடுக்கும்போது, அவனைப் பல்வேறு ஆத்மீகப் படிகளைக் கடக்கச்செய்து, பலவிதமான

போராட்டங்களாலும் துயரங்களாலும் சோதனை செய்கிறான். செல்வத்தைக் கொடுத்துப்பின் திடீரென அவனை வறியவனாக்கு கிறான். பல்வேறு வழிகளையும் மூடி, அவன் ஜனங்களிடம் கை நீட்டிப் பிச்சை கேட்கும் அளவுக்குக் கொண்டுபோகிறான். பிறகு பிச்சைகேட்காதபடி செய்து, ஜனங்களிடம் கடன் வாங்கிப் பிழைக்கச் செய்கிறான், பின்னர் கடன் வாங்குவதிலிருந்தும் காப்பாற்றி, தன் ஜீவனத்துக்காக உழைத்துண்ண இடம் தருகிறான். அப்போது அவன் நிலை நபி பெருமான்(ஸல்) அவர்கள் உதாரணத்தைப் பின்பற்றி உழைத்து உண்பதாய் இருக்கும்.

பிறகு அவனுக்கு உழைக்கும் வழியும் அடைபட்டு, தெய்வ உதிப்பு மூலம் ஜனங்களிடம் பிச்சை கேட்குமாறு ஏவப்படுகிறான். இது சம்பந்தப்பட்டவனால் மட்டும் அறிந்து கொள்ளப்படும் ஓர் இரகசிய உத்தரவாகும். இந்தப் பிச்சை எடுத்தல் தன்னை வணங்கும் ஒரு வகை வணக்கம் ஆகவும், அதைப் புறக்கணிப்பது பாவம் ஆகவும் அல்லாஹ்வினால் ஆக்கப்படுகிறது. இது அந்த மனிதனின் அகந்தை மறந்து, ஆத்மா உடைந்து போகும்படியான ஆத்மீகப் பயிற்சியாக விளங்குகிறது. அவன் இரப்பது இணைவைத்தலால் அன்று; தெய்வக் கட்டளையால்தான். இதன் பின் அவனை இதைவிட்டுக் காப்பாற்றி ஜனங்களிடம் கடன் வாங்கும்படி கண்டிப்பாக உத்தரவிடுகிறான். முந்திய பிச்சை எடுத்தலைப் போல இதுவும் தப்ப முடியாத ஓர் உத்தரவுதான்.

பிறகு இந்நிலையிலிருந்து அவனை மாற்றி, ஜனங்களிடமிருந்து தனிமையாக்கித் தன்னிடமிருந்து அவன் கேட்பதற்கேற்ப அவனுக்கு உணவு அளித்து வருகிறான். எனவே, அந்த அடியான் எது எதைக் கேட்கிறானோ, அதை மட்டும் அவனுக்குக் கிடைக்கச் செய்கிறான். அவன் மௌனமாய் இருந்தால் பிரார்த்திக்காமல் இருந்தால் அல்லாஹ் எதையும் கொடுப்பதில்லை.

பிறகு நாவினால் எதையும் கேட்பதை விட்டும் அவனை விடு வித்து, இதயத்தால் மட்டும் கேட்கும், அப்படிக் கேட்டதும் கொடுக்கும் நிலைக்குக் கொண்டு வருகிறான். அதனால் இந்நிலையில் அவன் நாவினால் கேட்டால் எதுவும் கிடைப்பதில்லை; ஜனங்களிடம் பிச்சை கேட்டாலும் யாரும் கொடுப்பதில்லை.

இதன்பின் அம்மனிதன் தன்னிடமிருந்தும் பகிரங்கமாகவோ, அந்தரங்கமாகவோ பிச்சை எடுப்பதிலிருந்தும் முற்றும் மறைந்து போகிறான். அப்போது நேர்மையை உண்டாக்கும், மனிதனைச்சீர் திருத்தும் சகலவற்றையும் அவனுக்குக் கிடைக்கச் செய்கிறான். மற்றும் உண்பதிலும் உடுப்பதிலும் மற்றும் உண்டான தேவைகளிலும் சிறந்தவற்றை அவன் கேளாமலும், அது பற்றி சற்றும் எண்ணாமலும் இருக்கும் போதே அவற்றை அவனுக்குக் கொடுக்கிறான். இதன்பின் அவனைத் தன் தோழனாக்குகிறான். "நிச்சயமாக என் தோழனும், பாதுகாவலனும் அல்லாஹ்வே; அவனே இவ்வேதத்தை வெளியிட்டுள் ளான்; நேர்மையாளர்களோடு அவன் தோழமை பூணுகிறான்" (7 :196) என்ற திரு குர்ஆன் வசனத்திற்கேற்ப இந்த தோழமை உண்டாகிறது. என்னிடம் எதுவும் கேட்பவர்களுக்குக் கொடுப்பதைவிட அதிகமாக நான் கொடுக்கிறேன்" என்று அல்லாஹ் கூறியுள்ளதாக ஹதீஸில் காணப்படும் வாசகம் நிரூபணமாகிறது. இது அல்லாஹ்வை நெருங்கும் நிலைமையாகும்; இது சாதாரண ஔலியாக்களுக்கும் அப்தால்களுக்கும் உரியது. இந்நிலையில் அடியானுக்குச் சிருஷ்டி சக்தி தரப்படுகிறது; அவனுக்குத் தேவையானவை அல்லாஹ்வின் உத்தரவால் கிடைக்கின்றன. இது பற்றி அல்லாஹ்வின் வேதம் ஒன்றில் அவன் கூறியுள்ளதாவது; "ஆதமின் மக்களே, நான் தான் அல்லாஹ், என்னையன்றி வணக்கத்துக்குரியது வேறு எதுவும் இல்லை. நான் எந்த ஒரு பொருளையும் 'ஆகுக' என்றதும் உடனே அது உண்டாகிவிடுகிறது. எனக்குக் கீழ்ப்படியுங்கள். அதன் மூலம் நீங்களும் ஒரு பொருளை 'ஆகுக' என்று சொன்னதும் ஆகிவிடும்படியான சக்தியுடையவர்களாக உங்களை நான் ஆக்கி விடுவேன்"

உபதேசம் நாற்பத்து ஏழு

என் கனவில் முதியவர் ஒருவர் தோன்றி, "அல்லாஹ்வின் அடியானை அவனுக்கு அருகில் ஆக்குவது யாது?" என்று வினவினார். நான் சொன்னேன்; "இதற்கு ஓர் ஆரம்பமும் முடிவும் உண்டு, ஆரம்பம் பயபக்தி கொள்ளலும் இறைவனிடம் பரஞ்சாட்டுவதிலும் ஆகும்; அதன் முடிவு அல்லாஹ்விடம் திருப்தி அடைந்தவனாக, அவன் பாதைக்குத்

தன்னை அர்ப்பணித்தவனாக அவனிடமே முற்றும் நம்பிக்கை வைத்தவனாக ஆவது ஆகும்.

உபதேசம் நாற்பத்து எட்டு

மெய்விஸ்வாசியான ஒருவன் முதலில் தன் கட்டாயமான கடமைகளைக் கவனிப்பதே முறையாகும். அதை முடித்தபின் ஸுன்னத்தை அவன் பின்பற்ற வேண்டும். இதிலும் ஒழுங்காக நடந்துகொண்டால்தான் அவனுடைய இஷ்டப் பூர்வமான (நபில்) கடமைகளில் அவன் இறங்கலாம். தன் கட்டாயமான கடமைகளைச் செய்யாத ஒருவன், ஸுன்னத்தானவைகளைச் செய்ய முயல்வது முட்டாள்தனமும் அறிவீனமுமாகும்; கட்டாயமான கடமைகளைச் செய்யாது ஸுன்னத்தையும் நபிலையும் நிறைவேற்றத் துணிவானாயின் அவை ஏற்கப்படாது. அவனும் கண்ணியக் குறைவானவனாக ஆக்கப்படுவான். ஓர் அரசன் தன் பிரஜை ஒருவனைத் தனக்குச் சேவை செய்யும்படி உத்தரவிட்டிருக்க, அந்தப் பிரஜை அவ்விதம் செய்யாது அரசனின் அடியானுக்கு ஒப்பான ஒரு தலைவனுக்குப் பணிவிடை செய்துகொண்டு, அவன் ஆதிக்கத்திலேயே இருந்து விடுவதற்குத்தான் இது ஒப்பாகும். ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்கள், நம் பெருமான் (ஸல்) அவர்கள் சொன்னதாக இவ்விதம் தெரிவித்துள்ளார்கள்: நபிலான தொழுகைகளைத் தொழுது கொண்டு, தன் பர்லான தொழுகையில் பாக்கி போடுபவன், கர்ப்பிணியாக இருக்கும் பெண், தன் பிரசவ காலம் நெருங்கி வருகையில் கருச்சிதைவுக்கு உள்ளாகி விடுவதை ஒத்திருக்கிறான்; அக்கருச் சிதைவால் அப்பெண் கர்ப்பிணியாகவும் இராமல், குழந்தையைப் பெற்ற தாயாகவும் ஆகாமல் போய்விடுவது போல் இவனும் ஆகிவிடுகிறான்."

தன் பர்லான தொழுகையைத் தொழாதவனிடம் இருந்து, அவனுடைய நபில் தொழுகையை அல்லாஹ் ஏற்றுக் கொள்வதில்லை. ஒரு வியாபாரி முதலில் முதலீடு செய்தால்தான் லாபத்தை அடையமுடிவது போலக் கடமையான தொழுகையைத் தொழுதால்தான், இஷ்டமான தொழுகை ஏற்றுக் கொள்ளப்பட்டு அதற்கான பயன் கிட்டும், ஸுன்னத்தை ஒதுக்கி விட்டு, நபில் தொழுகையிலோ, எந்த முறையிலும்

தெளிவாகச் சொல்லப்படாத, வற்புறுத்தப்படாத வேறு தொழுகையிலோ ஈடுபடுபவன் நிலையும் இது தான். எனவே, விலக்கப்பட்டவற்றை விலக்கலும், அல்லாஹ்வோடு எதையும் இணைவையாதிருத்தலும் அவன் திருச்சித்தத்தையும் உத்தரவையும் அலட்சியம் செய்யாதிருத்தலும், ஜனங்களின் குரலுக்குச் செவிசாய்க்காமலும், அவர்கள் இஷ்டத்தைப் பின்பற்றாமலும், அல்லாஹ்வின் கட்டளைகளை விட்டு விலகி ஒதுங்காதிருத்தலும் கட்டாயமான கடமைகளில் சேர்ந்தவையேயாகும். "அல்லாஹ்வுக்கு எதிராகப் பாவஞ் செய்ய வேண்டியதாயிருக்கும் ஒரு விஷயத்தைச் செய்யச் சொல்பவன் யாராயினும், அவன் கட்டளைக்குக் கீழ்ப்படியக் கூடாது'' என்று நபி பெருமான் (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள்.

உபதேசம் நாற்பத்து ஒன்பது

இரவில் விழித்திருந்து வணங்குவதைவிடத் தூக்கத்தை விரும்புபவன் கீழான ஒன்றை விரும்புபவன் ஆவான். அது அவனை இறந்தவர்களின் கூட்டத்தில் சேர்த்து, சகல தொழில்களையும் அலட்சியப் படுத்துபவனாக ஆக்குகிறது. காரணம், தூக்கம் மரணத்தின் சகோதரனாகும். தூக்கம் அல்லாஹ்வுக்கும் புறம்பானது ஆகும். ஏனெனில், அவன் சகல குறைபாடுகளுக்கும் அப்பாற்பட்டவன் அல்லவா! இது போன்றே அமரர்களுக்கும் தூக்கமில்லை; ஏனெனில், பரிசுத்தனான அல்லாஹ்வுக்கு அருகிலேயே அவர்கள் இருந்து வருகிறார்கள். இதுபோன்றே வானுலகில் வசிப்பவர்களுக்கும் தூக்கமென்பது இல்லை; ஏனெனில், அவர்கள் உயர்த்தப்பட்ட, புனிதமான கண்ணியம் பொருந்திய இடத்தில் இருப்பவர்கள்; தூக்கம் அவர்கள் நிலையில் குறையை உண்டாக்கி விடும். இவ்விதம் விழித்திருப்பதில் சகல நன்மையும் இருக்கின்றன; தூங்குவதிலும் வேலை செய்வதில் அலட்சியங் காட்டுவதிலுமே சகல தீமைகளும் உள்ளன. ஏனெனில் அவர்கள் உயர்த்தப்பட்ட புனிதமான கண்ணியம் பொருந்திய இடத்தில் இருப்பவர்கள். தூக்கம் அவர்கள் நிலையில் குறையை உண்டாக்கி விடும். அவ்விதம் விழித்திருப்பதில் சகல நன்மையும் இருக்கின்றன; தூங்குவதிலும் வேலை செய்வதில் அலட்சியங்காட்டுவதிலுமே சகல தீமைகளும் உள்ளன.

ஆகவே, பேராசையால் அதிகம் உண்பவன் மிதமிஞ்சி உண் கிறான். அதிகம் அருந்துகிறான்; அதிகம் தூங்குகிறான்; அந்த அளவுக்கு அதிகமான நற்பண்புகள் அவனை விட்டு அகன்றுவிடு கின்றன. விலக்கப்பட்டதில் ஒரு சிறிதேனும் உண்பவன், ஆகுமானதில் அளவுக்கு மிஞ்சிப் பேராசையுடன் உண்பவனை ஒப்பான்; ஏனெனில், விலக்கப்பட்டவை மெய் விஸ்வாசத்தைக் குழப்பி இருளடையச் செய்கின்றன. மெய்விஸ்வாசம் இருண்டதும் தொழுகையுமில்லை. வணக்கமுமில்லை. அந்தரங்கசுத்தியுமில்லை. அல்லாஹ்வின் உத்தரவு கொண்டு ஆகுமானவற்றை அமிழ்தமாக உண்பவன், தொழுகையின் மகிழ்ச்சியில் சிறிதளவே உண்டவனாவான். இதனால், ஆகுமானது ஓர் ஒளியுடன் சேர்ந்த ஒளியாய் இருக்கிறது; விலக்கப்பட்டது. இருளுடன் சேர்ந்த இருளாய் இருக்கிறது; அதில் எந்த நன்மையுமில்லை. எனினும், ஆகுமானதைப் பேராசையுடன், அல்லாஹ்வின் உத்தரவின்றி உண்பது ஒருவகையில் விலக்கப்பட்டதை உண்பதை ஒக்கும்; அதனால் தூக்கமே உண்டாகும்.

உபதேசம் ஐம்பது

ஒன்று நீ மகா பரிசுத்தமான அல்லாஹ்வின் அருகில் இல்லாமல் இருக்கிறாய்; அல்லது, அவனுக்கு அருகில் உள்ளாய். உன் நிலைமை இவ்விரண்டில் ஒன்றாகத்தான் இருக்க முடியும்.

நீ அவனை விட்டு விலகியிருப்பின், நீ எப்படிச் சோம்பியிருக்க முடியும்! உன் பெரும் பங்கையும் பாக்கியத்தையும், நிலையான கண்ணியத்தையும், பாதுகாப்பையும், இம்மை மறுமைகளின் தேவைகளையும் நீ அடைவதெப்படி? உடனே எழு! உன் ஈரிறக்கைகளாலும் விரைந்து பறந்து அவனை நோக்கிச் செல்; இந்த இறக்கைகளுள் ஒன்று சுகங்களையும், விலக்கப்பட்ட இச்சைகளையும், ஆகுமானவைகளையும் கூடத்துறப்பதாகும். மற்ற இறக்கை வருத்தத்தையும் சங்கடமானவற்றையும் சகித்துக் கொள்ளலும், கஷ்டமான வேலைகளில் ஈடுபடலும், ஜனங்களை விட்டும், இம்மை மறுமையின் இச்சைகளை விட்டும் விலகலும், அதன் மூலம் அவன் சந்நிதானத்தை நெருங்குவதில் வெற்றி அடைதலும் ஆகும். இவ்விரண்டு இறக்கைகளும் இருந்து பறந்தால் நீ

நாடியதை எய்தலாம். உன் நிலை உயர்த்தப்பட்டுக் கண்ணியப் படுத்தப்படுவாய். அவன் பரிவால் கண்ணியப் படுத்தப்பட்டவர்களின் கூட்டத்தில், அவன் அன்பால் ஈர்க்கப்பட்டவர்களின் கூட்டத்தில் அவன் கருணையையும் அருளையும் பெற்றவர்களோடு நீ சேர்ந்திருந்தால், சிறந்த ஒழுக்கத்தைக் கடைப்பிடி; அதனால் நீ உன் கடமையை மறக்கவும் உன் அசலான அகந்தைக்கு ஆளாகவும், அறியாமையிலும் அவசரத்திலும் மூழ்கவும் இடம் உண்டாகிவிடலாம். ''மனிதன் அதைச் சுமந்தான்; நிச்சயமாக அவன் அவசரக்காரனும், அறியாமையுடையவனும் ஆவான்'' என்றும், ''மனிதன் அவசரக்காரனாய் இருக்கிறான்'' என்றும் திருகுர்ஆனில் கூறப்பட்டுள்ளது.

ஜனங்களிலும், இச்சைகளிலும், இஷ்டப்பூர்வமானவற்றிலும், முயற்சியிலும் நீ கைவிட்டவைகளின் பக்கம் மனம் விரும்பாதபடியும், உன்னைக் காத்துக்கொள்; பொறுமை இழக்காதபடியும், துயரம் வருகையில் அல்லாஹ்விடம் கொண்டிருந்த மனப்பொருத்தம் மாறுபடாமலும் விழிப்புடன் இரு. பந்து அடிப்பவனின் முன் அவனால் அடிக்கப்பட்டுச் சுழல்வதற்காகக் கிடக்கும் பந்தைப் போலும், குளிப்பாட்டுபவர் கையில் கிடக்கும் மையித்தைப் போலும், தாயின் மடியில் கிடந்து பாலருந்தும் குழந்தையைப் போலும் அவன் முன் நீயும் கிடந்து கொள். அவனல்லாதவற்றின் விஷயத்தில் குருடாகிவிடு. அவனையன்றி வேறு எதையும்—இருப்பதையோ, கேடானதையோ நன்மை ஆனதையோ, நன்கொடையையோ, நன்கொடை நிறுத்தப்படுவதையோ எதையும் நீ காணக்கூடாது. துயரமும் கஷ்டமும் வருத்துகையில் ஜனங்களையும் உலக சம்பத்துகளையும், அல்லாஹு ஸுப்ஹானஹு உன்னை அடிக்கப் பயன்படுத்தும் சவுக்காகக் கருது; நீ மகிழ்வுடனும், சுகத்துடனும், நன்கொடைகள் பெற்றுச் சுகித் திருக்கையில் அவற்றை உனக்கு ஊட்டும் அல்லாஹ்வின் திருக்கரங்களெனக் கருது.

உபதேசம் ஐம்பத்து ஒன்று

பக்திமான் தன் பங்காக இருமுறை வெகுமானம் அடைகிறான். முதலாவதாக அவன் இவ்வுலகைத் துறந்து, பின் தன் ஆசையால், அல்லது தன் கீழான மனத்தின் தூண்டுதலால் மீண்டும் அதன் பக்கம் திரும்பாது.

அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுவதற்கான அளவு மட்டுமே அதன் பக்கல் திரும்பி இருப்பதற்குத் தேவையான சம்மானம் தரப்படுகிறது. அவன் தன் கீழான மனத்துடன் கொண்டுள்ள பகைமையும், ஆசைகளிடம் கொண்டுள்ள எதிர்ப்பும் நிலையானதும், சத்தியத்தை உய்த்துணர்பவர்களில், ஆண்டவனின் நேயல்களில் அவனும் ஒருவனாகக் கருதப்படுகிறான். ஆரிபீன்கள், அப்தால்களின் கூட்டத்தில் சேர்க்கப்படுகிறான். அப்போதே அவன் இவ்வுலகின் பக்கம் திரும்பி அதனுடன் தொடர்பு கொள்ளும்படி உத்தரவு இடப்படுகிறது. ஏனெனில், அப்போது அவனுக்கு அதில் ஒரு பங்குள்ளது; அதை அவன் ஒதுக்கிவிட முடியாது; அது மற்ற யாருக்காகவும் ஒதுக்கப்பட்டதும் அன்று, அதை ஒதுக்கி எழுதிய பேனாவின் மையும் உலர்ந்து விட்டது; கட்டளையைப் பூரணமாய் நிறைவேற்றிய பின்னர்; அவன் இம்மையில் தனக்கு உரிய பங்கை ஏற்கிறான்; அல்லது அல்லாஹ்வின் ஞானம் பற்றிய தகவல் கிடைத்த பிறகு அவன் உண்டாக்கிய விதிவசத்தின் கருவியாய் விளங்கு வதற்காக இவ்வுலகுடன் தொடர்பு கொள்கிறான்; ஆனால் அதில் அவன் மூழ்கிக் கொள்வதில்லை; அவன் எந்நோக்கமும், ஆசையும், முயற்சியும் செய்வதில்லை, இவற்றுக்காக இரண்டாம் தடவை அவனுக்கு வெகுமானம் அளிக்கப்படுகிறது. இவற்றையெல்லாம் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தே அவன் செய்வதாலும், அல்லாஹ்வின் செயலுக்கு இணங்கிய வகையில் செய்ததாலும், இரண்டாம் தடவை வெகுமானம் கிட்டுகிறது.

மிகவும் உயர்ந்த நிலையை அடைந்துவிட்ட ஒருவருக்கு அப்தால் கள், ஆரிபீன்கள் கூட்டத்தில் இடம் பெற்று விட்ட ஒருவருக்கு— அல்லாஹ்வால் ஏற்றுக் கொள்ளப்பட்டவராகிவிட்ட ஒருவருக்கு, ஜனங்களிடம் இருந்தும், தன் கீழான மனத்திடமிருந்தும், ஆசைகள், நோக்கங்கள், சுகங்கள், இச்சைகள், தம் செயல்களுக்காக சம்மானத்தை எதிர்பார்த்தல் முதலிய யாவிடம் இருந்தும் மறைந்து விட்ட ஒருவருக்கு— தம் சகல வணக்கங்களிலும், பணிவிலும் அல்லாஹ்வின் செயல்களிலும், அவன் கருணையையும், ஆசியையும், ஆதரவையும் ஆஸ்வாஸ உதவிகளையும், காணும் ஒருவருக்கு—தாம் அல்லாஹ்வின் பணிவான அடியான் அன்றி வேறல்ல, எஜமானனுக்கு எதிராய் அடியானுக்கு எந்த உரிமையுமில்லை, தம் உடலும், அசைவுகளும், அயர்வுகளும் முயற்சிகளும்,

எஜமானனுடையவையே என்று எண்ணும் ஒருவருக்கு, அவர் வெகுமதிக்காக ஏதும் செய்யாதிருக்கையில், தம் செயல்களுக்காக வெகுமானம் எதையும் கேட்காமலிருக்கையில் எச்செயலும் தம்மால் நடக்கவில்லை தாம் கவைக்குதவாத ஜனங்களுள் ஒருவர், செயல்களைப் பொறுத்தவரை தாம் தரித்திரர்களுள் தரித்திரர் என்று எண்ணும் நிலைமையில் அவருக்குச் சம்மானம் தருவது எப்படி என்று கேட்கலாம். அவர் தன் கீழான மனத்தின் சொந்த விவகாரங்களில் கையை உள்ளுக் கிழுத்துக் கொண்டு, மறுமைக்குரிய சுகங்களையும் கேட்காமலும், அதை அனுபவிக்காமலும், அதனால் வரும் சங்கடம் எதையும் அகற்றாமலும் இருக்கும் நிலையில், அல்லாஹ் அவர்மீது தன் அருளைப் பொழிந்து தன் அன்பாலும், பரிவான பாதுகாவலாலும், கருணையாலும் உணவூட்டு கிறான். இதனால் அவர் தாயின் மடியில் கிடந்து பாலுண்ணும் சிசுவைப் போல் ஆகி, அல்லாஹ்வின் அருள் நிறைந்த பாதுகாப்புக்கும், அவனால் அவர் பெற்றோர் மூலம் தரப்படும் உணவுக்கும் பாத்திரம் ஆகிறார்.

அல்லாஹ், அவரிடமிருந்து, அவருடைய சொந்த விஷயங்களி லுள்ள அக்கறையை அகற்றியதும், ஜனங்களின் இதயங்கள் அவர் பக்கம் திரும்புமாறு செய்து, அந்த இதயங்களில் கருணையையும், பரிவையும் புகுத்தி, யாவரும் அவர் மீது பரிவு காட்டி, பற்றுதல் கொள்ளும்படி அவருக்கு நலன் தேடுகிறான். இவ்விதம் சகலமும் அல்லாஹ்வையன்றி, அவன் உத்தரவின்றி, அவன் செயலுக்கு பதிலாகவன்றி, அசையாதவை ஆகின்றன. அல்லாஹ்வின் அருள், இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு ஊட்டந்தந்து, சகல கஷ்டங்களையும் விட்டு அவரை விலக்கி உதவுகிறது. இதனால் தான், "நிச்சயமாகத் திரு குர்ஆனை இறக்கிய அல்லாஹ்வே என் நேசன்; அவன் நல்லவர்களுடன் நேசம் கொள்கிறான்" என்ற நபி (ஸல்) அவர்களின் வாக்கும் எழுந்துள்ளது.

உபதேசம் ஐம்பத்து இரண்டு

மெய்விஸ்வாசிகளின் நேயர்களாகவும், தன்னோடு நேச உறவு பூண்டுள்ளவர்களாகவும், ஆத்ம ஞானத்தைத் தம் உடைமையாக்கிக் கொண்டவர்களாகவும் உள்ள ஒரு கூட்டத்தினரை அல்லாஹ் சோதிக் கிறான். இதன் மூலம் அவர்கள் பிரார்த்தனையுடன் தன் பக்கம்

திரும்பவேண்டும் என்று அவன் விரும்புகிறான். அவர்களிடமிருந்து பிரார்த்தனையை ஏற்பதில் அவனுக்கு பிரியம் அதிகம். அவர்கள் பிரார்த்தனை செய்கையில் அவன் மகிழ்ச்சியுடன் அதை ஏற்கிறான்; தயாளத்துக்கும், உதாரணத்துக்கும் உரிய பங்கை அளிக்கிறான். ஏனெனில், மெய்விஸ்வாசி பிரார்த்திக்கும்போது இவை இரண்டும் அல்லாஹுத் தஆலாவிடம் அதை ஏற்குமாறு கேட்கின்றன. சில சமயங்களில் அது ஏற்கப்பட்ட பின்னும் உடனடியாகப் பிரார்த்தனை ஏற்கப்படுவதில்லை. அதற்குரிய காலம் வரட்டும் என்று தள்ளிவைக் கப்படுகிறது. எனவே துயரம் நேரும்போது அடியான் நல்லொழுக் கத்துடன் நடந்து, கட்டளைகளை மறைவாகவோ, பகிரங்கமாகவோ தான் புறக்கணித்த அல்லது விலக்கப்பட்டவற்றைச் செய்த பாவங் களைச் சிந்தனை செய்து பார்த்துத் தெய்வ விதிப்பின் உத்தரவைக் குறை கூறியதுண்டா என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். இத்தகைய பாவங்களால்தான் இத்தகைய சோதனைகள் ஏற்படுவது உண்டு. எனவே, இத்துயர் நீங்கிவிட்டால் சரி; இல்லையேல் தொடர்ந்து மன்றாடி, பணிவுகாட்டி, மன்னிப்புக் கேட்டு, விடாது முறையிட்டு வரவேண்டும் விடாது முறையிட்டு பிரார்த்திப்பதற்காகவே அத்துயரம் நேர்ந்தாலும் நேர்ந்திருக்கலாம். தன் பிரார்த்தனை ஏற்கப்படாது காலதாமதம் நேர்வதற்காக ஒருக்காலும் அல்லாஹ்வைக் குறைகூற மட்டும் கூடாது.

உபதேசம் ஐம்பத்து மூன்று

அல்லாஹ்வின் கட்டளை விஷயத்தில் மனப் பொருத்தம் காட்டவோ, அவன் செயலில் மூழ்கிவிடும் திறமை வளரவோ அவனிடம் முறையிடு. இதன் மூலம் பெரும் சுகமும், இம்மையிலேயே உயரிய அந்தஸ்தும் கிடைக்கும். மெய்விஸ்வாசியான அடிமைக்கு அல்லாஹ்வின் அன்பைப் பெறும் மார்க்கமாகவும், அல்லாஹ்வின் பெரிய வாயிலாகவும் இது விளங்குகிறது. எனவே, அல்லாஹ், தான் நேசிப்பவர்களை இம்மையிலும் மறுமையிலும் கடுந் தண்டனைக்கு உள்ளாக்குவதில்லை. இவ்விரண்டு நற்பண்புகளாலுமே அல்லாஹ்வுடன் தொடர்புகளுக்காக முயற்சிகளிலும், உனக்காக ஒதுக்கப்படாத, அல்லது ஒதுக்கப்பட்ட உணவுக்காக முயற்சிப்பதிலும் மூழ்கிவிட வேண்டாம். உனக்காக ஒதுக்கப்படாத

உணவை அடையப் பிரயாசைப் படுவது முட்டாள்தனமும், அறியாமையும், மௌடீகமும் ஆகும்; அது தண்டனைகளுக்கெல்லாம் மகா பெரியதும் ஆகும். ''தெய்வ விதிப்பால் ஒதுக்கப்படாததற்காக முயல்வது தண்டனைகளுள் எல்லாம் மகா பெரியதாகும்'' என்று கூறப்பட்டு உள்ளதல்லவா!

அது உனக்காக ஒதுக்கப்பட்டிருப்பினும் அதற்காக முயன்றால், அதே நினைவாய் இருந்தால் சத்தியத்திலும், விஸ்வாசத்திலும், அன்பிலும் பிளவுண்டவனாயும், பேராசைக்காரனாயும் ஆகிவிடுவாய்; அல்லாஹ் அல்லாத எதன் விஷயத்திலும் மூழ்கிவிடுதல் அவனுக்கு இணைவைத்தலான செயலாகும். உலக இன்பத்துக்காகவே முற்றும் முயல்பவன் அல்லாஹ்விடம் கொள்ளும் நேசமும் அன்பும் மனப்பூர்வமானவையாய் இருக்க முடியாது. எனவே, அல்லாஹ்வை அல்லாததை அவனிடம் நாடுபவன் பொய்யனாவான்.

இதுபோல் தன் செயலுக்குப் பிரதி பயனை எதிர் பார்ப்பவனும் அந்தரங்க சுத்தியற்றவன். 'ரூபூபிய்யா' (பிரபஞ்சத்தையே நிர்வகித்து ஊட்டி வளர்க்கும் அல்லாஹ்வின் குணங்கள்) தனக்கு உரிய அளவுக்கு உண்டாக வேண்டும் என்று எண்ணி அல்லாஹ்வுக்குப் பணிந்து சேவை செய்பவனே அந்தரங்க சுத்தியுள்ளவனாவான். இத்தகையவன், இறைவனின் எஜமானத்துவத்தையும் தகுதியையும் அறிந்தவனாய், நற்செயல்கள் புரிவதும், அவனுக்குப் பணிவதும் அவசியம் என்பதை உணர்ந்தவனாய், தன் சகல அசைவுகளுடனும், நிச்சலன நிலைகளுடனும், சகல முயற்சிகள் போராட்டங்களுடனும் தன் எஜமானனுக்கே உரியவன் என்பதை உணர்ந்தவனாய் அவனுக்குப் பணிந்து சேவை செய்து வருகிறான். இவன் வேறு எவ்விதம் இருக்க முடியும்? நாம் ஏற்கனவே வேறோர் இடத்தில் கூறியுள்ளபடி அவனுக்குப் பணி செய்யும் சகல செயல்களும், அல்லாஹ்வின் ஆசியாகவும் அவன் தன் அடியானுக்குத் தரும் சலுகையாகவும் விளங்குகின்றன. ஏனெனில் இவற்றைச் செய்யத் தன் அடியானுக்குச் சக்தி அளித்து அதை முடிக்கச் செய்பவன் அவனே அன்றோ!

எனவே, அவனுக்கு நன்றி தெரிவிப்பதில் சுறு சுறுப்புக் காட்டுதல் அச்செயல்களுக்காகப் பிரதி பிரயோஜனத்தையும் வெகுமதிகளையும் எதிர் பார்ப்பதைவிட மேலானதாகும்.

இவ்வுலகில் பெரும்பாலான மக்கள் பணமும் பொருளும் பெருகப் பெருக, சுகபோகங்கள் அதிகரிக்க அதிகரிக்க, தடையின்றிச் செல்வம் வந்துகுவியக் குவியத் தங்கள் இறைவன் மீது கசப்புக் கொண்டவர்களாய், தமக்குத்தரப்படாத சுகங்களுக்காக நன்றி கெட்டவர்களாய் நடந்து கொள்வதைக் காணும் நீ, இம்மையின் சுகபோகங்களுக்காக எங்ஙனம் முயல முடியும்? இத்தகையவர்கள் தங்களிட முள்ள செல்வம் சிறியதென்றும், மிகவும் குறைவானதென்றும், பிறருக்குரிய இம்மைப் பொருள்களே பெரியவை, அழகானவை என்றும் அவை தமக்குரியவையல்ல எனத் தெரிந்தும் அவற்றை எப்படியும் அடைய வேண்டும் என்று முயற்சி செய்பவர்களாக அல்லவா இருக்கிறார்கள்! இதில் அவர்கள் வாழ்நாளே வீணாகிறது; அவர்கள் சக்தியும் விரயமாகிறது; அவர்கள் முதுமை அடைகின்றனர்; அவர்கள் சொத்து தொலைகிறது; உடல் தளர்கிறது; நெற்றியிலே வியர்வை சொட்டுகிறது. அவர்கள் வாழ்க்கைப் பட்டியலே அவர் செய்த பாவங்களாலும், பிறர் உடைமைகளைப் பறிக்க முயன்ற பெருங் குற்றங்களாலும், அல்லாஹ்வின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமையாலும் இரண்டு இருக்கிறது. இதனால் நாடியவை கைகூடாது, இம்மையும் மறுமையையும் இழந்தவர்களால், தங்களுக்குத் தரப்பட்டவைகளுக்காகத் தங்கள் இறைவனுக்கு நன்றி செலுத்தாத காரணத்தால் அவன் உதவியை இழந்தவர்களாய் இவ்வுலகை விட்டு மறைகின்றனர். பிறர் உடைமையால் பங்கு பெற முயன்றது முடியாது போய், இம்மை மறுமை வாழ்வும் நஷ்டம் ஆகின்றன. எனவே, அவர்கள் ஜனங்களில் மிகவும் கடையர்களாகவும், அறிவிலிகளாகவும் கீழ்த்தரமானவர்களாயும் ஆகிவிடுகின்றனர்.

தெய்வ விதிப்பின் உத்தரவை மனப்பொருத்தத்தோடு ஏற்று, அவன் நன்கொடையில் திருப்தியுற்று, சிறந்த ஒழுக்கத்துடன் அவனுக்குக் கீழ்ப்படிந்து நடந்து வந்திருந்தால், இம்மையில் அவர்களுக்குரிய பாக்கியங்களின் பங்கு அவர்கள் முயலாதபடியே அவர்களை

வந்தடைந்திருக்கும். அல்லாஹு ஸுப்ஹானஹுவின் அருகே அடைந்து, விரும்பியவைகளைப் பெற்று இருக்கலாம். அவன் கட்டளையில் திருப்தி கொண்டு அவன் திருச்சித்தத்தில் ஐக்கியமாகி, தொழுகையில் ஈடுபட்டு, அவன் விரும்பியதையும் நாடியதையும் செய்து முடிக்கும் பலத்தையும், ஆத்மீக ஆரோக்கியப் பாதுகாவலையும் அடைந்தவர்கள் கூட்டத்தில் ரஹ்மான் எம்மையும் உன்னையும் சேர்த்து அருள்வானாக!

உபதேசம் ஐம்பத்து நான்கு

மறுமையை விரும்புபவன் இம்மை விஷயத்தில் அக்கறையற்ற வனாயும், அல்லாஹ்வை விரும்புபவன் மறுமை விஷயத்திலும் அக்கறையற்றவனாயும் இருக்க வேண்டும். இவ்விதம் அவன் மறுமைக்காக இம்மை வாழ்வை ஒதுக்க வேண்டும்; அல்லாஹ்வுக்காக மறுமை வாழ்வை ஒதுக்க வேண்டும். இம்மைக்குரியவற்றில் எதன் மீதாவது அவன் இதயத்தில் ஆசை இருக்கும் வரை, அதன் சுவைகளில் எதிலேனும் நாட்டமிருக்கும் வரை, உண்பது, குடிப்பது, உடுப்பது, மணப்பது, வசிப்பது, வாகனங்களில் ஏறுவது, அதிகாரம், ஆட்சி முதலியவற்றின் சுகபோகங்களில் பற்றுக் கொண்டு இருக்கும்வரை, ஐங்காலத் தொழுகைக்கும், ஹதீஸ் சொல்வதற்கும், திரு குர்ஆனை உரிய உச்சரிப்புக்களோடு ஓதுவதற்குப் பதிலாகப் பல்வேறு வகைக் கல்விகளையும் சட்ட ஞானங்களையும் கற்க முயல்வதிலும் ஈடுபட்டி ருக்கும்வரை, தன் தரித்திரம் ஒழிய வேண்டும், வளம் உண்டாக வேண்டும், துயரம் அகல வேண்டும், சுகம் வரவேண்டும், சகல வற்றிலும் சங்கடங்கள் அகன்று நன்மைகள் உண்டாக வேண்டும் என்ற ஆவல் இருக்கும் வரை அவன் நிச்சயமாகப் பக்தி உள்ளம் படைத்தவனே அல்லன். இவை ஒவ்வொன்றிலும் மனிதனின் கீழான மனத்துக்கு ருசியும் இன்பமும், உடல் போகத்துக்கு இணைவும், மனத்திற்குச் சுகமும் உள்ளன. இவை இம்மைக்குரியவை. இவற்றிலேயே ஈடுபட்டு, நிம்மதியும், திருப்தியும் அடைய மனம் எண்ணும்.

ஆனால், மனத்தகத்திலிருந்து இவை சகலவற்றையும் வெளிப் படுத்தி, இவற்றை அகற்றிக் கொள்ளத் தன்னைத் தயாராக்கிக் கொண்டு, இவற்றை அழித்து ஒழிப்பதிலும் தரித்திரத்திலும் இன்பங் கண்டு, ஒரு

பேரீச்சங்கனியை வாயில் வைத்துச் சுவைக்கும் ஆசை கூட இல்லாதுபோய் இம்மையில் தனக்கு எதுவுமே தேவையில்லை என்ற நிலைமையை எய்தவேண்டும். இதில் வெற்றியடைந்து மனம் சம்பூரணமாகச் சுத்தமானதும் சகல துயரமும் கவலையும் மனத்தை விட்டு அகலும்; அல்லாஹ்வுடன் நேசமும் நல்வாழ்வும் சுகமும் உண்டாகும். இதுபற்றியே நபிபெருமான்(ஸல்) அவர்கள், ''இம்மையைப் பற்றிய அக்கறையற்று இருத்தல், மனத்திற்கும் உடலுக்கும் மகிழ்ச்சி யைத் தருகிறது'' என்று அருளியுள்ளார்கள். ஆனால் அவன் இதயத் தில் இம்மைக்குரிய கவர்ச்சி ஏதேனும் ஏற்பட்டால், துயரங்களும், துக்கங்களும், அச்சமும் அங்கே நிரந்தரமாய்க் குடிகொள்ளும்; அவன் கீழான நிலையை அடைவான்; அல்லாஹ்விடமிருந்தும் கனமாகத் திரையிடப்படுவான். எனவே இம்மையின் பற்று முற்றும் அகன்று, சகல தொடர்புகளும் துண்டிக்கப்பட்டாலன்றி இவை யாவும் அகற்றப் படமாட்டா.

அதன்பின் மறுமையின் விஷயத்தில் அக்கறை அற்றவனாகி, உயர்ந்த படித்தரங்களையும், பதவிகளையும், அழகிய கன்னியரையும், வீடு, மாளிகை, உயர்ந்த ஆடை, ஆபரணங்களையும், வாகன வசதிகளையும், உயர்ந்த உணவு பானம், மற்றும் மெய்விஸ்வாசிகளான தன் அடியார்களுக்காக அல்லாஹ் வைத்துள்ளவை அனைத்தையும் விரும்பாது ஒதுக்க வேண்டும்.

தன் செயல்களுக்காக இறைவனிடமிருந்து இம்மையிலும் மறுமையிலும் எந்தப் பிரதி உபகாரத்தையும், சம்மானத்தையும் ஒருக் காலும் எதிர்பார்க்கக் கூடாது; இதன் பின்னரே தன் கணக்கை அல்லாஹ் அவனுடைய கருணையும், பரிவும் கொண்டு நோக்குவதைக் காண்பான். எனவே, அல்லாஹ் அவனைத் தன் அருகில் ஈர்த்துத் தன் பரிவைச் சொரிவான்; பலவிதமான பரிவுகள் மூலமும் நல்லுதவிகள் மூலமும் அவன் தன்னை அறியுமாறு செய்வான், அவன் தன் நபிமார்கள், ரஸூல்மார்கள், நேயர்கள், சத்தியசீலர்கள், தன் பாதையில் வீர மரணம் அடைந்தவர்கள் விஷயத்தில் இவ்விதமே நடந்து வந்துள்ளான். எனவே, அடியான் தன் வாழ்நாள் முழுவதும் தினே தினே அபிவிருத்தி அடைந்து வருகிறான். அதன் பின் அவன் மறுமைக்கு மாற்றப்பட்டு, ''எந்தக் கண்களும்

கண்டிராத, எந்தக் காதும் கேட்டிராத, எந்த மானிட மனத்திலும் பட்டிராதவற்றை'' –சகல அறிவையும் கடந்த, எந்த விளக்கமும் பூரணமாக்க இயலாத நிலையை அனுபவிக்குமாறு செய்யப்படுகிறான்.

உபதேசம் ஐம்பத்து ஐந்து

வாழ்க்கையின் சுகபோகங்கள் மும்முறை ஒதுக்கப்படுகின்றன. ஆரம்பத்தில் அல்லாஹ்வின் அடியான் தன் அறியாமை இருளில் மனம் போன போக்கில் போய்விடுகிறான்; பல்வேறு சந்தர்ப்பங்களிலும், தன் இறைவனுக்குச் சேவை செய்வது எப்படி என்ற மனப்பான்மையே இல்லாது, தன்னைக் கட்டுப்படுத்த மார்க்கக் கடிவாளமும் எதுவும் இல்லாது, அவன் உத்தரவில் வரம்பு மீறாமல் இருக்கக் கூடிய நிதான மும் இல்லாது, தன் இயற்கையான தூண்டுதல்களின்படியும் தாராளமாய் நடந்து கொள்கிறான். அவன் இப்படியிருக்கும்போது அல்லாஹ் அவன்மீது கருணைக் கண் கொண்டு நோக்குகிறான். அவனைக் கண்டிக்க ஜனங்களிலிருந்து தன் அடியாரும் நேர்மை யானவருமான ஒருவரை அனுப்புகிறான்; அவன் இதயத்திலும் அவனைக் கண்டிக்கும் ஒரு நிலையை உண்டாக்குகிறான். இவ்விரண்டு கண்டனங்களும் அவன் கீழான மனத்தின் மீதும், இயற்கையின்மீதும் வெற்றி கொள்கின்றன. அவை அவன் மனத்தில் எதிரொலிக்கின்றன. அப்போது, தன் இயல்பெனும் வாகனத்தின்மீது அவன் சவாரி செய்வது, சத்தியத்தை அவன் எதிர்ப்பது போன்ற அவனுள் உள்ள குறைபாடுகள் யாவும் அவனுக்குத் தெளிவுபடுகின்றன. இதனால் அவன் தன் நடவடிக்கைகளிலெல்லாம் அல்லாஹ்வின் சட்டத்தின் பக்கல் திரும்புகிறான்.

இவ்விதம் அல்லாஹ்வின் அடியான் அல்லாஹ்வின் சட்டப்படி நடக்கும் முஸ்லிமாகித் தன் இயல்பில் இருந்து மறைந்து உலகின் விலக்கப்பட்ட பொருள்களையும் ஐயத்துக்கு இடம்பாடுள்ளவற்றையும், ஜனங்களின் உதவியையும் ஒதுக்கி விடுவான். உண்பது, உடுப்பது, மணப்பது, வசிப்பது, மற்றுமுண்டான தன் விவகாரங்கள் சகலவற்றிலும் உண்மையாக அனுமதிக்கப்பட்ட, ஆகுமானவற்றை ஏற்பான். தேகசுகத்தின் அடிப்படையை பாதுகாப்பதற்கும், அல்லாஹ்வுக்குப் பணியப்

பலம் பெறுவதற்கும், அதன் மூலம் தனக்கு ஒதுக்கப்பட்ட பங்கை பெறுவதற்கும் இது அவசியமானதாய் இருக்கிறது. இம்மைக்குரிய சாதனங்கள் கிடைத்து அதன் அனுபவம் பெறும் வரை அதை விட்டு விலகுவதற்கில்லை. தன் வாழ்க்கையின் சகல நிலைமைகளிலும் அனுமதிக்கப்பட்ட, ஆகுமான பொருள்கள் என்ற வாகனாதிகளிலேயே பிரயாணஞ் செய்கிறான். அதன் மூலம் (விலாயத் எனும்) தெய்வ நேயத்தின் உச்சத்தையும், சத்தியசீலர்கள் வீரமரணம் எய்தியவர்களின் கூட்டத்தையும் அடைகிறான். அல்லாஹ்வின் அனுமதி கொண்டு உண்கிறான்.

எனவே, உன் கீழான மனத்தை உதறிவிட்டு வா; நீ சிருஷ்டியா ளனை நாடினால் உன் சுகபோகங்களையும் சிருஷ்டியையும் ஒதுக்கிவிடு; இம்மையுடையவும் மறுமையுடையவும் பாதரட்சைகளை புறக்கணித்து விடு; இனி சிருஷ்டிக்கப்படப் போகும் சகல ஜீவியங்களையும், பொருட்களையும் விட்டும், ஆசைகளை விட்டும் வெளியாகு. யாவற்றிலிருந்தும் மறைந்துபோ! ஏகத்துவம் மனத்தில் நிற்க, இணைவைத்தலை ஒதுக்கிவிட்டதற்கும் நோக்கத்தில் அந்தரங்க சுத்தி அடைந்தமைக்கும் மகிழ்ச்சியடை. பின்னர் மகிழ்ச்சியுடன் தலை குனிந்தவனாய் தெய்வ சமீபத்துவத்தில் நுழை. வலப்பக்கம் மறுமையின் வாழ்வையோ, இடப்பக்கம் இம்மையின் வாழ்வையோ, ஜனங்களையோ, சுகபோகங்களையோ நோக்காதே!

அடியான் இந்த நிலையை அடைந்ததும், அங்கே இவன் இருப்பது ஊர்ஜிதமானதும், அல்லாஹ்விடம் இருந்து கண்ணியம் எனும் உடையைப் பெறுகிறான்; மற்றும் பலவிதமான நன்மைகளையும் அடைகிறான். அப்போது, பாக்கியங்களையும், அனுக்கிரஹங்களையும் உடுத்துக்கொள்; ஆசைகளை ஒதுக்கி மறுக்கும் அளவுக்கு மரியாதைக் குறைவு செய்யாதே; ஏனெனில், அரசனின் நன்கொடையைப் பெற மறுப்பது அவனை வற்புறுத்துவதாகவும் அவன் மகத்தான சக்தியை அலட்சியஞ் செய்வதாகவும் ஆகிவிடும்'' என்று அவனிடம் கூறப்படும். இதன்பின் தன் முயற்சி எதுவுமே இன்றி இறைவனின் நல்லருளாலும், பங்கு ஒதுக்குதலாலும் அவன் பொதியப்படுகிறான். இதற்கு முன் அவன் தன்

கீழான மனத்தின் ஆசைகளாலும் தூண்டுதல்களாலும் பொதியப்பட்டிருப்பது வழக்கம். எனவேதான், "அல்லாஹ்வின் பாக்கியங் களாலும் அனுக்கிரஹங்களாலும் உன்னைப் பொதிந்து கொள்" என்று அவனிடம் கூறப்படும்.

ஒதுக்கப்பட்டவற்றையும், சுகங்களையும் அடைவதில் இவனுக்கு நான்கு நிலைமைகள் உள்ளன. முதலாவதாக, இயற்கையின் தூண்டுதல்; இது விலக்கப்பட்டது. இரண்டாவதாகச் சட்டத்தை அனுச ரிக்கும் நிலைமை; இது ஆகுமானது; அனுமதிக்கப்பட்டது. மூன்றாவ தாகச் சந்தர்ப்பத்தின் உத்தரவு; இது தெய்வத் தோழமையின் நிலைமை. கடைசியாகத் தெய்வீக அனுக்கிரஹம், இந்த நிலையில் நோக்கம் மறைந்து, 'பதாலிய்யத்(அப்தாலின் நிலை) தெய்விக லக்ஷியத்தை அடைதல் ஆகியவை எய்தப்படுகின்றன. தெய்வ விதிப்பின் கட்டளைப்படி, அதாவது அல்லாஹ்வின் செயலின்படி நிற்க முடிகிறது. இதுவே ஞானத்தினுடைய நிலை; நேர்மை எனுங்குடிகொண்ட நிலை. இந்நிலையை அடையாதவரை யாரும் நேர்மையாளர் என்று அழைக்கத்தகாதவராவர். இது கீழ்க்கண்ட அல்லாஹ்வின் வாக்கோடு இணைந்ததாகும்: "நிச்சயமாக என் நேயன் இவ்வேதத்தை வெளியிட்ட அல்லாஹ்வே; அவன் நேர்மையானவர்களோடு தோழமை கொள்கிறான்."(7 : 196)

எனவே, எந்தப் பயனுள்ள பொருளையும் தனக்கெனப் பயன் படுத்துவதிலிருந்தும், தனக்கு தீங்கையும் சங்கடத்தையும் உண்டாக்கும் எதையும் விலக்குவதிலிருந்தும் தடுக்கப்பட்டவனே அடியானாவான். இவன் தாயின் மடியில் கிடந்து பால் குடிக்கும் சிசுவைப் போலவும், குளிப்பாட்டுபவர் கையில் கிடக்கும் மையித் போலவும் இருக்கிறான். இவன் எந்த முயற்சியும் செய்யாமலே, எதுவுமே யோசியாமலே, தெய்வக் கரம் இவன் போஷிப்பைக் கவனித்துக் கொள்கிறது. இவன் இவை யாவற்றையும் விட்டு மறைந்தவனாய், சில சமயங்களில் தன்னைக் கட்டுப்பாட்டுக்கு உள்ளாக்கியும், சில சமயங்களில் சுகமாய் இருக்குமாறு செய்தும், சில சமயங்களில் பணக்காரனாயும், சில சமயங்களில் ஏழை ஆகியும் ஆக்கி வரும் தக்தீரின் கட்டளைப்படி ஒழுகுவதில் எந்த நிலையோ, ஸ்தானமோ, நோக்கமோ இல்லாதவனாய், தன் நிலைமை எதுவும் அகல்வதற்கோ,

மாறுவதற்கோ, விரும்பவோ, இஷ்டப்பட்டா மலிருக்கவோ செய்யாதவனாய் இருக்கிறான். இவன் பூரணமான இன்பமும் நிரந்தர நினைவுமே காட்டி வருவான். இதுவே அப்தால்கள், ஒளலியாக்களால் அடையப் பெறும் ஆத்மீக நிலையின் உச்சமாகும்.

உபதேசம் ஐம்பத்து ஆறு

அல்லாஹ்வின் அடியான் சிருஷ்டிகளை விட்டும் இச்சையை விட்டும், தன் கீழான மனத்தை விட்டும், நோக்கத்தையும், இம்மை மறுமையின் ஆசைகளையும் விட்டும் மறைந்ததும், அவன் அல்லாஹ்வைத் தவிர வேறு எதையும் நாடமாட்டான்; இதன் பின்னரே தன்னைப் பொறு க்கியெடுக்கும், அன்பு பாராட்டும், தன்மீது சிருஷ்டிகள் யாவும் அன்பு செலுத்தும்படி செய்யும் அல்லாஹ்வின் சமீபத்துவத்தையும் கருணா கடாட்சத்தையும் பெற்று அதில் புரள்கிறான். அல்லாஹ் தன் கருணைக் கதவுகளை அவனுக்குத் திறந்து விடுகிறான்; அதை மீண்டும் ஒருக்காலும் அடைப்பதில்லை என்றும் வாக்களிக்கிறான். இதனால் அடியான் அல்லாஹ்வையே ஏற்றவனாய், அவன் எண்ணம் மூலமே எண்ணுபவனாய், அவன் மார்க்கங்களாலேயே மார்க்கங் காணபவனாய், அவன் சித்தத்தாலேயே எதிலும் சித்தி பெறுபவனாய்; அவன் மகிழ்ச்சியாலேயே மனமகிழ்வு கொள்பவனாய் ஆகிவிடுகிறான், அவன் உத்தரவுகளை நிறைவேற்றுகிறான். வேறு யாருடைய உத்தரவையும் கேட்பதே இல்லை.அந்த வல்லோனுடையதைத் தவிர வேறு ஜீவியத்தையோ செயலையோ அவன் அறியான். இதன்பின் அல்லாஹ் அந்த அடியானுக்கு ஒரு வாக்கு அளிக்கிறான்; அதை நிறைவேற்றாது போட்டு வைக்கிறான்; இதனால் அந்த அடியான் இது சம்பந்தமாய் தனக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்த்து கிடைக்காமற் போகலாம். இஃது ஏனெனில் இச்சையும் நோக்கமும், சுகம் தேடலும் மறைவதுடன் அவன் வேறு, தான் வேறு என்றிருக்கும் நிலைமையும் மறைந்து விடுகிறது. அப்போது அவனுடைய ஆத்மாவே அல்லாஹ்வின் செயலாகவும், நோக்கமாகவும், லட்சியமாகவும் ஆகிவிடுகிறது. எனவே, இந்நிலையில் வாக்குறுதி அல்லது வாக்குறுதி முறிவு என்ற பேச்சுக்கே இடமில்லாது போகிறது; ஆசையும் நோக்கமும் உள்ளவனுக்குத் தான் இவையும் உண்டு. அத்தகைய அடியானுக்கு

அல்லாஹு ஜல்ல ஜலாலுஹு அளிக்கும் வாக்குறுதியை ஒருவன் தனக்குள் ஒரு குறிப்பிட்ட காரியத்தைச் செய்ய எண்ணிவிட்டுப் பிறகு அதே எண்ணத்தை வேறு எதன் பக்கமோ திருப்பிவிடுவதற்கு உவமையாக்கலாம். இஃது எதுபோல் எனின், நம் பெருமான் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் முந்திய வேதங்களில் உள்ள சிலவற்றை எடுத்துவிட்டது பற்றிக் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளது போலாம். அதாவது: "(முந்திய வேதங்களில்) நாம் எவ்வசனங்களை எடுத்து விடவோ, மறக்கப்பட்டும் போகவோ விரும்பினோமோ(அவற்றிற்குப் பதிலாக) அவை போன்றே, அல்லது அவற்றைவிடச் சிறந்தவற்றை நாம் (இவ்வேதத்தின் மூலம்) தருகிறோம். அல்லாஹ் நிச்சயமாகச் சகல வஸ்துக்களின் மீதும் அதிகாரமுடையவன் என்பதை நீர் அறியீரா?"(2 : 106)

நபி பெருமான் (ஸல்) அவர்கள் ஆசையையும் நோக்கத்தையும் விட்டும் கழுவப்பட்டவர்களாய் இருந்தார்கள். பத்ரு யுத்தம் நடந்த நாளிலே கைதிகள் விஷயத்தில் அவர்கள் நடந்து கொண்டது அதற் கு ஓர் உதாரணம். அதுபற்றித் திருக்குர்ஆனில் கூறப்பட்டிருப்பதாவது: "நீர் இம்மையின் நிலையற்ற பொருள்களை விரும்புகிறீர்; ஆனால், உமக்கு அல்லாஹ் மறுமையைத் தர நாடியுள்ளான். அவன் மகாசக்தி வாய்ந்தவன்; மகா ஞானி. அல்லாஹ் ஏற்கனவே வெளியாக்கிவிட்ட ஓர் உத்தரவு மட்டும் இல்லாது இருப்பின், நீர் எடுத்துக் கொண்டதற்காக மிகவும் கடுமையான தண்டனை ஏற்பட்டிருக்கும்." (8: 67, 68)

நபிபெருமானார் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் உடமை. அவர் களை அவன் ஒரே நிலையில் ஒரே விஷயத்தில், ஒரே வாக்குறுதியில் விட்டுவைக்கமாட்டான். தெய்வ விதிப்பின் உத்தரவை நோக்கி அவர்களைத் தள்ளி, தெய்வ விதிப்பின் கடிவாளத்தை அவர்கள் கையாளச் செய்வான். இப்படி அவர்களை அசைத்துத் தெய்வ விதிப்பின் நடுவில் புரளச் செய்து தன் வார்த்தைகளால் விழிப்புடனிருக்கும்படி செய்வான். "அல்லாஹ் நிச்சயமாகச் சகல வஸ்துக்களின்மீதும் அதிகாரமுடையவன் என்பதை நீர் அறியீரா?" (2: 106)

அதாவது நிச்சயமாக அவன் விதித்துள்ள விதிவசக்கடலில் நீ கிடக்கிறாய்; அதன் அலைகள் உன்னைச் சில சமயங்களில் இப்பக்கமும், சில சமயங்களில் அப்பக்கமும் அலைக்கழிக்கின்றன. எனவே, ஒரு ஒலியின் ஸ்தானம் முடியுமிடம் ஒரு நபியின் ஸ்தானத்தின் ஆரம்ப இடமாய் இருக்கிறது. விலாயத்துக்கும், பதாலியத்துக்கும் பிறகு நுபுவ்வத் (நபித்துவம்) அன்றி வேறு ஸ்தானமில்லை.

உபதேசம் ஐம்பத்து ஏழு

ஆத்ம அனுபவங்களின் பல்வேறு நிலைகளுமே கட்டுப்படுத்தும் நிலைகள்தாம். ஏனெனில், ஒலியானவர் அவற்றைக் கவனித்து நடக்கும்படி கட்டளையிடப்படுகிறார், கவனித்து நடக்கும்படி உத்தரவிடப்படும் எதுவுமே கட்டுப்பாட்டைக் கொண்டு வருவதுதான். தெய்வ விதிப்பின்படி– கட்டளைப்படி நடந்துவிடுவது சுகமான ஒரு நிலைமை என்பதில் ஐயமில்லை;

ஏனெனில், அதில் தெய்வ விதிப்பின் கட்டளையில் யாரும் தன் ஜீவனைத் தவிர வேறு எதையும் நோட்டமிட வேண்டாம் என்று கட்டளையிடப்பட்டுள்ளது. எனவே, ஒலியானவர் தெய்வ விதிப்பின் கட்டளை விஷயத்தில் தகராறு செய்தல் கூடாது, அதனுடன் இணங்கித் தமக்கு நேரக்கூடிய சகலவற்றின் விஷயத்திலும்–அவை இனியவை யாயினும் கசப்பானவை ஆயினும் எதுவுமே கூறாது இருக்க வேண்டும். அனுபவ நிலைகள் வரம்புள்ளவையாதலால் அந்த வரம்புகள் காப்பாற்றப்படவேண்டும் என்று கட்டளை உண்டாகியுள்ளது. ஆனால், அல்லாஹ்வின் செயலான விதிவசமோ வரம்பற்றதாகையால் வரம்புகளைக் காப்பாற்றும் அவசியம் இல்லாது போகிறது. அல்லாஹ்வின் அடியான் விதிவசத்தின் நிலையை, அல்லாஹ்வின் செயலை, சுகமான நிலையை எய்திவிட்டான் என்பதற்கு அறிகுறி, அவன் சுகங்களை உதறித்தள்ளி, அவற்றைவிட்டுவிலகி இருக்குமாறு கட்டளை யிடப்பட்டபின், இப்போது சுகங்களுக்காக விண்ணப்பிக்கும்படி உத்தரவிடப்படுகிறான். ஏனெனில் அவன் அந்தரங்கம் சகல சுகங்களையும் விட்டு வெளியாகி, இறைவனைத் தவிர வேறு எதுவும் அவனிடம் இல்லாது ஆனதும்; அவன் சுகமான நிலையில் வைக்கப்பட்டு அவனுக்காக ஒதுக்கப்பட்ட, அவன் கேட்டால்

நிச்சயங் கிடைக்கக்கூடிய சுகமான பொருள்களைக் கேட்குமாறும், அதற்காக ஆவல் காட்டுமாறும் கட்டளையிடப்படுகிறான். அல்லாஹ்வின் பார்வையில் அவன் கண்ணியமும், அவன் கேட்பது ஏற்கப்படுவதில் அல்லாஹ்வின் நல்ல அருளும் இதன்மூலம் ஸ்தாபிதமானவையாகின்றன. சுகானு பவத்துக்கான பொருள்களை வேண்டுவதற்கு அடியான் தன் நாவை உபயோகிப்பது, கட்டுப்பாட்டுக்குப்பின் சுகம் உண்டாகியுள்ளதையும், சகலவித நிலைகளின் அனுபவங்களிலிருந்தும், நிலைகளிலிருந்தும், வரம்புகளுக்கும் கிடந்ததால் உண்டான சலிப்பிலிருந்தும் விடுபட்டு விட்டதையும் காட்டும் அறிகுறியாகும்.

சட்டத்தைப் பேணும் சங்கடம் மறைவது நாஸ்திகத்தை உண் டாக்கவில்லையா? இஸ்லாத்திலிருந்து புறம்பாகி, "உமக்கு (யதார்த்தம் எனும்) மரணம் வரும்வரை உம் இறைவனுக்குப் பணிந்து சேவை செய்வீராக!" (15 : 99) என்ற அவன் வார்த்தைகளையே நிராகரிப்பதாக ஆகவில்லையா என்று ஆட்சேபிக்கலாம். இதற்கு என் பதிலாவது; அல்லாஹ் மகா தயாநிதி; அவன் நேசன் அவனுக்கு மிக வும்அருமையானவன்; தன்னுடைய சட்டத்தின் முன்பும் மார்க்கத்தின் முன்பும் விகாரமான, குறைபாடுள்ள ஓர் அந்தஸ்தில் தன் அடியான் தரிபட்டுக்கிடக்க அவன் விடமாட்டான். அதற்குப் பதிலாக, விவரித்த யாவிலும் இருந்தும் அந்த அடியானைக் காப்பாற்றி, பாதுகாத்து, விழிப்புடையவனாக்கிச் சட்டத்தின் எல்லைகளைப் பேணுமாறு செய்கிறான். எனவே, அந்த அடியான் பாவத்துக்கு எதிராகப் பாதுகாப்புப் பெற்றவனாய் எந்த முயற்சியும் போராட்டமுமின்றிச் சட்ட வரம்புக்குள் ஒழுகி வருகிறான். ஆனால், தன் இறைவனின் அருகில் இருப்பதால் தன்னுடைய இந்த ஒழுக்கத்தையே உணராமலிருக்கிறான். அல்லாஹ் சொல்கிறான்; தீமையையும் ஒழுங்கீனத்தையும் அவரிடமிருந்து அப்பாலாக்குவதற்காகவே நாம் அப்படிச் செய்தோம்; நிச்சயமாக அவர் தம் உண்மையான அடியார்களில் ஒருவராவார்" (12 : 24) என்று. மேலும், "(ஷைத்தானே) என் அடியார்கள் சம்பந்தப்பட்டவரை உனக்கு அவர்கள்மீது நிச்சயமாக எந்தச் செல்வாக்குமில்லை" (15 : 42) என்றும், "அல்லாஹ்வின் அடியார்களான பரிசுத்தவான்களைத் தவிர" (37 : 40) என்றும் திருகுர்ஆனில் கூறப்பட்டுள்ளது.

ஹே ஏழையே இத்தகையவன் அல்லாஹ்வால் தேர்ந்தெடுக் கப்பட்ட, அவன் பொருளாய் அவன் சமீபத்துவம், பரிவு என்ற படிகளில் ஊட்டி வளர்க்கப்படுபவனாய் இருக்கிறான். அவனை ஷைத்தான் அணுகுவதெப்படி? தீயவையும், வேண்டத்தகாதவையும் அவன் அருகில் செல்வது எப்படி? அந்த ஊட்டத்தை விட்டு விலகி, அந்நிலைமைக்கான மரியாதையை நீ செய்யாதிருப்பது எப்படி? அத்தகைய கேவலமான இழிந்த துணிச்சலும், தவறிய அறிவும், பிழைபட்ட அபிப்பிராயமும் அல்லாஹ்வின் சர்வமான சக்தியாலும், சம்பூரணமான பரிவாலும், பரந்த கருணையாலும் அழிந்து படுமாக! பரிபூரணமான போர்வைகளால் அவன் நம்மைப் போர்த்துப் பாவங்களை விட்டு விலக்கிப் பாதுகாப்பானாக! தன் சம்பூரணமான பாக்கியங்களாலும், நிரந்தரமான அருட்கொடைகளாலும் அவன் நமக்கு ஊட்டமளித்து அருள்புரிவானாக!

உபதேசம் ஐம்பத்து எட்டு

சகல புறங்களின் விஷயத்திலும் குருடாய் இரு; அவற்றில் எதன் பக்கமும் கண் திறக்க வேண்டாம். அவற்றில் எதன் பக்கமும் நோக்கிக் கொண்டிருக்கும் வரை. அல்லாஹ்வின் நல்லருளும் அண்மையும் உனக்கு மூடியவையாகவே இருக்கும். எனவே உன்னுடைய மனத் தகத்தில் ஏகத்துவத்தை நிலைநாட்டி. உன் கீழான மனத்தை அழித்துச் சகல புறங்களையும் மூடிவிடு; நீ மறைவதுடன் உன் அறிவும் மறையட்டும். அப்போது அல்லாஹ்வின் பக்கம் உன் மனக்கண் முன் தென்படும். உன் இதயத்தின் ஒளிக் கிரணங்களுடனும், மெய்விஸ்வாசத்துடனும், நம்பிக்கையுடனும் அது தென்படுவதை உன் இரு மனக்கண்களாலும் காண்பாய். அச்சமயம் உள்ளகத்திலிருந்து ஒரு வெளிச்சம் தோன்றும்; இருண்ட இரவில் இருண்ட ஒரு வீட்டில் எரியும் விளக்கின் வெளிச்சம் திறந்த வாயில் மூலம் தென்பட்டு பிரகாசம் உண்டாவது போல, அந்த வெளிச்சம் உன் புறத்திலும் தென்படும். எனவே, உன் ஆத்மாவும் அங்கங்களும், அல்லாஹ்வின் வாக்குறுதியாலும், நன்கொடையாலும் அவனையல்லாதார் தரும் நன்கொடைகள் வாக்குறுதிகளையும் விட்டு வேறுபட்ட நிலையில்—சுகத்தை உணரும்.

எனவே, உன் ஆத்மாவிடம் நீ கருணை காட்டு; அதனிடம் அநீதியாய் நடக்காதே! உன் அறியாமை மௌடீக இருளில் உன் ஆத்மாவை எறிந்துவிடாதே; சிருஷ்டிகள் உள்ள பக்கத்தையும், சக்தியையும், திறனையும், பொருளீட்டலையும் கண்டு மயங்கி அவற்றில் நம்பிக்கை கொண்டுவிடாதே! நீ அவ்விதம் செய்தால் எல்லாப் புறங்களும் மூடப்படும். உன்னுடைய அந்த இணை வைத்தல் காரணமாக, அதற்குத் தண்டனையாக அல்லாஹ்வின் நல்லருள் என்னும் பக்கமும் மூடப்பட்டுவிடும். ஆகையால் அவன் ஏகத்துவத்தை உணர்ந்து, அவன் நல்லருளைக் கண்டு, மற்ற எதன் மீதும் நம்பிக்கைக் கொள்ளாது அவன் மீதே பூரணமாக நம்பிக்கை வைத்ததும், அவனையன்றி மற்றுமுண்டான சகலவற்றின் விஷயத்தில் குருடானதும், அவன் உன்னைத் தனக்கு அருகில் உள்ளவனாக்கி, தன் கருணையைக் காட்டி, ஊட்டி. உணவளித்து, வைத்திய சிகிச்சை அளித்து, சுகமாக்கி, நன்கொடைகள் உதவி, வளமானவனாக்கி, உதவிகள் செய்து, ஆட்சி செய்பவனாக்கி, சிருஷ்டிகளிடமிருந்தும், உன் கீழான மனத்திடமிருந்தும், உன்னை மறையச் செய்து அதன்பின் உன் ஏழ்மையையோ வளத்தையோ நீ காணாதபடி ஆக்கிவிடுகிறான்.

உபதேசம் ஐம்பத்து ஒன்பது

உன் நிலைமை துயரமானது அல்லது பாக்கியமானது என்ற இரண்டில் ஒன்றாகவே, இருக்க முடியும். துயரமானதாய் இருப்பின் முயற்சியுடனாவது நீ பொறுமையாய் நாட வேண்டும். ஆனால், இஃது இரண்டாந்தர நிலைதான், முயற்சியற்ற, ஒழுங்கான பொறுமையுடன் இருப்பதுதான் அதைவிட உயர்ந்த நிலையாகும். அல்லாஹ்வின் உத்தரவுடன், அப்போது நீ சுகத்தைக் கேட்கலாம். அவனுடன் இணைந்திருக்கவும் கடைசியில் அதில் மூழ்கிவிடவும் விரும்பலாம். இது அப்தால்கள், ஆத்மஞானிகள், அல்லாஹ்வைப்பற்றிய ஞான மடைந்தவர்கள் ஆகியோருக்குப் பொருத்தமான நிலையாகும். உன் நிலை பாக்கியமானதாய் இருப்பின், அது குறித்து நன்றியறிதல் செலுத்த வேண்டும். நன்றியறிதல் நாவினாலும் இதயத்தாலும் உடலின் சகல அங்கங்களாலும் செய்யப்படலாம்.

நாவினால் நன்றி செலுத்துவது என்பது அந்தப் பாக்கியம் அல்லாஹ்விடமிருந்தே வந்தது, அது ஜனங்களாலோ, உன்னாலோ, உன் பலத்தாலோ, சக்தியாலோ, நடவடிக்கையாலோ, முயற்சியாலோ, வேறு எதனாலுமோ, யார் மூலம் அது உன்னிடம் வந்ததோ அவராலுமோ அஃது உனக்குக் கிடைக்கவில்லை என்பதை ஒப்புக் கொள்வதாம். ஏனெனில், நீயும் அவர்களும் அதற்கான கருவிகளாய்த்தான் இருந்தீர்கள். அதை உண்மையில் உண்டாக்கி ஒதுக்கித் தந்தவன் அல்லாஹ்தான்; எனவே, மற்ற யாருக்கும் அல்ல, அவனுக்கே நன்றி செலுத்த வேண்டும். உதாரணமாக ஒரு சம்மானத்தைக் கொண்டுவரும் அடிமைக்கல்ல. அதை அனுப்பும் எஜமானுக்கே யாவரும் மதிப்புத் தருகிறார்கள். இந்தச் சரியான மனப்பான்மை அற்றவர்களைப் பற்றி, "இம்மையின் புறத் தோற்றத்தை அவர்கள் கவனிக்கிறார்கள்; மறுமையைப்பற்றியோ அக்கறையற்றவர்களாய் இருக்கிறார்கள்" (30 : 2) என்று அல்லாஹ் திருகுர்ஆனில் கூறியுள்ளான். எனவே, புறத் தோற்றத்தை மட்டும் கவனித்துவிட்டு அகற்கப்பால் ஊடுருவிப் பார்க்கும் ஞானமற்றவன் அறியாமையுள்ளவனும், அறிவுக் கோளாறு உடையவனுமாவான்; ஒரு விஷயத்தின் மூல ஸ்தானத்தை ஊடுருவிப் பார்க்கும் சக்தியுடையவனைத்தான் அறிவுடையவன் எனலாம்.

இதயத்தால் நன்றி செலுத்துவது என்பது, பாக்கியங்களிலும், நன்மைகளிலும், வசதிகளிலும், அக, புற நடவடிக்கைகளிலும், ஒய்விலும் உன்னுடையவையாய் இருப்பவை யாவும் அல்லாஹ்விடமிருந்தே வருகின்றன, வேறு யாரிடமிருந்துமல்ல என்பதை உறுதியான நம்பிக்கையுடன் மனத்தகத்தில் கொள்வதாகும். நாவால் நீ நன்றி செலுத்துவது என்பது இதயத்திலுள்ளதை வெளியிடுவதுதான். "உங்களுக்கு அனுக்கிரஹிக்கப்பட்ட யாவும், அல்லாஹ்விடமிருந்து வந்தவைதாம்" (16 : 53) என்றும், 'புறத்தேயும் அகத்தேயும் அவன் தன் அருட்கொடைகளை உங்கள் மீது அள்ளிச் சொரிந்துள்ளான்" என்றும் "அல்லாஹ்வின் அருட்கொடைகளை நீங்கள் கணக்கிட்டால் அவற்றை உங்களால் என்ன முடியாது" (14 : 34) என்றும் அல்லாஹ்வே கூறியுள்ளானன்றோ! எனவே, ஒரு முஸ்லிமுக்கு நல்லருள்புரிபவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை.

கடைசியாக, அங்கங்களால் நன்றி தெரிவிப்பது என்பது அவற்றைச் சிருஷ்டிகளுடைய கட்டளைகளில் ஈடுபடுத்தாது முற்றும் அல்லாஹ்வின் கட்டளைகளில் ஈடுபடுத்துவதாகும். எனவே, அல்லாஹ்வுக்கு எதிரான எவ் விஷயத்திலும் நீ சிருஷ்டிகளுக்கு இணக்கம் காட்டவே கூடாது. சிருஷ்டிகள் என்பது, இது சம்பந்தப் பட்டவரை உன் கீழான மனமும், இச்சைகளும், நோக்கமும் மற்றுமுண் டான சகலமும் அடங்கியதாகும்.

அல்லாஹ்வுக்கு அடிபணிவதை உன் தலையாய கடமையாகக் கொள். மற்றவை யாவும் அதற்கு உட்பட்டே வரவேண்டும். வேறு வதிமாய் நீ நடந்தால், நேரானபாதையை விட்டு வழி தவறியவனாவாய்; அநீதவானாவாய்; அல்லாஹ் மெய்விஸ்வாசிகளான தன் அடியார் களுக்காக வெளியிட்டுள்ள கட்டளைகளுக்குப் புறம்பாகவே கட்டளையிடுபவனாவாய். அது நேர்மையானவர்கள் பின்பற்றும் வழியன்று; அல்லாஹ் சொல்கிறான்: "அல்லாஹ் இறக்கிய (வேதத்தின்) கட்டளைப்படி தீர்ப்பளியாதவர்கள் யாரோ, அவர்களே நிச்சயமாக அநீதியாய் நடப்பவர்களாவர்" (5 : 45) என்று. இவ்விதம் தீர்ப்பளியாதார்களைப் "பாவிகள்" (5 : 57) என்றும் வேறோர் இடத்தில் அவன் கூறியுள்ளான்.

அப்படி அநீதியாய் நடந்து கொண்டால் உன் குடிவிடம் ஜனங் களும், கற்களும் விறகாகும் நரக நெருப்பாய்த்தான் இருக்கும். இம்மையில் ஒரு நாழிகை நேரம் ஜுரத்தைத் தாங்காதவன், நெருப்பின் சிறு சுடர்களின் முன்கூட நிற்க முடியாது. அப்படியிருக்க நிரந்தரமாய், நரக வாசிகளின் கூட்டத்தில் நரக நெருப்பில் சதாவும் கிடப்பதெப்படி? எனவே, அப்பால் ஒடு! அவசரமாய் ஓடு! அவசரமாய் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடு! அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடு!

முதலில் சொன்ன நிலைமைகளைப் பேணு; ஏனெனில், உன் வாணால் முழுவதும் அவற்றில் ஏதாவதொன்று–துயரம் அல்லது பாக்கியம்–வந்து கொண்டு தான் இருக்கும். இந்த ஒவ்வொரு நிலையிலும் அதற்குரிய மனப் பக்குவத்துடன், நான் விவரித்தது போல். பொறுமையாய் இரு; அல்லது நன்றி செலுத்து. துயரமான நிலைமையில் ஜனங்களில் யாரிடத்தும் அதுபற்றிக் குறை கூறாதே! அதன் தொல்லை குறித்து யாரிடமும் எதுவுங்கூறி, மனத்தளவிலும் உன் இறைவனைப் பழிக்காதே! அவன் ஞானத்தையும் வழியையும்–உன் இம்மைக்கும் மறுமைக்கும்

அருமையான இவற்றை–சந்தேகிக்காதே! உன் உற்சாகத்தில் நீ ஜனங்களில் யாரிடமும் செல்வதன் மூலம் தப்பிக்க முயலாதே! ஏனெனில், அது அல்லாஹ்வோடு எதையாவது இணை வைப்பதாகிவிடும்.

அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் தன் உடைமையிலுள்ள எதையும் பகிர்ந்து தரவோ, நன்மை அல்லது தீங்கு செய்யவோ, சங்கடங்களை அகற்றவோ, துயரத்தையும் பிணியையும் உண்டாக்கவோ, உடல் நலத்தை அளிக்கவோ, நன்மையானது எதையும் உண்டாக்கவோ சக்தியற்றவர்களாவர். எனவே, அகத்திலும் புறத்திலும் சிருஷ்டிகளின் பக்கம் திரும்பாதே! அல்லாஹ்வுக்கு எதிராக அவைகளால் உனக்கு ஒருக்காலும் உதவ முடியாது. பொறுமையுடன் இரு. அல்லாஹ்வுடன் மனப் பொருத்தம் காட்டு; அவன் செயலில் மூழ்கியவனாகு!

நீ இந்தப் பாக்கியங்கள் அற்றவனாய் இருந்தால், பணிவுகாட்டி உன் பாவங்களை ஒப்புக்கொண்டு, உன் கீழான மனத்தின் தீமை பற்றியும், சத்தியத்தை விட்டு நீ விலகியிருந்தது பற்றியும் முறையிட்டு அவன் ஏகத்துவத்தையும், ஆசிகளையும் நீ இணைவைத்ததிலிருந்து ஒதுங்கிவிட்டதையும் வெளியிட்டு, தெய்வ விதிப்பின் எழுத்துத்தன் பூரணத்துவத்தை எய்தும் வரை, உன் துயரம் மறைந்து, அல்லாஹ்வின் நல்லருள் உண்டாகி சுகமும் மகிழ்ச்சியும் ஏற்படும்வரை, அவனிடமே உதவி தேடிவா! அப்போது வரும் நல்லருள் ஐயூப் நபிக்கு வந்தது போன்றிருக்கும்; இரவின் இருள் அகன்று பகலின் வெளிச்சம் வருவது போலும், பனியின் கொடுமை அகன்று வசந்தக் காற்று வீசுவது போலும் அந்த நல்லருள் விளங்கும். அதற்குப் பொறுமையே திறவுகோலும், ஆரம்பமும், முடிவும், அத்தாட்சியும் ஆகும். இது ஹதீஸில், "உடலுக்குத் தலை எத்தனை பிரதானமானதோ, அத்தனை மெய்விஸ்வாசத்துக்குப் பொறுமை பிரதானமானதாய் இருக்கிறது'' என்றும், பொறுமை பூரணமான மெய்விஸ்வாசமாகும்" என்றும் கூறப்பட்டுள்ளதற்கு இணக்கமானதாகும்.

சிலசமயம் அல்லாஹ்வின் அருட்கொடையை அனுபவிப்பதன் மூலம் நன்றி தெரிவித்தல் உண்டாகிறது. ஆகவே உன் நன்றி தெரிவித்தல் என்பது உன் ஆத்மா துடைக்கப்பட்ட, உன் இச்சைகள் மறந்த நிலையில், சன்மார்க்க நெறிமுறையின் வரம்புகளைப் பாதுகாக்கும் ஆர்வம் நிறைந்த

நிலையில் அதை அனுபவிப்பதாகும். இது முன்னேற்றத்தின் கடைசி நிலை. நான் சொன்னதிலிருந்து பாடங் கற்றுக்கொள். அல்லாஹுதஆலா நாடினால் உனக்கு நேர்வழி காட்டுவான்.

உபதேசம் அறுபது

மெய்ஞ்ஞானத்தின் ஆரம்பம் இயற்கையான தேவைகளை விட்டும் விடுபட்டு சன்மார்க்கத்தின் பாதையிலும், பிறகு விதி வசத்தின் பாதையிலும் நடந்து ஒழுகி, பிறகு சன்மார்க்க நெறி முறைக்கு உடன் பாடான இயற்கையான தேவைகளுக்கு மீளுதலாம். எனவே, முதலில் நீ உன் இயற்கையான தேவைகளான உணவு உண்ணலையும், அருந்தலையும், உடுத்தலையும், தாம்பத்திய உறவையும், வீட்டில் குடியிருத்தலையும், மற்றும் இயல்புகளையும், பழக்கங்களையும் விட்டு வெளியாகி சன்மார்க்க நெறிமுறையின் ஏவல் விலக்கல்களில் விழிப்புடனிருந்து வரவேண்டும். நீ திரு குர்ஆனையும் ஹதீஸையும் பின்பற்றி வரவேண்டும். "நமது தூதர் கொணர்ந்ததை ஏற்று அவர் தடுத்துள்ளதை ஒதுக்கிக் கொள்ளுங்கள்" (59 : 7) என்று அல்லாஹ் கூறியுள்ளான். "நீங்கள் உண்மையாகவே அல்லாஹ்விடம் அன்புடையவர்களாயின் என்னைப் பின்பற்றுங்கள்; (அது கொண்டு) அல்லாஹ் உங்கள் மீது அன்பு வைப்பான் என்று கூறுவீராக!" (3 : 31) எனவும் அல்லாஹ் தெரிவிக்கிறான்.

எனவே, நீ உன் இச்சைகளிடமிருந்தும் உன் கீழான மனத்திட மிருந்தும் மறையும்படி செய்யப்படுவாய். அதன் பின் உன் அகத்தே ஏகத்து வத்தையன்றி வேறு எதுவும் இராது; உன் புறத்தே அல்லாஹ்வின் ஏவல் விலக்கல்களின்படி அவனுக்கு அடிபணிந்து சேவை செய்வ தையன்றி வேறொன்றும் இருக்காது. இவ்விதமே உன் போக்கிலும் வழியிலும் இது நிலைத்திருக்கும்; உன் இரவிலும், பகலிலும், உன் பிரயாணத்திலும், இருப்பிலும், உன் தொல்லைகளிடையிலும், மகிழ்வினிடையிலும், உன் ஆரோக்கிய நிலையிலும், சுகக் குறைவிலும் மற்றுமுண்டான சகலவித நிலைமைகளிலும் இஃது ஒர் ஆடையைப் போல் உனக்கு உதவிக் கொண்டிருக்கும்.

அதன்பின் நீ தெய்வ விதிப்பு எனும் பள்ளத்தாக்குக்குக் கொண்டு செல்லப்பட்டு அதன் ஆதிக்கத்தில் வைக்கப்படுவாய். உன் முயற்சிகளிலிருந்தும், போராட்டங்களிலிருந்தும், உன் சக்தியிலும் பலத்திலுமிருந்தும் மறைந்து விடுவாய். அதன் பின் உனக்குக் கிடைக் கும் சன்மானத்தை எழுதப் பேனாவில் மை கிடையாது; அதன் ஞானம் யாவுக்கும் முந்தியதுமாகும். அந்த சம்மானத்தை நீ அனுபவிப்பதில் பாதுகாவல் அளிக்கப்படுவாய், சன்மார்க்க நெறிமுறையின் வரம்பு மீறப்படாமலும் கவனிக்கப்படும். அதன்மூலம் அல்லாஹ்வின் சக்தியுடன் இணைந்து போக முடியும். விலக்கப்பட்டவற்றை அனுமதிக்கும் அளவுக்கு சட்ட வரம்பு உடைக்கப்படாமலும், அல்லாஹ்வின் கட்டளைகளின் கடுமை குறைக்கப்படாமலும் கவனிக்கப்படும். அல்லாஹ் சொல்கிறான்: நிச்சயமாக நினைவூட்டுவதை (திருகுர்ஆனை) நாம் வெளியிட்டுள்ளோம்; மிகவும் நிச்சயமாக நாமே அதன் பாதுகாவலாளியாக இருந்து வருவோம்" (14: 9: 10) என்று, தீமையும், ஒழுங்கீனமான செயல்களும் அவரை அணுகாது இருப்பதற்காகவே அவருக்கு எச்சரிக்கை செய்தோம்; நிச்சயமாக அவர் நமது உண்மையுள்ள அடியார்களில் ஒருவராவார்" (12 : 24) என்றும் அல்லாஹ் அருளியுள்ளான். அல்லாஹ்வின் கருணையால் அவனைச் சந்திக்கும் வரை அவன் பாதுகாவலும் பராமரிப்பும் உனக்கு இருந்துவரும். அது உனக்காக நிர்ணயிக்கப்பட்ட பங்காகும், நீ காடுகளிலும், கொடிய பாலையிலும் இயற்கையின் தூண்டுதல்களின்படி சுற்றி அலைந்தபோது, இது உனக்குத் தராது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. உன் பயணத்தில் இது பாரமாக வரக்கூடாதே என்பதுதான் அதற்குக் காரணம், அது உன் மீது பெரும் பளுவாக இருந்து, நீ பலஹீனம் அடைந்து, உன் நோக்கத்தையும் லக்ஷியத்தையும் விட்டுக் கவனம் திரும்பியவனாகி நாஸ்தி நிலையின் முன்வாயிலை நீ அடையும் வரை, அல்லாஹ்வின் அருகிலாகி, அவன் ஞானத்தைப் பெற்று, மர்மங்களையும், பல விதமான அறிவையும், இயற்கையின் இருளால் ஆபத்து உண்டாக்கப்படாத ஒளிக் கடலையும் எய்தும்வரை, நீ பாரம் சுமக்காதவனாக விடப்பட்டிருக்கிறாய்.

ஆகவே, ஆத்மாவை உடலைவிட்டுப் பிரிக்கும் அளவுக்கு இயற்கை மனிதனகத்தே இருந்து கொண்டு, அவனுக்கு உரிய பங்கைப் பூரணமாகப் பெறச் செய்கிறது. இந்த இயற்கை மட்டும் மனிதனைவிட்டு மறையுமாயின் அவன் அமரர்களுடைய கூட்டத்தில் சேர்ந்தவனாகி விடுவான். அதனால் அமைப்பு முற்றும் குழம்பி அல்லாஹ்வின் ஞானத்தின் நோக்கமும் வீணாகி விடும். உன் பங்கையும், சுகங்களையும் நீ அனுபவிப்பதற்காக இயற்கை உன்னுடனேயே இருக்கும். இது அசலானதாய் இல்லாவிடினும் அனுமதிக்கப்பட்டதுதான். "உங்கள் உலகிலிருந்து பரிமளம், பெண்கள், தொழுகையில் என் கண்களின் குளிர்ச்சி தேக்கப்பட்டு இருப்பது ஆகிய மூன்றும் எனக்கு அருமையானவை ஆக்கப்பட்டுள்ளன" என்று நபி பெருமான் (ஸல்) அவர்கள் கூறியுள்ளதுபோல; அவர்கள் இவ்வுலக இச்சையிலிருந்து மறைந்ததும் அவர் கள் பங்கு அவர்களுக்குத் திருப்பி அளிக்கப்பட்டது. அந்தப் பங்கு அவர்கள் தங்கள் இறைவனை நோக்கிப் பயணம் செய்துகொண் டிருந்த சமயம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாகும். எனவே அவர்கள் தங்கள் இறைவனின் சித்தத்துக்கு இணங்கியும், அவன் செயலில் திருப்தி அடைந்தும், அவன் கட்டளைக்குக் கீழ்படிந்தும் இருப் பதற்காக அந்த முழுப் பங்கையும் அவர்கள் பூரணமாக ஏற்றுக் கொண் டார்கள். அவன் கல்யாண குணங்கள் புனிதமானவை; அவன் கருணை உலகங்களுக்கெல்லாம் உரியது; அவன் காருண்யம் அவன் ஒலிமார்களையும் நபிமார்களையும் தொடர்கிறது. எனவே, ஒலியானவர் இவ்விஷயத்தில் இந்நிலையில் உள்ளார்; அவர் நாஸ்தியான நிலைக்குப்பின் அவர் பங்கும் சுகமும் அவருக்குத் திருப்பி கொடுக்கப்பட்டு, சன்மார்க்க நெறிமுறையின் வரம்புகளும் காவல் புரியப்படும். இது அகமிய ஞானப் பரிபாஷையிலே லட்சியத்திடமிருந்து புறப்பட்ட இடத்துக்குத் திரும்புதலாகும்.

உபதேசம் அறுபத்து ஒன்று

தனக்குரிய பங்கு தன்னை அணுகுங்கால் ஒவ்வொரு முஸ்லிமும் அதை ஏற்றுப் பெற்றுக் கொள்வதில், சன்மார்க்க நெறிமுறையின் உத்தரவு அதை அனுமதிக்கும்வரை, மெய்ஞ்ஞானம் அது தனக்குரிய பங்குதான் என்று அறிவிக்கும்வரையில் தயக்கங் காட்டி அதைப் பரிசீலிக்கவே வேண்டும். "(தனக்குக் கிடைக்கும் எதையும்) மெய் விஸ்வாசி

பரிசீலிப்பான்; நயவஞ்சகன் அதை விழுந்து பறித்துக் கொள்வான்" என்றும், "ஒரு மெய்விஸ்வாசி தயக்கமுடையவன்" என்றும், "உங்கள் மனத்தில் ஐயமெழுப்பும் எப்பொருளையும் ஒதுக்குங்கள். அத்தகைய ஐயமெழுப்பாததை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்றும் நபி பெருமான் (ஸல்) அவர்கள் அருளி உள்ளார்கள். அதுபோல் ஒரு மெய்விஸ்வாசியானவன் தனக்குக் கிட்டும் எந்த உணவையும், பானத்தையும், உடையையும், மண விஷயத்தையும், மற்றும் பொருள்களையும் ஏற்கத் தயங்குவான். அவன் பக்தி நிலையில் உள்ளவனாய் இருந்தால், அவன் அவற்றை ஏற்கலாமா கூடாதா என்ற முடிவு சட்டத்தின் அனுமதி கொண்டு உண்டாகும். அவன் விலாயத்தின் நிலையிலிருப்பின், அதுபற்றி அகத்தின் உத்தரவு உண்டாகும்; அவன் அப்தால் அல்லது கௌது என்ற நிலையில் இருந்தால், தெய்வ ஞானத்தின் மூலமும் அல்லாஹ்வின் செயல் மூலமும் இந்த உத்தரவு உண்டாகும். இவ்வித உத்தரவு உண்டாகாத வரை அதை அவன் ஏற்கமாட்டான்.

இதன் பிறகு ஒரு நிலைமை உண்டாகும். அதில் அவனிடம் எவை வரினும், அவை சட்டத்தின் கட்டளைக்கோ, அக உத்தரவுக்கோ, தெய்வஞானத்துக்கோ முரண்பட்டவையாய் இல்லாதிருப்பின், அவை யாவையும் ஏற்கும் நிலைமையாக அது விளங்கும். ஆனால், இம்மூன்றில் எதனாலும் அவை ஆக்ஷேபிக்கப்படின் அவற்றை அவன் எற்கமாட்டான். முந்திய நிலையில் தயக்கமும் தாமதமும் ஏற்பட்டு வந்தது. இந்த நிலையில் அவ்விதமின்றி வருவதை இந்த நிபந்தனைக்குட்பட்டு ஏற்று, ஒப்புக்கொண்டு பயன்படுத்துதல் சாத்தியமாகிறது.

இதன் பிறகு இம்மூன்றின் குறுக்கீடே இல்லாமல் வருவதை ஏற்றுப் பயன்படுத்தும் மூன்றாம் நிலை உண்டாகிறது. இதுதான் நாஸ்தியின் நிலை. இந்த நிலையில் சகல துயரங்களிலிருந்தும், சன்மார்க்க நெறிமுறையின் சட்ட வரம்புகளிலிருந்தும் மெய் விசுவாசி விடுபட்ட வனாய் இருப்பான். "தீமையும் ஒழுங்கீனமான செயல்களும் அவரை அணுகாதிருப்பதற்காகவே அவருக்கு எச்சரிக்கை செய்தோம். நிச்சயமாக அவர் தமது உண்மையுள்ள அடியார்களில் ஒருவர் ஆவார்" (12 : 24) என்று அல்லாஹ் கூறியிருப்பது போலச் சகல தீமைகளும் அவர்களை விட்டு அப்பால் ஆக்கப்படும்.

எனவே, அல்லாஹ்வின் அடியான் சட்டத்தின் எந்த வரம்பையும் மீறுவதைவிட்டுப் பாதுகாக்கப்படுகிறான். அல்லாஹ்வின் அனுமதி கொண்டு சகல விஷயங்களிலும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட ஒருவனாகவும், நன்மையானது அவனுக்கு இலகுவாகக் கிட்டுவதற்காக அனுமதிக்கப்பட்ட சகல விஷயங்களிலும் பூரண அதிகாரம் தரப்பட்ட வனாகவும் அவன் விளங்குவான். இந்த ஸ்தானத்தில் அவனை அடையும் சகலமும், இம்மையிலும், மறுமையிலும், எல்லாவிதத் துயரங்களிலும், தொல்லைகளிலும், சங்கடங்களிலும் இருந்து விடுபட்டவையாகவும் அல்லாஹ்வின் நோக்கத்தோடும், இஷ்டத்தோடும், செயலோடும் பூரணமாகப் பொருந்தியவையாகவும் விளங்கும். இதற்குமேலே வேறு நிலை இல்லை; இதுவே லட்சியமானதும் ஆகும். இது மாபெரும் ஔலியாக்களிலும் தலையானவர்களுக்குரிய ஸ்தானமாகும். அவர்கள் சுத்தமுடையவர்களாகவும், இரகசியங்களை அடைந்தவர்களாகவும், நபிமார்களுக் குரிய படித்தரத்தை நெருங்கியவர்களாகவும் இருப்பார்கள்.

உபதேசம் அறுபத்து இரண்டு

இன்னார் அல்லாஹ்வின் அருகிலானார். இன்னார் தூரத்திலேயே வைக்கப்பட்டார். இன்னாருக்கு நன்கொடைகள் அருளப்பட்டன. இன்னாருக்கு அவை கிடைக்கவில்லை. இன்னாருக்குச் செல்வம் தரப்பட்டது. இன்னார் வறுமையிலேயே விடப்பட்டார். இன்னார் ஆரோக்கியமானவராக ஆக்கப்பட்டார். இன்னார் உடல்நலம் அற்றவராக ஆக்கப்பட்டார். இன்னார் உயரிய அந்தஸ்துத் தரப்பட்டார், இன்னார் தாழ்ந்த நிலையில் வைக்கப்பட்டார். இன்னார் புகழப்பட்டார். இன்னார் கண்டிக்கப்பட்டார், இன்னார் உண்மையான வராக்கப்பட்டார், இன்னார் பொய்யராக்கப்பட்டார் என்றெல்லாம் அடிக்கடி நீ கூறுவது விசித்திரமாய் இல்லையா? அவன் ஏகன், அவன் அன்பு விஷயத்தில் ஒருமை உடையவனிடம் அவனும் அன்பு காட்டுகிறான் என்பதை அறியாயா? அவன் தன்னையன்றி, வேறு எதனாலாவது உன்னைத் தன்னருகில் ஈர்த்தால், அதனால் உன் அன்பு குறைபாடுள்ளதாகிச் சிதறிப் போகும். ஏனெனில் உனக்கு யார் மூலம் பாக்கியங்கிட்டுகிறதோ அவரிடம் உன் மனத்தில் பற்றுதல் உண்டாவது சகஜமாய் இருக்கிறது. இதனால் உன்னிதயத்தில் அல்லாஹ்வின்மீதுள்ள அன்பு குறைபட்டதாகிறது. அந்த அல்லாஹ் பொறாமையுடையவன்; தனக்கு ஒரு கூட்டாளி ஏற்படுவதை அவன் விரும்புவதில்லை. எனவே, பிறருடைய கரங்கள் உனக்கு உதவ நீளாதபடியும், பிறருடைய நாவுகள் உன் புகழைப் பாட அசையாதபடியும். பிறருடைய கால்கள் உன்னிடம் வந்து, அதனால் உன் கவனத்தை அவனிடமிருந்து திருப்பி விடாதபடியும் அவன் தடுத்து விடுகிறான். தமக்கு ஒரு நன்மை செய்தவனிடம் அன்பு காட்டவும், தமக்குத் தீங்கு செய்தவனிடம் வெறுப்பு அடையும்படியான தன்மையுடையவையாய் இதயங்கள் இருக்கின்றன' என்று நபி பெருமான் (ஸல்) அவர்கள் மொழிந்துள்ளதை நீ அறியாயா? எனவே, நீ அவன் ஏகத்துவத்தை உணர்ந்து, அவனிடம் அன்பு காட்டி, முழுவதும் அகமும் புறமும், உன் அசைவுகளிலும் ஓய்விலும் அவனுக்கே உரியவன் ஆகும்வரை உனக்கு ஜனங்கள் எந்த வகையிலும் உதவி செய்யாதபடி அவன் தடுத்து விடுகிறான். அதனால் அவனிடமிருந்து வருவதை அன்றி, வேறு எந்த நன்மையானதையும், எந்தத் தீயதையும் நீ அறியமாட்டாய். சிருஷ்டிகளிடமிருந்தும், உன் கீழான மனத்திடமிருந்தும், உன் இச்சைகளிடமிருந்தும், நோக்கத்திடமிருந்தும், அவனை அல்லாத சகலவற்றிலிருந்தும் மறைந்தவனாய் நீ ஆகிவிடுவாய்.

அதன் பின் ஜனங்களின் கரங்கள் தயாளத்தோடு உன் பக்கம் திறக்கும்படி செய்யப்படும்; நாவுகள் உன் புகழுடன் அசையுமாறு விடுவிக்கப்படும். இம்மையிலும் சகல சமயங்களிலும் தயாளத்தால் நீ ஊட்டப்படுவாய். எனவே, வழுவிய ஒழுக்கமுடையவனாகாதே! உன்னை நோக்கும் அந்த ஒருவனை நோக்கு; உன்னைக் கவனிக்கும் அந்த ஒருவனிடம் கவனமாய் இரு; உன்னிடம் அன்பு காட்டும் அந்த ஒருவனிடம் அன்பு காட்டு; உன்னை அழைக்கும் அவனுக்குப் பதில் கொடு; உன்னை விழுந்துவிடாதபடி ஸ்திரமாக்கும், உன் அறியாமை இருளிலிருந்து உன்னை வெளியாக்கி, அழித்து படாமல் காப்பாற்றி, உன் மாசுகளைப் போக்கி, நாற்றத்திலிருந்து உன்னைச் சுத்தமாக்கி, உன் நாவிலிருந்து, துர்க்கந்தம் வீசும் உன் கீழான மனத்திடமிருந்தும், உன் இழிந்த இச்சைகளிலிருந்தும், தீமையை உண்டாக்கும் மீற முடியாத உன் தீய

குணத்திடமிருந்தும், உன் ஷைத்தான்களான வழி தவறிய தோழர்களிடமிருந்தும், அல்லாஹ்வின் பாதையில் உன்னை வழிப்பறி செய்யும் உன் அறியாமையுடைய தோழர்களிடமிருந்தும் உன்னைக் காப்பாற்றும் ஒருவனிடம் உன் கரத்தை ஏந்து!

உன் மிருக இயல்புடன், சிருஷ்டிகளுடன், இச்சைகளுடன், கீழ்ப் படியாத தன்மையுடன், இம்மையுடன், மறுமையுடன், அல்லாஹ் வையல்லாத மற்றுமுண்டானவற்றுடன் எத்தனை நாட்கள் தான் நீ இருந்து வருவாய்! சகலவற்றையும் சிருஷ்டித்தவனிடமிருந்து, யாவையும். ஜீவனுள்ள நிலைக்குக் கொண்டுவந்தவனிடமிருந்து, அந்தரங்கமும் பகிரங்கமுமானவனிடமிருந்து, சகலமும் மீளும், வெளிப்படும் ஸ்தானத்தில் உள்ளவனிடமிருந்து, இதயமும் ஆத்மாவின் ஆறுதலும் தன்னுடையவையாய் இருப்பவனிடமிருந்து, சுமைகளை இறக்கு பவனாயும், நன்கொடைகளை வழங்குபவனாயும், அருட்கொடைகளைச் சொரிபவனாயும் உள்ளவனிடமிருந்து நீ என் வெகுதொலைவிலுள்ளாய்?

உபதேசம் அறுபத்து மூன்று

நான் இவ்விதம் கூறுவதாக என் கனவில் கண்டேன். "உங்கள் கீழான மனத்தாலும், சிருஷ்டிகளிடம் நீங்கள் புறத்தே நடந்து கொள்ளும் முறையாலும், உங்கள் ஆசையின் தூண்டுதலால் நீங்கள் செய்யும் செயல்களாலும் நீங்கள் அல்லாஹ்வுக்கு இணை வைப்பவர் களாகிறீர்கள்."

இதைக் கேட்ட ஒருவர், "இது என்ன கூற்று?" என வினவினார். "இஃது ஒருவகை ஆத்மீக ஞானம்" என்று பதிலளித்தேன்.

உபதேசம் அறுபத்து நான்கு

ஒரு நாள் பிரச்சினை ஒன்று என் மனதைக் குழப்பிக் கொண் டிருந்தது; அதனால் என் அந்தரங்கமே பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது, சூழ்நிலையை விட்டு விலகி ஆஸ்வாசமடைய அது விரும்பிற்று. நான் விரும்புவது என்ன என்று என்னிடம் வினவப்பட்டது. ஜீவன் இல்லாத மரணமும் மரணமில்லாத ஜீவனும் எனக்கு வேண்டும்" என்று கூறினேன்.

ஜீவனில்லாத மரணம் எத்தகையது என்று என்னிடம் வினவப்பட்டது நான் சொன்னேன்: "என் இனத்தாரிடமிருந்து நான் மரணமடைந்து, அவர்களை நல்ல நிலைமையிலோ கெட்ட நிலைமை யிலோ நான் பார்க்க முடியாததும், என் கீழான மனத்திடமிருந்தும், இம்மை மறுமைகளில் உண்டாகும் இச்சைகளில் இருந்தும், நோக்கத்திலிருந்தும் மரணமடைதலும், அதன் மூலம் இவற்றில் எதனோடும் நான் இருக்காதபடியும், காணாதபடியும் செய்யும் மரணமே ஜீவனில்லாத மரணம், என் ரக்ஷகனின் செயலால் எனக்குக் கிடைக்கும் ஜீவனில் எனக்கு உயிர் இல்லாமலும், என் மரணத்தால் அவனுடன் ஜீவித்திருக்க இயல்வதாகவும் உள்ள ஜீவனே மரணமில்லாத ஜீவனாகும். எனக்கு விளக்கமேற்பட்டது முதல் இதுவே என் நோக்கங்களிலெல்லாம் விலைமதிக்க ஒண்ணாததாக விளங்கி வருகிறது."

உபதேசம் அறுபத்து ஐந்து

உன் தொழுகை ஏற்கப்படுவது காலதாமதமாவது குறித்து உன் இறைவனிடம் நீ ஏன் கோபங்கொள்ள வேண்டும்? ஜனங்களிடம் எதையும் கேளாதபடி நீ தடுக்கப்பட்டிருப்பதாயும், அவனிடமே யாவையும் கேட்க வேண்டுமெனக் கட்டளையிடப்பட்டிருப்பதாயும், அவனிடம் பிரார்த்திக்கும்போது, அதற்கு அவன் பதிலிருக்கிறானில்லை என்றும் நீ கூறுகிறாய், இதுபற்றி நான் கேட்கும் கேள்வி இதுதான்: நீ சுதந்திரமானவனா, அல்லது அடிமையா? நீ சுதந்திரமானவன் என்று கூறினால் நீ நிராகரிப்பவன் ஆகிவிடுகிறாய், நீ அடிமைதான் என்று ஒப்புக்கொண்டால், உன் பிரார்த்தனை ஏற்கப்படுவதில் காலதாமதம் நேர்வது குறித்து நீ உன் எஜமானன் மீது குறைகூறுவது சரியா? அவன் அறிவிலும், உன் விஷயத்திலும் சிருஷ்டி யாவற்றினிடத்திலும் அவனுக்கு உள்ள கருணையிலும் சகலவற்றையும் அறிந்த அவன் ஞானத்திலும் நீ ஐயமடைவது சரியா? அவன்மீது நீ குறை கூறுபவனாகிவிடவில்லையா? எனவே, அவன் மீது குறை கூறவில்லை என்றால், அவன் அறிவையும், நோக்கத்தையும், உன் பிரார்த்தனையை ஏற்பதில் தாமதப்படுவதற்குப் பிரத்தியக்ஷப் பூர்வமான அவசியத்தையும் நீ ஒப்புக் கொண்டிருந்தால் நீ அவனுக்கு நன்றி செலுத்த வேண்டுவத உன் கடமையாகும். ஏனெனில்,

உன் விஷயத்தில் அவன் சிறந்த, உனக்குப் பாக்கியமான, தீமையை அகற்றும் வழியைக் கைக்கொண்டுள்ளான். இவ்விஷயத்தில் நீ அவன்மீது குறைகூறினால் அவன்மீது குறைகூறுவதால் நிராகரிப்பவன் ஆகிறாய். தன் அடியார்களிடம் அநியாயமாகவே நடந்து கொள்ளாத வனை இதன் மூலம் நீ அநியாயக்காரன் என்று கூறிவிடுகி றாயல்லவா! அவன் எந்த அநியாயத்தையும் அனுமதிப்பதில்லை; அதனால் அநியாயமாக நடப்பது முடியவே முடியாத காரியம். அவன் உன் எஜமானனாயும், சகலவற்றின் எஜமானனாயும் இருக்கிறான். எஜமானனுக்கு அவன் விரும்பிய அளவு தன் உடமைகளின் மீது பரிபூரணமான அதிகாரம் உண்டு. எனவே, 'அநியாயம்' என்ற வார்த்தை அவனுக்குப் பொருந்தாது; அநியாயக்காரன் யார் எனின், மற்றொரு வனின் உடமையில் அவர் அனுமதியின்றித் தலையிடுபவன் தான்.

எனவே, அவன் உன் மூலம் வெளியிடும் தன் செயல் குறித்து அதிருப்தி அடையாதே! அஃது உன் விருப்பத்துக்கும் உன் கீழான மனத்தின் விரப்பத்துக்கும் விரோதமானதாய் இருப்பினும், புறத்தே அஃது உனக்குத் தீங்கு செய்யினுங்கூட அதுபற்றி அதிருப்தி அடையாதே! அவனிடம் நன்றியுடனும் விஸ்வாசத்துடனும், பொறுமை யுடனும், மகிழ்வுடனும் நடந்து கொள்ளவேண்டும். குறை கூறலையும் அதிருப்தியையும், கீழ்ப்படிய மறுக்கும் மனப்பான்மையையும், மனோ இச்சைகளையும் நீ புறக்கணிக்க வேண்டும். இல்லையேல், இவை உன்னை அல்லாஹ்வின் பாதையிலிருந்து வழி கெடுத்துவிடும். தொழுகையிலும், அவனிடம் இறைஞ்சுவதிலும், உன் இறைவனைப் பற்றி நன்னோக்கங் கொள்வதிலும், நல்ல காலத்தை எதிர்நோக்கிக் கொண்டிருப்பதிலும், அவன் வாக்குறுதியில் நம்பிக்கை வைப்பதிலும், நீ அவனிடம் இருந்து அதிகமாக எதையும் எதிர்பாராதிருப்பதிலும், அவன் கட்டளைப்படி நடப்பதில் ஒழுங்குமுறை தவறாதிருப்பதிலும், ஏகத்துவத்தைப் பாதுகாப்பதிலும், அவன் ஏவல்களை நிறைவேற்றலில் அவசரங் காட்டுவதிலும், அவன் விலக்கியவற்றை விட்டு வரையறையாக ஒதுங்குவதிலும், உன் சம்பந்தப்பட்ட அவன் கட்டளைகளும் செயல்களும் வெளிப்படுகையில் மரணித்த ஒருவனன் நிலையிலிருத்தலிலும் நீ பிடிவாதமாக நடந்து கொள்ள வேண்டும்.

அப்படியே நீ நம்பிக்கைக் குறைவானவனாய் இருந்து, குறைகூற வேண்டியதிருந்தால், உன் கீழான மனத்தையே குறை கூறிக்கொள்.

அதுவே நல்லது, உன் இறைவன் அநியாயம் செய்கிறான் என்று குறை கூறுவதைவிட உன் கீழான மனம் அப்படிச் செய்கிறது என்று கூறுவது மிகவும் பொருத்தமாகும். ஏனெனில், உன் கீழான மனம் இயல்பாகவே தீமையைத் தூண்டுவதாகவும், தன் இறைவனுக்குப் பணிய மறுப்பதாகவும் இருக்கிறது. எனவே, உன் கீழான மனத்தின் இஷ்டப்படி நடக்கவோ, அதனோடு நேசம் பாராட்டவோ, சகல நிலைமைகளிலும் அதன் சொல்லாலோ செயலாலோ திருப்தியுறவோ செய்யாது எச்சரிக்கையாய் இருந்து கொள்! அஃது அல்லாஹ்வுடையவும் உன்னுடையவும் எதிரியாகும்: அல்லாஹ்வுடையவும் உன்னுடையவும் எதிரியான ஷைத்தானின் நண்பன் ஆகும், ஷைத்தானின பிரதிநிதி யாகவும், ஒற்றனாகவும், அவனிடம் உண்மை கொண்டதாகவும் அது விளங்குகிறது.

அல்லாஹ்வுக்கு அஞ்சு! மீண்டும் அல்லாஹ்வுக்கு அஞ்சு! எச்சரிக்கை, எச்சரிக்கை! தப்பிவிடு! தப்பிவிடு! உன் கீழான மனம் அநீதி செய்தது என்று அதன் மீது குற்றஞ்சாட்டி, அதனிடம் இந்தத் திருகுர்ஆன் வசனங்களை ஓதிக்காட்டு:

"நீங்கள் அல்லாஹ்விடம் விஸ்வாசம் கொண்டவர்களாக, மெய்விஸ்வாசிகளாக இருப்பின் அல்லாஹ் ஏன் உங்களுக்கு வேதனையளித்து உங்களைத் தண்டிக்க வேண்டும்?' (4 : 147)

"உங்கள் கைகளால் தேடிக்கொண்டதுதான் (இவ்விதம்) நேர்ந்திருக்கக் காரணமாகும்; நிச்சயமாக, அல்லாஹ் தன் அடியார் களிடங் கொஞ்சமும் அநியாயமாக நடந்து கொள்வதில்லை" (3 : 182)

நிச்சயமாக, அல்லாஹ் மானிடருக்குக் கொஞ்சமும் தீங்கிழைப் பதில்லை; ஆனால், தங்களுக்குத் தாங்களே அவர்கள் தீங்கு உண்டாக்கிக் கொள்கின்றனர்."(10 : 44)

இந்தத் திருவசனங்களையும், இதுபோன்ற பிற திருவசனங் களையும், ஹதீஸ்களையும் உன் கீழான மனத்திடம் படித்துக் காட்டு.

அல்லாஹ்வுக்காக உன் கீழான மனத்திடம் சதா போராடிக்கொண்டிரு. அவன் சார்பில் அதனுடன் பகைமை பாராட்டிப் போராடு; அதைக் கொன்றுவிட முயல்; அவன் சைனியங்களின் தலைவனாய் இரு. ஏனெனில், அல்லாஹ்வின் பகைவர்களிலெல்லாம் உன் கீழான மனம்தான் பெரும் பகைவனாய் இருக்கிறது. அல்லாஹ் சொன்னான்: "தாவூதே, உம் இச்சையை அகற்றும்; ஏனெனில், அது உம்மை அல்லாஹ்வின் பாதையிலிருந்து தவறிவிடும்படி செய்வதாய் இருக்கிறது" (38 : 26) என்று.

உபதேசம் அறுபத்து ஆறு

"எனக்காக ஒன்று ஒதுக்கப்பட்டிருப்பின் அது நிச்சயம் எனக்கு கிடைக்குமே; எனக்காக ஒதுக்கப்படாத ஒன்றுக்காக நான் அல்லாஹ் விடம் எவ்வளவு தான் கேட்டாலும் அது வரப்போவதில்லையே! அதனால் நான் எதற்காகவும் அல்லாஹ்விடம் இறைஞ்சிக் கேட்க மாட்டேன்" என்று சொல்லாதே! இம்மை மறுமைக்குரிய ஆகுமான, தீங்கற்ற, நல்லவைகளுக்காக நீ அல்லாஹ்விடம் இறைஞ்ச வேண்டும். ஏனெனில், அல்லாஹ் தன்னிடமிருந்து கேட்கும்படி கட்டளையிட்டு வற்புறுத்தியுள்ளான். "என்னிடமே கேளுங்கள்; உங்கள் பிரார்த்த னைகளை நான் ஏற்றேன்" (40 : 60) என்றும், "அல்லாஹ்விடமிருந்து அவன் நல்லருளைக் கேளுங்கள்" (4 : 32) என்றும் அவன் கூறியுள்ளான். "உங்கள் பிரார்த்தனை ஏற்கப்படும் என்று நீங்கள் முற்றும் நம்பிக்கையுடன் இருப்பின் அல்லாஹ்விடம் இறைஞ்சுங்கள்" என்றும், "உங்கள் உள்ளங்கைகளை அல்லாஹ்விடம் ஏந்தி இறைஞ்சுங்கள்" என்றும் நபி பெருமான் (ஸல்) அவர்களும் அருளியுள்ளார்கள். இது போன்று மற்றும் பல ஹதீஸ்களும் இருக்கின்றன. "நான் சில வஸ்துக்களை நாடி அவனிடம் இறைஞ்சினேன்; ஆனால், அவன் அவற்றை எனக்குத் தரவில்லை. அதனால் இனி நான் எதையும் அவனிடம் கேளேன்" என்று கூறாதே. பிரார்த்தனையில் நீ விடாப்பிடியனாய் இருக்கவேண்டும். அப்போது, அவை உனக்கு விதிக்கப்பட்டவையாய் இருப்பின், நீ கேட்டபின் அவற்றை உனக்கு அனுப்புவான்; அதனால் உன் மெய் விஸ்வாசம் அதிகமாகும்; உன் ஏகத் துவ உணர்வு பலப்படும்; ஜனங்களிடமிருந்து நீ எதையும் பெறாதிருக்க உதவும்; சகலவித நிலைமைகளிலேயும் அவனிடமே நீ திரும்பவும், உன் தேவைகளெல்லாம் அவனாலேயே பூர்த்தி செய்யப்படும் என்ற நம்பிக்கை உறுதிப்படவும் இது துணைச் செய்யும்.

அப்படியின்றி நீ கேட்பவை உனக்கு விதிக்கப்படாதவைகளாய் இருப்பின், அவை பற்றி உனக்கு மனத் திருப்தியைத் தருவான்; உன் வறுமையிடையும் இறைவன் தன்னிடம் நீ மனப்பொருத்தம் காட்டச் செய்வான். நீ மிடிமையாலும் பிணியாலும் வாடினால், அவற்றைக் கொண்டும் நீ திருப்தியுறும்படியும் செய்வான். நீ கடன்பட்டவனாய் இருப்பின், கடன் கொடுத்தவன் மனத்தை உன் விஷயத்தில் கடுமை ஆனதாய் இல்லாது செய்து, உன்னிடம் பரிவு காட்டி, உன்னால் கொடுக்கமுடியும் சமயம் அதைப் பெற்றுக் கொள்ள இசையுமாறோ, அல்லது நீ கொடுக்க வேண்டிய கடன் தொகையையே விட்டுக் கொடுக்குமாறோ, குறைக்குமாறோ செய்வான். அப்படியே இம்மையில் அது விட்டுக் கொடுக்கப்படவோ குறைக்கப்படவோ இல்லாது போயின், மறுமையில் உன் பிரார்த்தனைகளுக்குச் சமமானமாக பெரும் வெகுமதியைத் தருவான்; ஏனெனின் அவன் தயாநிதியாகவும் தேவையற்றவனாகவும், கருணையாளனாகவும் இருக்கிறானன்றோ!

எனவே, பிரார்த்திப்பவர்களை அவன் இம்மையிலும் மறுமை யிலும் ஏமாற்றமடையச் செய்வதில்லை ஆகையால் பிரார்த்தனையால் விரைவிலோ காலதாமதமாகவோ நன்மை கிடைக்கவே செய்யும். மறுமை நாளில் ஒரு மெய்விஸ்வாசி தன் விதிவசப் பட்டோலையில், தான் செய்யாத, செய்ததாக ஞாபகம் இல்லாத சில நற் செயல்களுக்கான நன்கொடைகள் பதிவாகியிருப்பதைக் காண்பான் என்றும், அப்போது, "அவற்றை நீ இனம் கண்டுபிடிக்க முடிகிறதா!" என்று அவனிடம் கேட்கப்படும் என்றும்" "இவை எப்படி வந்தன என்று எனக்குத் தெரியாது" என்று அவன் கூறுவான் என்றும், அதற்குக் கீழ்க் கண்ட விதமாகப் பதில் கூறப்படும் என்றும் ஹதீஸில் வந்துள்ளது; "நிச்சயமாக உன் உலக வாழ்க்கையில் நீ செய்த முறையீடுகளுக்கு இவை வெகுமானங்களாய் இருக்கும். அந்த முறையீடுகளை நீ அல்லாஹ்விடம் செய்து கொண்டதில், அவனை நினைவு கூர்ந்தவனாய், ஏகத்தவத்தை மனத்தில் கொண்டவனாய், எதையும் அதற்கு உரிய ஸ்தானத்தில் வைத்தவனாய், யாருக்கும் உரியதைக் கொடுத்தவனாய், உன் மனதுக்குச்சக்தியும், பலமும் இருப்பதாய் கூறாதவனாய், அகந்தை யையும் டம்பத்தையும் வீண் பிரதாபத்தையும் ஒதுக்கி யவனாய் இருந்திருக்கிறாய்; இப்படி இருப்பது

சர்வ சக்தனான அல்லாஹ்வின் சந்நிதானத்தில் சம்மானம் அளிக்கப்படுவதற்குரிய நற்செயலாகக் கருதப்படுகிறது.”

உபதேசம் அறுபத்து ஏழு

உன் கீழான மனத்தோடு போராடி, அதை வென்று எதிர்ப்பெனும் வாளால் அதை நீ கொல்லும் ஒவ்வொரு தடவையிலும் அல்லாஹ் அதற்குப் புத்துயிர் தருகிறான்; அஃது அவனோடு மீண்டும் மோதும்; உன்னிடமிருந்து இச்சைகள் பூர்த்தியாவதை கேட்கும்; பாவகரமான மற்றும் பிற சுகபோகங்களை அனுபவிக்குமாறு தூண்டும். அதனால் நீ மீண்டும் அதனோடு போராட நேரும். இவ்விதம் நீ போராடி வெற்றி கொள்ளும் போதெல்லாம் உன் கணக்கில் புதிய புதிய நன்கொடைகள் எழுதப்படும். “நாம் ஒரு சிறிய ஜிஹாதிலிந்தும் (அதாவது காபிர்களோடு போரிட்டதிலிருந்து) திரும்பி ஒரு பெரிய ஜிஹாதில் இறங்கியுள்ளோம்” என்று நபிபெருமான் (ஸல்) அவர்கள் சொல்லி இருப்பதன் கருத்து இதுதான். அதாவது அவர்கள் திரும்பியுள்ளதாகக் குறிப்பிட்டது இச்சைகளுக்கும், போகங்களுக்கும், கீழான மனம் பாவமான காரியங்களில் இழுப்பதற்கும் எதிராகப் போராடு வதைத்தான். “மேலும், ‘எகீன்’ (எனும் மரணம்) உம்மை வந்தடையும் வரை உம் இறைவனுக்குச் சேவை செய்வீராக!'' (15 : 99) என்று அல்லாஹ் அருளியுள்ளதன் அர்த்தமும் இதுவேயாம். அல்லாஹ் தன் நபியைத் தனக்குச் சேவை செய்யுமாறு உத்தரவிட்டுள்ளான். இதன் கருத்து, மனிதன் தன் கீழான மனத்தை எதிர்த்துச் சாடுதலேயாம். ஏனெனில் கீழான மனத்தின் இயல்பு அவ்விதச் சேவையைச் செய்யவிடாது. அதற்கு நேர் எதிரிடையான காரியங்களைச் செய்யும்படி தூண்டுவதாகும் அல்லாஹ்வின் தூதருக்குத் தேக இச்சைகள் எதுவும் இல்லையே அப்படியிருக்க, அவர்களின் மனம் அல்லாஹ்வுக்குச் சேவை செய்வதைத் தடுப்பது எங்ஙனம் என வினவப்படலாம். அல்லாஹ் சொல்கிறான்: “அவர் தம் இஷ்டப்படி எதையும் பேசவில்லை: இஃது அவருக்கு தெய்வ விதிப்பில் இறக்கப்பட்டதேயன்றி வேறன்று'' (53 : 3, 4) என்று. இவ்விஷயம் பற்றி ஊர்ஜிதம் செல்வதற்காகவே அல்லாஹ் தன் நபிக்கு இவ்வசனங்களை இறக்கியுள்ளான் என்று உன்னிடம் கூறப்படும். இவற்றின் மூலம்

அவர்களுக்கு இடப்பட்ட உத்தரவு, (மரணம் வரும்வரை அல்லாஹ்வுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற உத்தரவு) அவர்களைப் பின்பற்றியோர்கள் அனைவருக்கும் பொருந்துமாறு வெளியிடப் பட்டுள்ளது, இதன்பின், அல்லாஹ் தன் நபிக்கு, அவர்கள் மனத்தின்மீது அதிகாரத்தைக் கொடுத்தான்; அதன் மூலம் அது அவர்களுக்குத் தீங்கிழைக்காமலும் அதனுடன் போராடும் அளவுக்குச் சங்கடம் விளைவிக்காமலும் இருக்கச் செய்தான். இதுதான் பெருமானாரை, அவர்களைப் பின்பற்றியோர்களிலிருந்து பிரித்துக் காட்டுவதாகும். எனவே ஒரு மெய் விஸ்வாசியானவன் தன் மரண காலம் வரும்வரை இதுபோன்ற ஆத்மீகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவானாயின், தன் கீழான மனத்தையும், இச்சைகளையும் குத்திய இரத்தம் தோய்ந்த வாளுடன் தன் இறைவனைச் சந்திப்பானாயின், கீழுள்ள பாக்கியத்தில் தான் விவரித்துள்ள சொர்க்கத்தை அல்லாஹ் அவனுக்குக் கொடுப்பான்: “தன் இறைவனின் முன் (விசாரணைக்காக) நிற்பதை(ப் பற்றி) அஞ்சி, தன் ஆத்மாவைக் கீழான இச்சைகளை விட்டு விலகிக் கொண்டவனுக்கு நிச்சயமாக (ச்சுவன)த் தோட்டம் உறைவிடமாய் உள்ளது.”(79 : 40, 31)

அவனை அத்தோட்டத்தில் நுழையச் செய்தபின் அதையே அவன் சாவஸ்தலமாக, இளைப்பாறும் இடமாக ஆக்கிவிடுவான்; இம்மை வாசஸ்தலங்களுக்கோ வேறு மாற்றிடங்களுக்கோ அனுப்பாதபடி அங்கேயே இருக்கச் செய்வான். சுகத்திற்கான சாதனங்களை நாளுக்கு நாள் நாழிகைக்கு நாழிகை அவனுக்குப் புதுப்பித்துக் கொடுப்பான். முடிவில்லாத முறையில் சகலவித ஆடை ஆபரணங்களையும் அளித்து வருவான்; அஃது அந்த அடியான் இம்மையில் தன் கீழான மனத்தை எதிர்த்து நாளுக்கு நாள், நாழிகைக்கு நாழிகை புதுப் புதுப் போராட்டம் நடத்தியது போன்று புதியன புதியனவாய் இருக்கும்.

ஆனால், நிராகரிப்பவனும், நயவஞ்சகனும், பாவ ஆத்மாவும் தங்கள் கீழான மனத்துடனும் இச்சைகளுடனும் போராடுவதைவிட்டு, ஷைத்தானுடன் தொடர்பு கொண்டு, அவனைப் பின்பற்றி, இணை வைத்தல் போன்ற பல்வேறு பாவ காரியங்களைச் செய்து இஸ்லாத்தைத் தழுவி நடக்காது, பாவமீட்சி தேடாது மரணிப்பார்கள்; அல்லாஹ்

அவர்களை நிராகரிப்பவர்களுக்கான நெருப்பில் – 'மனிதர்களும் கற்களும் விறகாகப் பயன்படும் (நரக) நெருப்பிலிருந்து காத்துக் கொள்ளுங்கள்; அது நிராகரிப்பவர்களுக்காகத் தயாராக்கப்பட்டுள்ளது" (2 : 24) என்று வருணிக்கப்பட்டுள்ள நெருப்பில் போடச் செய்வான். அவன் அவர்களை அந்நெருப்பில் நுழையச் செய்து, அதையே அவர்கள் புகலிடமாக்கியது. அது அவர்கள் தோலையும் சதையையும் தீய்க்கும்; "அவர்கள் சருமங்கள் எவ்வளவு விரைவில் முற்றும் கருகித் தீய்ந்து போகின்றனவோ அவ்வளவு விரைவில் அவர்களுக்கு நாம் புதிய சருமங்களைக் கொடுப்போம்" (4 : 56) என்று இறைவன் அருளி உள்ளது போல, அவர்களுக்கும் புதிய தோலும் சதையும் தரப்படும்; பாவஞ்செய்வதில் அவர்கள் தங்கள் கீழான மனத்துடனும், இச்சைகளுடனும் இம்மையில் ஒப்பந்தஞ் செய்து கொண்டிருந்ததாலேயே அவன் இவ்விதம் தண்டிக்கிறான். மீண்டும் மீண்டும் வேதனையும் தண்டனையும் அனுபவிக்கப்படுவதற்காக நரகவாசிகளின் இன்பங்களோ மீண்டும் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு அவற்றில் அவர்கள் திருப்தியடையும்படி செய்யப்படுகின்றனர். அவர்கள் தங்கள் கீழான மனத்துடன் போராடி, இம்மையில் (அல்லாஹ்வின் சட்டத்துக்குப் பணிந்து) அதற்கு ஒப்ப நடந்ததற்காகவே இந்த நன்கொடை அருளப்படுகிறது, "மறுமைக்கு இம்மை பயிற்சி நிலமாகும்" என்ற பெருமானார் திருமொழிக்கு இதுவே பொருளாகும்.

உபதேசம் அறுபத்து எட்டு

அல்லாஹுத் தஆலா தன் அடியானின் பிரார்த்தனையை ஏற்று அவன் கேட்பதை அவனுக்கு அருளும்போது அதன் மூலம் அல்லாஹ்வின் நோக்கமோ, எதை (விதிவசப்பட்டோலையை) எழுதிய பேனாவும் காய்ந்து விட்டதோ அந்த எழுத்தோ அல்லது எது ஏற்கனவே, தெய்வச் சித்தத்தில் உண்டாகியிருந்ததோ அதுவோ மாறுபடுவதில்லை. அத்தகைய பிரார்த்தனை ரக்ஷகனின் நோக்கத்தோடு இசைந்ததாய், அதற்கு உரிய நேரத்தில் செய்யப்படுவதாக அமைந்து விடுகிறது, எனவே பிரார்த்தனை ஏற்கப்பட்டுத் தேவை பூர்த்தி செய்யப்படுவது, காலத்தில் தொடக்கத்திலேயே விதிவசத்தால் நிர்ணயிக்கப்பட்டு குறித்த நேரத்தில்

பூர்த்தியாவதற்காகக் காத்திருந்ததாகவே அந்த அருள் இறங்குகிறது. "ஒவ்வொரு நாளும் (கணமும்) அவன் (அல்லாஹ்) புதிய நிலையில் இருக்கிறான்" (55 : 29) என்ற திருமறை வாக்கை விளக்கிய ஞானநாதர்கள் சொல்லும் விளக்கமாவது: தெய்வ ஏற்பாட்டின் (தக்தீரின்) நிர்ணயங்களை அல்லாஹ் அவற்றுக்கான் குறித்த நேரத்தை நோக்கி விரட்டுகிறான். அதனால் ஒருவன் பிரார்த்தித்தான் என்பதற்காக மட்டும் எதையும் அவனை விட்டு அப்பாலாக்கி விடுவதுமில்லை. இதுபற்றியுள்ள நபி பெருமான் (ஸல்) அவர்கள் வாக்கியத்திற்கு அர்த்தம். இன்ன விதியை மாற்ற இன்ன பிரார்த்தனையை இறைஞ்சினால் முடியும் என்று ஏற்கனவே தெய்வ ஏற்பாட்டில் உள்ளதோ அந்தக் காரியத்துக்காக அந்த பிரார்த்தனையைச் செய்தாலொழிய அதனால் ஆகக்கூடிய காரியத்தை அல்லாஹ் ஆக்கி வைப்பது இல்லை, இதுபோன்றே யாரும் அல்லாஹ்வின் கருணையாலன்றித் தன் நற்செயல்களால் மட்டும் மறுமையில் சொர்க்கமடைந்து விடுவதில்லை. ஆயிஷா நாயகி (ரலி) அவர்கள் நபி பெருமான் (ஸல்) அவர்களிடம் "தன் செயல்களால் மட்டும் யாராவது சொர்க்கம் புகுவார்களா?" என்று வினவினார்கள், அதற்கு நபி பெருமான் (ஸல்) அவர்கள், "மாட்டார்கள், அல்லாஹ்வின் கருணை கிட்டினாலன்றி" என்று பதிலளித்தார்கள். இதற்கு ஆயிஷா நாயகி (ரலி) அவர்கள் "நீங்கள் கூடவா?"என்று வினவினார்கள் "ஆமாம், அல்லாஹ் தன் கருணையால் என்னைப் பொதிந்தாலன்றி, நானுங்கூடத்தான் (சொர்க்கத்தில் நுழைய முடியாது)" என்று பெருமானார் பதிலளித்தார்கள். அப்போது அவர்கள் தங்கள் கரத்தைத் தங்கள் சிரசின்மீது வைத்துக் காட்டினார்கள்.

அல்லாஹ்வுக்கு எதிராக யாருக்கும் எவ்வுரிமையும் கிடையாது; எந்த வாக்கையும் நிறைவேற்ற வேண்டிய கடமை அவனுக்கு இல்லை என்று காட்டவே நபி பெருமான் (ஸல்) அவர்கள் இவ்விதம் செய்தார்கள். அவன் தன் சித்தப்படி நடக்கிறான். தான் இஷ்டப் பட்டவர்களை அவன் தண்டிக்கிறான். தான் இஷ்டப்பட்டவர்கள் மீது கருணை பொழிகிறான். தான் விரும்பியதைச் செய்ய அவன் சர்வ சக்தனாக உள்ளான். அவன் செய்வது பற்றி யாரும் வினவக் கூடாது; ஆனால், அவன் தன் அடியார்களிடம் கேள்விக் கணக்குக் கேட்பான். தான் விரும்பியவர்களுக்குத் தன் அருளாலும் கருணையாலும் படி அளக்கிறான்;

தன் நீதியை நிலை நாட்டுவதில், தன் இஷ்டப்படி சிலரிடமிருந்து தன் அருட்கொடைகளை அகற்றவும் செய்கிறான். இது வேறு எவ்விதமும் இருக்க முடியாது; அவனுடைய பீடம் தொட்டு ஏழாம் பாதாளம் வரை யாவும் அவன் ஆதிக்கத்திலுள்ளன; அவனால் சிருஷ்டிக்கப்பட்டவைகளாய் விளங்குகின்றன. அவை யாவற்றுக்கும் அவனையன்றி வேறு எஜமானன் இல்லை; அவனையன்றி அவற்றைச் சிருஷ்டித்தவனும் வேறு யாருமில்லை. அல்லாஹ் சொல்கிறான், 'அல்லாஹ்வையன்றி வேறு சிருஷ்டிகர்த்தா உண்டா?"(35:3), "அல்லாஹ்வோடு வேறு இறைவன் உண்டா?"(27:63) "அவனுடைய தன்மைக்குச் சமமான (தன்மையுடைய) யாரையாவது உங்களுக்குத் தெரியுமா?" (19:65) என்றும், "சொல்வீராக! எங்கள் அல்லாஹ்வே சகல ராஜ்யங்களுக்கும் அதிபதியே, நீ விரும்பியவர்களுக்கு அட்சியை அளிக்கிறாய்; நீ விரும்பியவர்களிடமிருந்து ஆட்சியை அகற்றுகிறாய்; நீ விரும்பியவர்களைக் கீழான நிலையிலாக்குகிறாய்; சகல நன்மைகளும் உன் வசமே உள்ளன. நிச்சயமாகச் சகலவற்றின் மீதும் உனக்கே அதிகாரம் உள்ளது. நீ விரும்பியவர்களுக்குக் கணக்கின்றி அருளுகிறாய்,(3:26,27) என்றும் அல்லாஹ் சொல்லியுள்ளான்.

உபதேசம் அறுபத்து ஒன்பது

கடந்த காலப் பாவங்களின் மன்னிப்பையும், நிகழ்கால வருங் காலப் பாவங்களிலிருந்து பாதுகாப்பையும், நல்ல முறையில் அவனுக்குக் கீழ்ப்படியவும், கட்டளைகளை நிறைவேற்றவும், விலக்கப்பட்டவற்றை ஒதுக்கவும், விதிவசத்தின் கசப்புக் குறித்து மனப் பொருத்தங்காட்டவும், துயரங்களின் கடுமையின்முன் பொறுமையுடன் இருக்கவும், பெருத்த செல்வங்களும், நன்கொடைகளும் இருக்கையில் நன்றி செலுத்தவும், கடைசியாக நல் மரணமடைந்து நபி மார்கள், ஸித்தீகீன்கள், ஷுஹாதாக்களின் கூட்டத்தில் சேரவும் சக்தியை இரப்பதையன்றி அல்லாஹ்விடம் வேறு எதையும் கேளாதே! வறுமையையும் துயரத்தையும் அகற்றவேண்டும் என்றோ, செல்வம் பெருகிச் சுகமுண்டாகவேண்டும் என்றோ கேளாதே; அவன் ஒதுக்கியுள்ளது குறித்து மகிழ்ச்சியடையும் மனப்பாங்கைக் கேள்; அவன் உன்னை வைத்துள்ள நிலையிலிருந்து அதற்கு மாற்றமான நல்ல நிலையில் வைக்கும் காலம்வரை அவன்

பாதுகாப்பை அருளுமாறு கேள். ஏனெனில் வறுமையிலா செல்வத்திலா, எதில் நன்மையிருக்கிறது என்று நீ அறிவாய். இது பற்றிய ஞானம் மறைவானதாய் அவனிடம் உள்ளது. அந்த ஞானம் அவனுக்கே உரியது. ஹஜ்ரத் உமர் இப்னு கத்தாப்(ரலி) அவர்கள் மூலம் வந்துள்ள நபிமொழி ஒன்றில் 'நாளின் உதயம் எப்படி ஆரம்பிக்கிறது–அது நான் வெறுப்பதைக் கொண்டு வருகிறதா, விரும்புவதைக் கொண்டு வரு கிறதா என்பது பற்றி எனக்கு அக்கறையே இல்லை. காரணம் அவற்றில் எதனால் நன்மையுண்டாகும் என்று நான் அறியேன்" என்று நம் பெருமான் (ஸல்) அவர்களே கூறியுள்ளதாகக் காணப்படுகிறது. அவர்கள் இவ்விதங் கூறக்காரணம் அல்லாஹ்வின் ஏற்பாட்டுடன் அவர்கள் பூரணப் பொருத்தமும் அவன் கட்டளையுடன் பூரணத் திருப்தியும் கொண்டிருந்ததேயாகும். அல்லாஹ் சொல்கிறான்: 'போரிடுவது உங்களுக்கு வெறுப்பானதாய் இருப்பினும், அஃது உங்கள்மீது கடமையானதாக ஆக்கப்பட்டுள்ளது. உங்களுக்கு மிகவும் நன்மை ஆன ஒன்றை நீங்கள் வெறுக்கவும், உங்களுக்குத் தீமையான ஒன்றை நீங்கள் விரும்பவும் கூடுமல்லவா!" (2 : 216) எது நல்லது. எது கெட்டது என்பதை அல்லாஹ் அறிவான்; நீ அறியமாட்டாய்.

உன் இச்சை மறைந்து, உன் கீழான மனம் உடைந்து பணிவுபட்டு அடக்கப்படும் வரை இவ்விதமே நடந்துவா! பின்னர் உன் நோக்கமும், விருப்பங்களும் சகல ஜீவிதமும் உன் இதயத்தை விட்டகலும்; அங்கே அல்லாஹ்வைத் தவிர வேறு எதுவும் தங்கியிராது. அப்போது அல்லாஹ்வின் அன்பால் உன் இதயம் நிறையும்; அவனை அடையவேண்டும் என்ற உன் நோக்கம் அந்தரங்க சுத்தியானதாகும். அதன்பின் அல்லாஹ்வின் கட்டளையாலும், இம்மை மறுமையின் சுகத்தை ஓரளவு அனுபவிக்க வேண்டும் என்ற உன் ஆசையாலும் உன் நோக்கம் உன்னிடம் திருப்பித் தரப்படும். இவற்றுக்காக நீயும் அல்லாஹ்விடம் வேண்டுவாய்; அவன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்ததும் அவனோடு இணங்கியும் இருந்தவாறு இவற்றைக் கேட்பாய். உனக்கு அவன் ஒரு நன்கொடை அளிப்பின், அதை ஏற்றுக்கொண்டு அவனுக்கு நன்றி செலுத்துவாய்; அவன் எதையாவது உனக்குத் தராது நிறுத்திக் கொண்டானென்றால் அதற்காக நீ மனந்தளராது, மனத்தில் எந்த

மாற்றமும் கொள்ளாது, அதற்காக அவன்மீது குறையுங்கூறாது இருந்து வருவாய். ஏனெனில், நீ உன் இச்சை காரணமாகவும்,நோக்கங் காரணமாகவும் அதை நாடவில்லை; உன் இதயம் தான் இது போன்றவற்றை விட்டு விடுதலையானதாயிற்றே! இவை கிடைக்க வேண்டும் என்று நீ விரும்பியது, உன் முறையீட்டின் மூலம் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து வந்ததால்தான். உன்மீது சாந்தி ஏற்படுவதாக!

உபதேசம் எழுபது

உன் செயல்களைப் பற்றி நீயே பெருமைப்பட்டுக் கொள்வதும், உன்னை நீயே பாராட்டிக் கொள்வதும், அவற்றுக்காகப் பிரதிபலனை எதிர்பார்ப்பதும், அவை அல்லாஹ் தந்த சக்தியால் வந்தவை என்றும் அவன் உதவியாலும் பலத்தாலும், நல்லருளாலும் கிடைத்து வந்தவை என்றும் நீ சொல்லிக் கொள்ளும் நிலையில் இவ்விதம் பெருமை பாராட்டிக் கொள்வது நற்செயலானது எப்படி? அது பாவத்தை விலக்கும் ஒரு செயலாயினுங்கூட, அதுவும் அவன் தரும் பாதுகாப்பின் மூலமும் உதவியின் மூலமும்தானே சாத்தியமானதாகிறது? அப்படி யிருக்க அதற்கு நீ நன்றி தெரிவிக்காமலும், உனக்கு அது கிடைக்கும் படி உதவியதற்கு விசுவாசங் காட்டாமலும் இருப்பதெப்படி? உன்னுடைய தல்லாத ஒரு தீரச் செயலுக்காக, ஒரு தயாளச் செயலுக்காக, வள்ளன்மைக்காக நீ அகந்தை காட்டும் அறிவீனமும், அடிபணியா மையும் ஏன்? உன் எதிரியை ஒழிக்கும் சக்தியுடைய ஒரு வீரனின் உதவியின்றி நீ உன் எதிரியை தொலைக்க இயலாத நிலையில், சுத்த வீரனுடைய உதவி இன்றேல், உன் எதிரிக்குப் பதிலாய் நீ வீழ்த்தவே பட்டிருப்பாய் என்றுள்ள நிலையில், உண்மையான தயாளமுள்ள, நம்பிக்கையான ஒருவன் உனக்கு உத்தரவாதமாக நிற்காத நிலையில் நீ உன் கையில் உள்ள முதலில் எதையுஞ் செலவிட முடியாது. அவனு டைய உத்தரவாதத்தாலும் வாக்குறுதியாலுமே, நீ செலவு செய்வதற்குப் பகரமாய் உனக்குப் பொருள் கிட்டும் என்ற பிரமாணத் தாலேயே நீ தருமஞ் செய்ய முன்வரும் நிலையில், உன் செயல் குறித்து நீ பெருமை பட்டுக் கொள்வதெப்படி?உதவியாளனுக்கு நன்றியும் துதியும் தெரிவித்து, அவனை ஓயாது துதித்து உன் வாழ்க்கையின் சகல நிலைகளிலும் உன் சாதனைகள் அவை தீமையானவையாயும், பாவகரமானவையாயும் குறை கூறக் கூடியவையாயும் இல்லாதிருந்தால்

அவை – அவனாலேயே உண்டானவை என்று நீ கூறி வருவதே சாலவும் சிறந்தது. தீமையான சாதனைகளாய் இருப்பின் அவை உன் கீழான மனத்தால் உண்டானவை என்று நீ உணர வேண்டும். உன் கீழான மனம் அநீதியானது, தவறிய ஒழுக்கமுடையது என்று நீ குறை கூற வேண்டும். ஏனெனில் சகல தீமைகளினதும் உறைவிடம் அதுவே; அதனால் அதன்மீது குறை சொல்வது மிகவும் பொருத்தமாகும். அல்லாஹுத் தஆலா உன் செயல்களையும் முயற்சிகளையும் உண்டாக்கி விடுகிறான் என்றால், முயற்சிகளைச் செய்பவன் நீதான்; அவன் அவற்றைச் சிருஷ்டிப்பவனே. 'செயல் வரும்; அதிலிருந்து நீ தப்ப முடியாது' என்று மெய்ஞ்ஞானத்தில் தேர்ந்த பெரியார்கள் சிலர் சொல்லியுள்ளதன் தாத்பரியம் இதுவேயாகும். 'நற்செயல்கள் செய்து அல்லாஹ்வுக்கு அருகிலாகுங்கள்; உங்கள் இதயத்தை நேர்மையின் பால் திருப்புங்கள்; ஒவ்வொருவருக்கும் அவர்களுக்குப் படைக்கப்பட்டது எதுவோ அது இலகுவாக்கப்பட்டுள்ளது" என்று நபி பெருமான் (ஸல்) அவர்கள் அருளியுள்ளதின் பொருளும் இதுவேதான்.

உபதேசம் எழுபத்து ஒன்று

நீ நாடுபவன் அல்லது நாடப்படுபவன் ஆகிய இரண்டில் ஒன்றாய் இருக்க வேண்டும். நீ நாடுபவன் ஆயின், உன்மீது சுமை ஏற்றப்படும்; கனமான சுமையை நீ சுமந்தே தீர வேண்டும். காரணம் நீ நாடுபவன்; நாடுபவன் தன் லட்சியத்தை எய்தும் வரை, தன் அன்பானவனை, தன் குறிக்கோளை அடையும்வரை பாடுபட்டேயாக வேண்டும். உன் மீதுள்ள சுமை இறக்கப்படும்வரை, துயரங்கள் உன்னை விட்டு அகற்றப்படும் வரை உன் உயிர், சொத்து, சுகம் குழந்தை குட்டி சம்பந்தமாக உண்டாகும் கஷ்டங்களை ஏற்காது நீ ஓட முயலக்கூடாது. எனவே, சகலவிதத் தீமைகளிலிருந்தும் அழுக்கு, அசிங்கம், தலைகுனிவு, பிணி, துயரம், ஜனங்களின் தேவை ஆகியவற்றிலிருந்தும் பாதுகாக்கப்பட்டவனாக்கப் படுவாய், அல்லாஹ்வால் நேசிக்கப்படும் ஜனங்களின் கூட்டத்தில் சேர்க்கப்பட்டு, அவனால் மிகவும் தயாளமாக ஊட்டப்படுவாய்.

ஆனால், நீ நாடப்படுபவனாய் இருப்பின், அதே விதம் துயரம் உண்டானால் அல்லாஹ்வைக் குறை கூறாதே! உன் நிலைமை பற்றியும்

ஸ்தானம் பற்றியும் கொஞ்சமும் ஐயங்கொள்ளாதே! காரணம், அவன் உன்னைச் சோதனைக்கு உள்ளாக்கியுள்ளது நீ உயர்ந்த பெரியார் களின் நிலையை எய்த வேண்டும், நீ இறைநேயர் ஒருவரின் ஸ்தானத்தை அடைய வேண்டும் என்று அவன் விரும்புவதுதான். உன் நிலைமை இந்த இறைநேயரின் நிலைமையைவிடத் தாழ்ந்ததாய் இருக்க வேண்டும். கண்ணிய உடையும், ஒளியும், ஆசியும் அவர் பெற்றிருப்பதைவிட வேறு விதமானவையாய் இருக்க வேண்டும் என்று நீ விரும்புகிறாயா? உன் கீழான அந்தஸ்தில் நீ திருப்தியடைந்தாலும், வல்ல கருணையாளன் அதில் திருப்தியடையமாட்டான். "மேலும் அல்லாஹ் அறிவானே அன்றி நீங்கள் அறியமாட்டீர்கள்" (2 : 232) என்று அவன் கூறியுள்ளானன்றோ! உனக்கு அவன் உயர்ந்த, ஒளி பொருந்திய ஸ்தானத்தை தேர்ந்தெடுத் துள்ளான்; நீயோ அது வேண்டாம் என்கிறாய்;

உங்கள் கூற்றுப்படி அன்பனுக்குத்தானே சோதனை உண்டாக வேண்டும்; அப்படியிருக்க, சம்பூரணமாக்கப்பட்ட அடியான் சோத னைக்கு உள்ளாக்கப்படுகிறான் என்று சொல்லுவது சரியாவது எப்படி என்று நீ வினவலாம் நாம் முதலில் பொதுவான நியதியைக் கூறினோம்; பிறகு அதற்குச் சாத்தியமான விதிவிலக்கைக் குறிப்பிட்டோம். நபி பெருமான் (ஸல்) அவர்களே அன்பர்களின் தலையாயவர்கள் என்பதில் அபிப்பிராயபேதம் இருக்க முடியாது; ஆனால், அதே சமயம் அதிகமும் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டதும் அவர்களாகத்தானே இருக்கி றார்கள்! "நான் அச்சமூட்டப்பட்டது போல யாரும் அச்சமூட் டப்படவில்லை; அதனால் நான் அல்லாஹ்வுக்கு அதிகமும் அஞ்சினேன். அல்லாஹ்வுக்காக நான் கஷ்டப்பட்ட அளவு யாரும் கஷ்டப்படும்படி செய்யப்படவில்லை. பிலாலின் கட்கத்தில் (அக்குளில்) வைக்கக்கூடக் காணாத அளவு உணவு இரவு பகல் கொண்ட முப்பது நாட்களில் எனக்குக் கிடைத்ததும் உண்டு'' என்று நபி பெருமான் (ஸல்) அவர்களே கூறியுள்ளார்கள். "நபிமார்களான நாங்கள்தாம் அதிகமும் சோதிக்கப் படுகிறோம்; எங்களுக்கு அடுத்தபடியாக அடுத்தடுத்த படித்தரங்களில் உள்ளவர்கள் சோதிக்கப்படுகிறார்கள்'' என்றும், "அல்லாஹ்வின் ஞானத்தை எய்தியுள்ளதில் நான் மிகவும் சிறந்தவன்; உங்கள் யாவரினும் அவனுக்கு மிக மிக அதிகமாய் அஞ்சுபவனும் நான்தான்" என்றும் அவர்கள் திருவாய் மலர்ந்தருளி உள்ளார்கள்.

தனது சிறந்த அடியார்களை, தனக்கு மிகவும் பிரியமானவர்களை அல்லாஹ் அவ்வளவு சோதனை செய்வதும் அவர்களுக்கு அதிகமாக அச்சமூட்டுவதும் ஏன்? நாம் ஏற்கனவே, குறிப்பிட்டபடி இதன் நோக்கம் அவர்களை வானின் உயரிய பதவிகளை அடையுமாறு செய்வதுதான். இம்மையில் செய்யப்படும் நன்மையான செயல்களின் மூலமன்றி, மறு உலக வாழ்க்கையின் தரம் உயர்த்தப்படமாட்டாது. இம்மையின் வாழ்க்கை, மறுமை வாழ்க்கைக்கான பயிர் செய்யும் நிலம் தான், நபிமார்களுடையவும், இறைநேயர்களுடையவும் நற்செயல்கள் ஏவல், விலக்கல்களின்படி ஒழுகி, சோதனை இடையில் பொறுமையுடனும், மனப்பொருத்தத்துடனும், மகிழ்வுடனும் இருப்பதுதான். அதன்பின் அச்சோதனை அவர்களை விட்டு அகற்றப்பட்டு, அல்லாஹ்வின் பாக்கியங்களையும், நல்லருள்களையும், பாதுகாப்பையும் அவர்கள் அனுபவிக்குமாறு செய்யப்படுகிறது. அவர்கள் தங்கள் இறைவனின் சந்நிதானத்தை நிரந்தரமாய் அடையும்வரை இவ்வாறு அருளப்படுகிறது.

உபதேசம் எழுபத்து இரண்டு

சன்மார்க்கத்தைச் சேர்ந்த ஜனங்களில், மார்க்க அவசியத்தாலோ, வெள்ளிக்கிழமை குத்பாத் தொழுகை போன்ற அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுவதற்காகவோ, அல்லது நமக்கு ஏற்பட் டுள்ள தேவை எதையாவது பூர்த்தி செய்து கொள்வதற்காகவோ கடைவீதி வழியாகச் செல்பவர்களில் பல வகையினர் உண்டு.

அவர்களில் ஒரு வகையினர் கடைவீதியில் செல்கையில் புலன் நுகர்ச்சிக்குத் தேவையான, சுகபோகத்துக்கு அவசியமான பல்வேறு பொருள்களை அங்கே கண்டதும், அவற்றால் கவரப்பட்டவர்களாய் அவற்றில் மனம் பதிந்து சோதனைக்கு உள்ளாகிறார்கள். அதனால் தம் அழிவுக்கும் மார்க்கத்தைப் புறக்கணிப்பதற்கும் அதன் கொள்கைகளைக் கைவிடுவதற்கும் ஆளாகிறார்கள்; அல்லாஹ் தன் கருணையாலும், பாதுகாக்கும் சக்தியாலும் அவர்களுக்கு ஆதரவு தந்து, இந்த மன இச்சைகளுக்கு எதிராகப் போராடுவதில் பொறுமையை அளியாவிட்டால், அவர்கள் தம் இழிந்த இச்சைகளுக்கும், போக உணர்ச்சிக்கும் இடங்கொடுக்க நேர்ந்து விடுகிறது.

அவர்களில் மற்றொரு வகையான ஜனங்கள் இந்தப் பொருள் களைப் பார்த்ததும் அழித்துபடக்கூடிய நிலைக்கு வந்து விடுகிறார்கள். ஆனால், உடனே சன்மார்க்கத்தின் சீர்தூக்கிப் பார்க்கும் சக்தியை மீண்டும் அடைந்தவர்களாய், முயற்சித்து தம்மை அடக்கிக் கொண்டு இப்பொருள்களை உதறித் தள்ளும் சகப்பை உண்கிறார்கள். தங்கள் கீழான மனத்தின் மீதும், இயற்கையின் மீதும், இச்சைகள், போக உணர்ச்சிகளின்மீதும் மார்க்க வீரர்களாக அவர்கள் விளங்குகிறார்கள். மறுமையில் அவர்களுக்கு அல்லாஹ் ஏராளமான சம்மானங்களை அருளுகிறான்.

அது சம்பந்தமாக நபிமொழி யொன்றில், "மெய்விஸ்வாசி ஒருவன் தன் போக இச்சையால் ஆட்கொள்ளப்படவிருக்கும் சமயம் அல்லது அது தன்னை ஆட்கொண்டதும், அந்தப் போக இச்சையை உதறி எறிந்தால் அவன் பங்கில் எழுபது நன்மைகள் பதிவு செய்யப்படும்'' என்று சொல்லப்பட்டுள்ளது. மற்றும் ஒரு நபிமொழியில், ''அவர்களில் சிலர் அல்லாஹ்வின் நல்லருளாலும், பாக்கியத்தாலும், இம்மையின் செல்வங்களின் உருவில் இந்த சுகபோகங்களைப் பெற்று அனுபவிக் கிறார்கள்; அவற்றுக்காக அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவிக்கிறார்கள்'' என்று கூறப்பட்டுள்ளது.

அவர்களில் மற்றொரு வகையினர் இந்தப் போகப் பொருள்களை பார்ப்பதோ, அவை இருப்பதாக அறிவதோ இல்லை. அல்லாஹ்வைத் தவிர மற்றச் சகலவற்றின் விஷயத்திலும் இவர்கள் கண் குருடாய் இருக்கிறது. அதனால் அவனைத் தவிர இவர்கள் வேறு எதையும் பார்ப்பதில்லை. அவனல்லாத எதையுங் கேட்காதபடி இவர்கள் செவிகளும் செவிடாகியுள்ளன. அந்த அன்பனிடம் கொண்டுள்ள அக்கறையாலும் அவனை அடைய வேண்டும் என்ற தூண்டுதலாலும், மற்ற எதையும் கவனிக்க அவர்களுக்கு வசதியே கிட்டாமல் போகிறது. எனவே உலகினரின் கவனம் சென்றுள்ளவற்றின் பக்கம் இவர்கள் கவனம் செல்லவில்லை. இவர்கள் கடைவீதியில் செல்கையில் நீங்கள் என்ன காண்கிறீர்கள் என்று கேட்டுப் பாருங்கள். 'ஒன்றையும் காணவில்லையே!" என்று தான் பதிலளிப்பார்கள். இவர்கள் சகல பொருள்களையும்

பார்க்கவே செய்கிறார்கள். அனால் வெளிக் கண்களால் தான்; அகக் கண்களால் பார்க்கவில்லை. இவர்கள் ஆசையுடன் அவற்றைப் பார்ப்பதில்லை; தற்செயலாகவே பார்க்கின்றனர். பார்வையில் படுவது தோற்றமேயன்றி உண்மையனாதன்று; புறத்தோற்ற மேயன்றி, அகத் தோற்றமன்று. எனவே, அவர்கள் புறத்தே கடைத் தெருவிலுள்ளவற்றைக் கண்டாலும், மனத்தகத்தே தம் இறைவனையே காண்கிறார்கள். சில சமயங்களில் அவன் புகழையும், சில சமயங்களில் அவன் கருணையையும் கண்டு கொண்டிருக் கிறார்கள்.

அவர்களில் இன்னொரு வகையினர் கடைத் தெருவில் நுழைந்ததுமே, அல்லாஹ்வின் கருணையால், அங்குள்ள ஜனங்களுக் காகத் தம் இதயத்தில் இரக்கம் நிறைந்துவிடக் காண்கின்றனர். இந்த ஜனங்களிடம் அவர்கள் கொள்ளும் இரக்கத்தால் இவர்களுக்குரிய, இவர்கள் முன்னுள்ள பேரருள்களைக் காண இயலாதவர்களாகி விடுகிறார்கள். எனவே, அவர்கள் கடைத் தெருவில் நுழைந்ததிலிருந்து, அதைவிட்டு வெளியாகும்வரை, அன்புடனும், பரிவுடனும் அல்லாஹ்வின் பாதுகாவலைத் தேடி இறைஞ்சுபவர்களாய், அந்த ஜனங்களுக்காக முறையிடுபவர்களாய் இருப்பார்கள். எனவே, இந்த ஜனங்களுக்கு நன்மை தேட, இவர்கள் நஷ்டவாளிகளாவதைத் தடுக்க அவர்கள் இதயம் உருகுகிறது; அல்லாஹ் தன் அனுக்கிரஹங்களிலும், பாக்கியங் களிலுமிருந்து, இவர்களுக்கு கொடுத்துள்ள வற்றுக்காக அவனைப் புகழ்வதிலேயே அவர்கள் நாவு ஈடுபட்டிருக்கும். நீ விரும்பினால் அவர்களை ஞானியர்கள் என்றோ, அப்தால்கள் என்றோ, பக்திமான்கள் என்றோ, அவன் அன்பர்கள், அவன் தன் அடியார்களின்மீது கவனஞ் செலுத்த நியமித்துள்ள தன் பிரதிநிதிகள் என்றோ, நேர்மையான வழிகாட்டப்படுவோர்கள் என்றோ, ஞான போதர்கள் என்றோ அழைக்கலாம். இத்தகைய ஒருவர் இரும்பைப் பொன் ஆக்கும் ரஸவாதக் கல் போன்றவர். இத்தகையவர் மீதும், அல்லாஹ்வை நோக்கித் தம் முகத்தைத் திருப்பியுள்ள யாவர் மீதும், இறைஞானத்தின் உச்சத்தை எய்திவிட்டவர்கள் மீதும் அல்லாஹ்வின் பாக்கியங்களும், திருவுளச் சித்தமும் இறங்குமாக!

உபதேசம் எழுபத்து மூன்று

ஒருவனுடைய குறைகளையும் பொய்மையையும் அவனுடைய சிந்தனை, சொல், செயல்களைப் பற்றிய அபத்தக் கோரிக்கைகளையும் அல்லாஹ் சில சமயங்களில் தன் நேயர்மார்களுக்குத் தெரிவிக்கிறான். எனவே, இறைநேயர் தன் இறைவன், அவன் தூதர், சன்மார்க்கம் ஆகியவற்றின் விஷயத்தில் பொறாமையுடையவர் ஆக்கப்படுகிறார். ஆகவே, அகப் புறப்பிணிகள் குடிகொண்டிருப்பவன், அவற்றிடையிலும் தான் சுகமாய் இருப்பதாகக் கூறுவது போல, இணை வைக்கும் மனப்பான்மை மனத்தகத்தில் இருக்கையிலேயே இப்லீஸின் சபிக்கப்பட்ட மனப்பான்மையுடன், நரகத்திலும் கடையான நரக நெருப்பில் எறியப்படவிருக்கும், அங்கேயே சதாவும் தங்கும்படி விடப்படவிருக்கும் நயவஞ்சகனின் மனப்பான்மையுடன் இருக்கையிலேயே தனக்கும் ஏகத்துவ உணர்வு உண்டாகியுள்ளது என்று ஒரு நபர் கூறுவானாயின், அதைக் கேட்டதும் இறைநேயருக்கு அகத்திலும் புறத்திலும் கோபம் அதிகமாகிறது. எனவே, அந்த நபரின் குற்றங்களும், தீய செயல்களும், துடுக்கும், அவன்தன் பொய்ப் பிரதாபங்களும், சத்திய சீலர்களின் அந்தஸ்தை தான் அடைந்திருப்பதாகக் காட்டும் பாவனையும், தெய்வ விதிப்பில் தம்மையே அழித்துக் கொண்டவர்களோடு போட்டியிடுவது போன்ற அவன் போக்கும், தான் அல்லாஹ்வின் பூரணமாக்கப்பட்ட பொருள் போல அவன் நடிப்பதும் இந்த இறைநேயரின் வாய் வார்த்தைகளால் பகிரங்கப்படுத்தப் படுகின்றன.

சில சமயங்களில் அல்லாஹ்வின் புகழைப் பெறுவதில் கொண்ட பொறாமையாலும், சில சமயங்களில் இத்தகைய பொய்யனைப் பகிரங்கப்படுத்தி அவனைத் தண்டிக்கச் செய்வதற்காகவும் இவ்விதம் செய்யப்படுகிறது. மற்றும் சில சமயங்களில் அல்லாஹ்வின் தூண்டுதலாலும், அவன் நோக்கத்தாலும், பொய்யன் மீது அவன் கொண்டுள்ள ஆத்திரத்தின் வேகத்தாலும் இவ்விதம் செய்யப் படுகிறது. இதனால் சம்பந்தப்பட்டவன் மீது இறைநேயர் புறங்கூறுகிறார் என்றும் "ஒரு இறைநேயர் இப்படிச் செய்யலாமா, இது விலக்கப்பட்டதல்லவா. ஜனங்கள் அறியாத விஷயங்களைத் தன் முன் இருக்கும், அல்லது

இல்லாதிருக்கும் ஒருவரைப் பற்றி அவர் சொல்லலாமா?" என்றும் யாராவது குறை கூறலாம். "அவைகளிலுள்ள பாவம், அவைகளிலுள்ள பயனைவிடப் பெரியதாகும்" (2 : 219) என்ற அல்லாஹ்வின் வார்த்தைக்கு இணங்கிய விதமாகவே அவர் குறைகூறி இடித்துக் காட்டுகிறார். வெளிப்படையில் இக்குற்றச்சாட்டு, அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படியாத ஒருவர்மீது சாட்டப்படுவதுதான்; ஆனால் இங்கோ, உண்மையில் அல்லாஹ்வின் செயல் குறித்துக் குறை கூறப்படுவதால் அவன் கோபத்தைத் தூண்டி விடுவதாய் இருக்கிறது. இத்தகைய ஆக்ஷேபனை செய்பவன் ஒன்றும் மார்க்கங்காணாது மயங்க நேரும். எனவே இத்தகைய சந்தர்ப்பத்தில் அவன் (ஆக்ஷேபனை கூற நினைப்பவன்) மௌனமாய் இருந்து அல்லாஹ்வுக்குப் பணிவு காட்டி, இது சன்மார்க்க நெறிமுறையில் அனுமதிக்கப்பட்டுள்ளதா என்று கண்டுபிடிக்க முயலவேண்டும்; அல்லாஹ்வினுடையவும், அவன் நேயருடையவும் பொய்யனின் உண்மை நிலையை பகிரங்கப்படுத்திய செயலைக் கண்டிக்காமல் இருக்க வேண்டும். இம்மனப்பான்மையை அவன் மேற்கொண்டால், அவன் அகத்திலுள்ள தீமை வேர் அறுபடும்; அறியாமையிலிருந்தும், மதிமயக்கத்திலிருந்தும் மீண்டு பாவ மன்னிப்பைத் தேடியவனாவான். எனவே, அது இறைநேயரின் சார்பாகச் செய்யப்படும் தாக்குதலாக ஆகிவிடும்; அகந்தையால் பணியாது, பொய் வாழ்வு நடத்திய வனையும் அழிவிலிருந்து தடுத்து அவனுக்குப் பயனுண்டாகும்படிச் செய்யவும், அல்லாஹ் தான் விரும்புபவர்கள் நேர்பாதை அடைய வழிகாட்டுபவனாய் இருக்கிறான்.

உபதேசம் எழுபத்து நான்கு

அறிவுடைய ஒருவன் முதன்முதலில் நோட்டமிட வேண்டியது தன்னுடைய கீழான மனத்தின் நிலைமையையும் அமைப்பையு மேயாகும். பிறகு சிருஷ்டிகளையும், புதிதாய் முளைப்பவற்றையும் தோன்று பவற்றையும் நோட்டமிட வேண்டும். இவற்றின் மூலம் இவற்றின் மூலகர்த்தா சிருஷ்டியாளன் ஒருவன் இருக்கிறான் என்பதை உணர வேண்டும். சிருஷ்டி சிருஷ்டித்தவனைக் குறிக்கிற தல்லவா? அதிகமான சக்தி அதைத் தருபவனைக் குறிக்கிறதல்லவா? சகலமும் அவன் மூலமாகவன்றோ ஜீவித்திருக்கின்றன! "வானங்களிலும் பூமியிலும் உள்ள

சகலவற்றையும் உங்களுக்கு அடங்கியவையாக அவன் படைத்துள்ளான்" என்ற திருமறை வாக்குக்கு இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் இது காரணமாகவே கீழ்க்கண்ட வியாக்கியானத்தைச் செய்துள்ளார்கள்: "சகல வஸ்துக்களிலும் அல்லாஹ்வின் கல்யாண குணங்களிலிருந்து ஒரு கல்யாண குணம் உள்ளது. ஒவ்வொரு பெயரும் அவன் பெயர்களில் ஒன்றின் அடையாளமாய் உள்ளது. எனவே, அகத்தே அவன் சக்தி மூலமும், புறத்தே அவன் ஞானம் மூலமும் நிச்சயமாக நீங்கள் அவன் திருநாமங்களுக்கும், கல்யாண குணங்களுக்கும், வேலைகளுக்கும் நடுவே இருக்கிறீர்கள். அவன் தன் கல்யாண குணங்களில் வெளிப் படுபவனாயும், உள்ளமையில் மறைந்தவனாயும் இருக்கிறான். அவன் உள்ளமை அவன் கல்யாண குணங்களில் மறைந்துள்ளது; அவன் கல்யாண குணங்கள் அவன் வேலைகளில் மறைந்து உள்ளன. அவன் தன் ஞானத்தைத் தன் சித்தத்தின் மூலமும் தன் சித்தத்தைத் தன் அசைவுகளின் மூலமும் வெளிப்படுத்தியுள்ளான். அவன் தன் திறமையையும், வேலை நுட்பத்தையும் மறைவாக்கித் தன் வேலைத் திறமையைத் தன் சித்தத்தின் மூலம் வெளிப்படச் செய்துள்ளான். எனவே அவன் தன் மறைவான தன்மையுள் மறைந்து நிற்பவனாயும், தன் ஞானத்திலும் சக்தியிலும் வெளிப்படையானவனாயும் இருக்கிறான். "அவன் மிதாலுக்கு (உவமைக்கு) உவமை சொல்லக் கூடியதான எதுவுமில்லை; அவன் சகலவற்றையும் கேட்பவனும் பார்ப்பவனுமாய் இருக்கிறான்."

மெய்ஞ்ஞானத்தின் ரகசியங்கள் பலவற்றை இந்த விளக்கம் திண்ணமாகத் தெளிவாக்கிக் காட்டிவிட்டது, ஆத்ம ஞான விளக்குச் சுடர்விடும் இதயம் இல்லாதவனுக்கு இது விளங்காது. இந்த மகானுக்கு (இப்னு அப்பாஸ்(ரலி) அவர்களுக்கு) இப்போது கிடைத்த காரணம், நபி பெருமான்(ஸல்) அவர்களின் பாவமற்ற திருக்கரங்கள் அவர்களுக்காக ஏந்தப்பட்டு மிகவும் உருக்கமாக, "அல்லாஹ்வே! இவருக்கு சன்மார்க்கத்தின் ஞானத்தைக் கொடு; அதன் தாத்பரியத்தைப் போதனை செய்!" என்று இறைஞ்சியதுதான்.

எல்லாம் வல்ல அல்லாஹுத் தஆலா இத்தகையவர்கள் மீது சொரிந்த அதே பாக்கியத்தை நம்மீதும் சொரிந்தருள்வானாக! நீதித் தீர்ப்பு

நாளிலே அவர்களின் புனிதத் தன்மையுடன் நம்மையும் அவர்கள் கூட்டத்தில் சேர்த்தருள்வானாக!

உபதேசம் எழுபத்து ஐந்து

அல்லாஹ்வுக்கு அஞ்சி நட; அவனுக்கு கீழ்ப்படிந்து வா என்று உன்னை எச்சரிக்கிறேன். சன்மார்க்க நெறிமுறையின் புற ஒழுக்கத்தையும், அகத் தூய்மையையும், தன்னைக் கட்டுப்படுத்தலையும், மகிழ்ச்சியான தன்மையையும், பயனுள்ள பொருட்களை நன்கொடை அளிப்பதையும், துயரத்தையும் வறுமையையும் அகற்றலையும், ஆத்ம ஞானிகளான மகான்களின் புனிதத் தன்மையைக் காப்பதையும், சமூகத்தில் உள்ள சகாக்களான ஜனங்களுக்கு உதவி புரிவதையும், இளைஞர்களுக்கு நற்புத்தி கூறுவதையும், நேசர்களோடு பகைமை பாராட்டமையையும், முறையற்ற சேமிப்பை விலக்குதலையும், மெய்ஞ் ஞான வழியில் இறங்காதவர்களின் தோழமையை மறுத்தலையும், மார்க்க, லௌதீக விஷயங்களில் உதவுதலையும் கைக் கொண்டு நடந்து வா! சன்மார்க்க ஏழ்மையின் யதார்த்தமாவது உன்னைப் போன்ற நிலையிலுள்ள ஒருவரிடம் உன் தேவைகளை வெளியிடக் கூடாது என்பதுதான். வளத்தின் யதார்த்தமாவது உன்போன்ற சிரு டிகளின் தேவையற்றவனாக நீ ஆகிவிடுவதுதான். ஆத்ம ஞானம் வெறும் விவாதம் மூலமும் பேச்சின் மூலமும் உண்டாகி விடுவதில்லை; அஃது இச்சைகளைத் துறந்து இறைவன் வழியிலிருந்து பெறவேண்டிய அனுபவப் பொக்கிஷமாகும். துறவி ஒருவரை நிறுத்திக் கொள்ளாதே! அடக்கத்தைத் தலையான குணமாக்கக் கொள்! ஞானத்தை வெளிக் காட்டிப் பேசுவதால் அவருக்கு இடைஞ்சலாய் இருக்கும்; அடக்கத்தால் அவர் சகஜமாக உன்னோடு பேசிப் பழக இயலும். ஆத்ம ஞானம் கீழ்க்காணும் எட்டு குணங்களை அடிப்படையாகக் கொண்டது. (1) இப்ராஹீம் நபியுடையது போன்ற தயாளம், (2) இஸ்ஹாக் நபியுடையது போன்ற மனப்பூர்வமான பணிவு.(3) யாகூப் நபி உடையது போன்ற சகிப்புத் தன்மை, (4) ஜக்கரிய்யா நபியுடையது போன்ற தொழுகை. (5) யஹ்யா நபி உடையது போன்ற ஏழ்மை, (6) மூஸா நபியுடையது போன்ற கம்பளி உடுத்தல். (7) ஈஸா நபியுடையது போன்ற பிரயாணம், (8) நபி முஹம்மது (ஸல்) அவர்களுடையது போன்ற மார்க்க ஏழ்மை.

உபதேசம் எழுபத்து ஆறு

பணக்காரர்களோடு கண்ணியமாகவும் ஏழைகளோடு பணிவோடும் பழகிவா என்று உன்னை எச்சரிக்கிறேன். பணிவையும் உண்மையான தன்மையையும் கைக்கொள்வதும் கட்டாயமாகும். குறிப்பாக உண்மையான தன்மை சிரு டியாளனின் நிரந்தரமான பார்வையை ஒத்ததாய் இருக்கிறது. இவ்வுலக வசதிகள் போதவில்லை என்று அல்லாஹ்வின் மீது குறை கூறவேண்டாம். சகலவித நிலைமை களிலும் அவனிடம் பணிவுடன் நடந்துகொள். உனக்கும் உன் சகோதரனுக்கும் நேசம் இருக்கிறது என்ற காரணத்துக்காக, அவன் உரிமைகளை நீ பறித்துவிடாதே! பணிவோடும், மரியாதையோடும், தயாளத்தோடும் தர்வே களுடனும் சேர்ந்து பழகு. உன் ஜீவிதத்தை ஆத்மீகத்தில் மீட்டும் வரை, உன் கீழான மனத்தைக் கொன்று கொள்! தமது நடத்தையில் மிகுந்த தயாளம் காட்டுபவர்களே சர்வ சக்திக்கும், புகழுக்கும் உரிய அல்லாஹ்வின் அருகே இருப்பவர்களாவர், அல்லாஹ்வுக்குப் புறம்பானவற்றில் தன் கீழான மனத்தைச் செல்லவிடாது தடுப்பதே செய்கைகளில் சிறந்ததாகும். உண்மை யையும் சகிப்புத் தன்மையையும் பற்றிப் பிடித்துக் கொள்ளுமாறு நீ மக்களை வற்புறுத்தி வரவேண்டும். தர்வே களின் கூட்டத்திலிருப்பதும், இறைநேயர்களுக்குச் சேவை செய்வதும் உனக்குப் போதுமானதாகும்.

தர்வே எனப்படுபவர் யார் எனின், அல்லாஹ்வைத் தவிர மற்றச் சகலவற்றின் விஷயத்திலும் அக்கறையற்றவராக, தேவையற்றவராக ஆகிவிட்டவர்தான். உனக்குக் கீழுள்ள ஒருவனைத் தாக்குவது கோழைத் தனமாகும். உனக்கு மேலுள்ள ஒருவனை அவ்விதஞ் செய்வது வெட்கங்கெட்ட செயலாகும். தர்வேஷினுடையவும், ஒரு ஸூஃபியினு டையவும் வாழ்க்கையை அனு டிப்பதற்குப் பெருமுயற்சி வேண்டும். இவற்றைக் கேலிப் பேச்சான எதனுடனும் கலந்தவிடாதே! அல்லாஹ் நமக்கும் உனக்கும் பலத்தைத் தந்தருள்வானாக!

ஹே இறைநேயரே, சகலவித நிலைகளிலும் அல்லாஹ்வை நினைவு கூர்வது உம்மீது கடமையாகியுள்ளது; அது சகல நல்லவற் றையும் ஒன்றாக்கித் தருகிறது. அல்லாஹ்வின் உடன்படிக்கைக்கு ஏற்ப நடப்பதும் உம் கடமையாகும்; அதனால் சகல தீமைகளும் விலகிவிடும். அல்லாஹ்வின் கட்டளைப்படி நேரும் சகல சம்பவங்களையும் சமாளிக்கத் தயாராய் இருப்பதும் உம் கடமையாகும்.

உன் செயல்முறைகள் பற்றியும், ஆஸ்வாச நிலைகள் பற்றியும் நீ வினவப்படுவாய் என்பது உனக்குத் தெரியும். எனவே குறித்த நேரத்திற்கு எது உகந்ததோ அதில் ஈடுபட்டவனாய் இரு; பயனற்ற வேலைகளால் உன் அங்கங்கள் சோர்வடைய விடாதே! அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் கீழ்ப்படிவது உன் கடமையாகும். தூதரின் ஸ்தானத்திலிருந்து ஆட்சி செய்வோர்கள் சொற்படியும் நீ கேட்க வேண்டும். அவர்களுக்கு உரியதைக் கொடு! அவர்களிடமிருந்து வரவேண்டியதைக் கேட்காதே! சகலவித நிலைமைகளிலும் எப்பொழுதும் நல்லவிதமாக எண்ணுவதும், அவர்களிடம் நல்வெண்ணங்காட்டுதலும், நன்மையான சகலவற்றையும் அவர்களுக்குப் பெற்றுத்தர முயல்வதும் அவசியமாகும். அவர்களில் யாருக்காவது உன் இதயத்தில் கேடு நினைத்துக் கொண்டு அல்லது பகைமை பாராட்டிக் கொண்டு அல்லது மனத்தில் வன்மம் வைத்துக் கொண்டு இரவில் தூங்கப் போகாதே!

உன்னிடம் அநியாயமாக நடந்து கொண்டவனுக்காகவும் நீ பிரார்த்தனை செய்வது அவசியமாகும். சர்வ புகழுக்கும் சக்திக்கும் உரியவனான அல்லாஹ்வுக்கு அஞ்சி நடக்க வேண்டும். மேலும் ஆகுமானவற்றை மட்டுமே புசிக்க வேண்டும்; உனக்குச் சந்தேகம் வந்தால், அல்லது தெரியாவிட்டால் அல்லாஹ்வின் ஞானத்தை அடைந் துள்ள பெரியார்களிடம் கேட்டுத் தெளிவு பெற்றுக் கொள்ள வேண் டும். அல்லாஹு ஸுப்ஹான ஹுவத் தஆலாவின் விஷயத்தில் அடக் கத்தோடு நடந்துகொள்! அவனையே தோழமை கொள்! அவனோடு தோழமை கொள்வதற்கு அவசியமான அளவு மட்டும் பிறவற்றின் தோழமையை நாடிக்கொள்!

உன் செல்வத்திலிருந்து தினமும் தானதருமஞ் செய். இரவில் அன்றைய தினம் இறந்த சகல முஸ்லிம்களுக்காகவும் ஜனாஸாத் தொழுகை தொழு. உன் 'மக்ரிபுத்' தொழுகையை முடித்ததும் 'இஸ்திகாரா' தொழுகையும் தொழு. காலையிலும் மாலையிலும், "அல்லாஹும்ம அஜிர்னா மினன்நார்'(அல்லாஹ்வே, எங்களை(நரக) நெருப்பிலிருந்தும் பாதுகாத்தருள்!) என்று ஏழு விடுத்தம் கூறிவா. "அவூது பில்லாஹிஸ்

ஸமீயில் அலீம் மின் ஷைத்தா னிர்ரஜீம்” (சபிக்கப்பட்ட ஷைத்தானிட மிருந்து யாவையும் கேட்போனும் யாவும் அறிந்தவனுமான அல்லாஹ் விடம் நான் பாதுகாவல் தேடுகிறேன்) என்று அடிக்கடி ஓதிவா! ஸூரா ஹஷ்ரின் கடைசியிலுள்ள இவ்வாக்கியங்களால் அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்துவா!

ஹுவல்லா ஹுல்லதீ லாஇலாஹ இல்லாஹுவ ஆலிமுல் கைபி வஷ்ஷஹாததி ஹுவர் ரஹ்மானுர் ரஹீம். ஹுவல்லா ஹுல்லதீ லாஇலாஹ் இல்லா ஹுவ அல்மலிக்குல் குத்தூஸ்ஸுல் ஸலாமுல் மூஃமினுல் முஹைமினுல் அஸீஸுல் ஜப்பாருல் முதகப்பிரு, ஸுப்ஹா னல்லாஹி அம்மா யுஷ்ரிகூன். ஹுவல்லாஹுல் காலிகுல் பாரிஉல் முஸவ்விரு லஹுல் அஸ்மா உல் ஹுஸ்னா யுஸப்பிஹு லஹு மாபிஸ் ஸமா வாத்திவல் அர்லி வஹுவல் அஸீஸுல் ஹகீம்.

அவன் அல்லாஹ்; அவனையன்றி வேறு இறைவனில்லை. அவன் மறைவானதையும் வெளிப்படையானதையும் நன்கறிந்தவன். அவன் அளவற்ற அருளாளன்; நிகரற்ற கருணையாளன். அவனே அல்லாஹ்; அவனையன்றி வேறு இறைவனில்லை. (அவன்) சர்வ லோகங்களின் அரசன்; பரிசுத்தமானவன்; சாந்தியருளுபவன்; அபயமளிப்பவன்; நம்பிக்கையின் காவலன்; நம் பாதுகாவலன்; மகா வலுப்பமானவன்; மகா பெரியவன்; சகல பெருமைக்கும் உரியவன். அவனுக்கு இவர்கள் கூறும் இணைதுணைகளை விட்டும் அவன் மகா பரிசுத்தமானவன். அவனே அல்லாஹ்; சிருஷ்டிப்பவன்; சிருஷ்டிகளை ஒழுங்குபடுத்துபவன்; சிருஷ்டிகளின் ரூபத்தை அமைத்தவன். அவனுடைய திருநாமங்கள் மிகமிக அழகியவை. வானங்களிலும் பூமியிலும் உள்ள சகலமும் அவனைப் போற்றிப் புகழ்கின்றன; அவன் சர்வ வல்லமையும் ஞானமும் உடையவன். (59 : 22, 23, 24)

அல்லாஹ் ஒருவனே பலமும் உதவியும் அளிப்பவன்; அவனிடமன்றி வேறு பலமோ சக்தியோ இல்லை. அவன் உன்னதமானவன்; மகா பெரியவன்.

உபதேசம் எழுபத்து ஏழு

எந்தச் சிருஷ்டியுமே இல்லை என்று எண்ணியவாறு, சர்வ சக்தனும், புகழுக்கு உரியவனுமான அல்லாஹுத் தஆலாவோடேயே இரு. உன்னிடம்

கீழான மனமே இல்லை என்ற முறையில் சிருஷ்டிகளிடை இருந்துவா. சிருஷ்டிக்குப் புறம்பாகி, அல்லாஹுத் தஆலாவுடன் இருக்கும்போது நீ அவனை அடைந்தவனாவாய்; மற்றச் சகலவற்றிலுமிருந்து மறைந்தவனாவாய்; கீழான மனத்தின் புறம்பாகிச் சிருஷ்டிகளிடையில் இருக்கும்போது நீ நிதமாக நடந்து கொள்வாய்; நேர்மையான வழியில் நடப்போர்க்கு உதவுவாய்; வாழ்க்கையின் சங்கடங்களிலிருந்து பாதுகாப்பானவனாவாய். நீ ஏகாந்தத்தில் இறங்கி அங்கேயே தனித்திருக்கப் போகையில் யாவற்றையும் வாயிலுக்கு வெளியிலேயே விட்டு விட்டுப்போ. அவ்விதம் நீ செய்ததும், உன் அகக் கண்ணால் உன் நண்பனைக் காண்பாய். சிருஷ்டிகளுக்கு அப்பாலுள்ளதன் அனுபவம் உண்டாகும்; அப்போது உன் கீழான மனம் மறைந்து அதனிடத்தில் அல்லாஹ்வின் உத்தரவும், அவன் சமீபத்துவமும் குடிபுகும். இந்த நிலையில் உன் அறியாமையே உன் ஞானமாகவும், உன் தொலைவான நிலையே உன் சமீபமாகவும், உன் மௌனமே நீ அல்லாஹ்வை நினைவு கூர்வதாகவும், உன் தடுமாற்றமே உன் நட்பாகவும் மாறிவிடும். ஹே மனிதா, இந்த நிலையில் சிருஷ்டியாளனையும், சிருஷ்டியையுந் தவிர வேறு எதுவு மிராது. எனவே, சிருஷ்டியாளனுடன் இருப்பவனாகிவிட்டால், “நிச்சயமாக இவை என் எதிரிகளே; சர்வலோக ரட்சகனே என் இறைவன்” (26 : 77) என்று பிறரிடங் கூறு. அதை ருசி பார்த்தவர்களே அதன் மதுரத்தை அறிவார்கள். பித்தக் கசப்பால் சங்கடப்படுபவன் மதுரமான ருசியை அறிவதெப்படி என்று என்னிடம் வினவுகிறாய். அவன் தன் புலன் நுகர்ச்சியைத் தன்னை விட்டு ஒதுக்க வேண்டும். மனிதனே, மெய்விஸ்வாசி ஒருவன் ஒரு நற்காரியம் செய்ததும் அவன் மிருக இச்சை அவன் இதயத்துள் (ஆத்மாவின் உத்தரவுக்குப் பணிந்து) நன்மாற்றமடைகிறது. கீழான மனம் ஆத்மாவின் உணர்வைப் பெறுகிறது. அப்போது இந்த இதயம் ஓர் இரகசியமாக மாறுகிறது. அதன் பின் இந்த இரகசியம் இன்னும் மாறுதலடைந்து நாஸ்தி நிலையை எய்துகிறது. பிறகு இந்த நாஸ்தி நிலை மற்றுமொரு மாறுதலுக்கு உள்ளாகி வேறொரு ஜீவிதமாக ஆகிவிடுகிறது.

மனிதனே, நண்பர்களுக்கு ஒவ்வொரு வாயிலிலும் வழியுண்டு. கீழான மனத்தை ஒழித்தலாவது, சகல சிருஷ்டிகளையும் மறத்தலும் உன்

இயல்பிலிருந்தும் மறைந்து முந்திய நிலைக்குத் திரும்ப வேண்டும். அதன்பின் இறைவன் உன் மீது மிகுதமும்(கருணை)நீரைப் பொழிந்து அவன் விரும்பிய அளவுக்குப் பயன்படுத்துவான். இந்நிலையை நீ விரும்பினால் முதலில் இஸ்லாத்தைப் பூரணமாக அனுஷ்டித்து வா! அதன்பின் அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணி! அதன்பின் அல்லாஹ்வின் ஞானத்தைப் பெறு; அதன்பின் அவனில் ஜீவிப்பவனாகு! இவ்வித ஜீவிதம் உண்டானதும், நீ அவனுக்கே உரியவன் ஆகிவிடுவாய். பயபக்தி கொள்ளல் ஒரு நாழிகை வேலை; அல்லாஹ்வின் ஞானமடையவோ வாழ்நாள் முழுவதையும் செலவிட வேண்டியதாகும்.

உபதேசம் எழுபத்து எட்டு

அகப் பரிசோதனையிலும், ஆத்மீகப் போராட்டத்திலும் ஈடுபட் டுத் தமது ஆத்மீக லக்ஷியத்தை அடையத் தீர்மானித்து, அதில் ஒட்டிக் கொள்ள முடிவு செய்வோர் பத்து விஷயங்களை முக்கியமாக கவனிக்க வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். இவற்றில் அல்லாஹ் வின் உத்தரவு கொண்டு இவர்கள் உன்னதப் பதவி பெற்றவர்களாக ஆகிவிடுவார்கள்.

முதலாவதாக, உண்மையாகவோ, வேண்டுமென்றோ, தவ றாகவோ அடியான் அல்லாஹ் மீது சத்தியஞ் செய்யவே கூடாது. இவ்விதம் தன்னை அவன் பழக்கப்படுத்திக் கொண்டால், தன் நாவையும் கட்டுப்படுத்தி விட்டால், வேண்டுமென்றோ தவறாகவோ கூட அவன் சத்தியஞ் செய்ய முடியாத நிலையை அடைந்து விடுகிறான். எனவே, இவ்விதப் பழக்கம் ஏற்பட்டது. அல்லாஹ் அவனுக்குத் தன் ஒளியின் ஒரு வாயிலைத் திறந்து விடுவான். இதன் பயனை அவன் தன் அகத்தில் கண்டு கொள்வான். தன் பதவியில் உயர்வையும், தீர்மானத்தில் சகிப்புத் தன்மையையும், உறுதியையும், தன் சகாக்களிடை பாராட்டுதலையும், அயலாரிடை கண்ணியத்தையும் அடைவான். அவனை அடையாளங் காண்பவர்கள் அவனுக்கு மரியாதை செய்வார்கள். அவனைக் காண்பவர்கள் பயபக்தி கொள்வார்கள்.

இரண்டாவதாக, வேண்டுமென்றோ, விளையாட்டாகவோ அவன் பொய் பேசுவதைத் தவிர்க்க வேண்டும். இந்த அனுஷ்டானத்தால், இஃது அவன் இதயத்தில் உறுதிப்படுவதால், அவன் நாவு இதில் பழக்கப்படுவதால், அவன் இதயத்தை அல்லாஹ் அதனால் திறப்பான்.

அவன் ஞானத்தை அதன் மூலம் தெளிவு படுத்துவான். அதனால் அவன் பொய்யையே அறியாதவனாகவும் அதை யாரிடமிருந்தாவது கேட்டால் அதைப் பெரும் மாசாகவும், அதற்காகத் தன் மனத்தகத்துடன் வெட்கப்படுபவனாகவும் ஆகிவிடுவான். பொய்யை தன்னை விட்டே அகற்றும்படி அவன் அல்லாஹ்விடம் பிரார்த்தித்தால், அல்லாஹ் அதை ஏற்றுக் கொள்வான்.

மூன்றாவதாக, அவன் யாருக்காவது ஒரு வாக்குக் கொடுத்தால் அதை மீறக்கூடாது; அல்லது வாக்கே கொடுக்கக் கூடாது. இப்படி ஆனதும் அவன் விஸ்வாசங்களில் அவன் அதிகப் பலம் பெறுபவன் ஆவான். தான் பின்பற்ற வேண்டிய சரியான வழியை உணர்வான். வாக்குறுதியை மீறுவது பொய் சொல்வதாகும் என்பதை உணர்ந்து அதிலிருந்து விலகுவதன் மூலம், தயாளம் எனும் கதவு அவனுக்காகத் திறந்து கொள்ளும். சத்தியவாதிகளின் உள்ளங்களில் அவன் மீது அன்பு உண்டாகுமாறு செய்யப்படும். அல்லாஹ்வின் பார்வையில் அவன் உயர்த்தப்பட்டவன் ஆவான்.

நான்காவதாக சிருஷ்டிகள் எதையும் சபிப்பதில் இருந்தும் விலகிக் கொள்ள வேண்டும். ஓர் அணுவளவேனும் அதற்கும் குறைவாகவேனும் யாருக்கும் தீங்கு செய்யக்கூடாது. இவ்விதம் ஆவது நல்லவர்களாயும் விஸ்வாசிகளாயும் இருப்போரின் நற்செயல்களோடு சேர்ந்தது. இதன்படி நடந்தால் இவ்வாழ்வில் அல்லாஹ்வின் பாதுகாவலில் வாழ்க்கை நல்ல முடிவை அடைவதோடு, அடியானின் ஆத்மீகப் பதவிகளில் அல்லாஹ் அவனுக்காக ஒதுக்கியுள்ளவையும் கிட்ட இடமுண்டு. அவன் அழிவில் அகப்படாதபடியும், ஜனங்களின் தீங்குகளுக்கு உட்படாதபடியும் அல்லாஹ் அவனைக் காப்பாற்றித் தன் கருணையையும் தன் சமீபத்துவத்தையும் அருளுகிறான்.

ஐந்தாவதாக, ஜனங்களில் யாருக்கும்— அவர்கள் தனக்கு எத்தனை பெரிய தீங்குதான் இழைத்திருந்தாலும் அவர்களுக்கு கேடு உண்டாகும்படி பிரார்த்திப்பதை விட்டும் விலகிக் கொள்ள வேண்டும். அவன் செயலாலோ நாவாலோ பதிலுக்கு பதில் தீங்கு செய்யாது அல்லாஹ்வுக்காக பொறுமையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

செயலாலோ வார்த்தையாலோ அவன் பழிக்குப் பழி வாங்கக் கூடாது; இக்குணமுடையவனை இது உயர்ந்த உதவிக்கு உயர்த்தும். இதில் பயிற்சி பெற்று விடுபவன் இம்மையிலும் மறுமையிலும் கண்ணியமான இடம் பெறுவான். சத்தியத்தை நம்பும் அருகிலும் தூரத்திலும் உள்ள சகலமும் அவனிடம் அன்பும் பரிவும் காட்டுவார்கள். அவனுடைய பிரார்த்தனை ஏற்கப்படும். இம்மையின் நன்மைகளிலும் கௌரவத்திலும் அவனுக்குப் பங்குண்டு. மெய்விஸ்வாசிகளின் இதயத்தில் அவனுக்கு இடமுண்டு.

ஆறாவதாக, தன்னைப் போலவே கிப்லாவை நோக்கித் தொழுபவரில் ஒருவரின் பல தெய்வ வணக்கம். நிராகரிப்பு, நயவஞ்சகம் முதலியவைப் பின்பற்றுவதில் இஃது உச்சமாகும். அல்லாஹ்வின் ஞானத்திலும், அவன் தண்டனையிலும் குறுக்கிடுவதில் இருந்து இதனால் அவன் வெகுதூரம் விலகியவனாகவும் அவன் இடத்துக்கும் கருணைக்கும் அருகிலானவன் ஆகவும் விளங்குவான். எனவே, அல்லாஹு தஆலாவை நெருங்க இது மிகவும் கண்ணியமும் மாட்சிமையும் மிக்க பாதையாய் இருக்கிறது. அல்லாஹ் இப்பாதையைத் தன்னுடைய மெய்விஸ்வாசியான அடியான் ஜனங்களிடம் காட்டிய கருணைக்கு சம்மானமாக அருளுகிறான்.

ஏழாவதாக, வெளிரங்கத்திலோ, அந்தரங்கத்திலோ பாவகரமான இயல்புடைய எதையும் பார்ப்பதினின்றும் அவன் விலகிக் கொள்ள வேண்டும். தன் உடலிலுள்ள அங்கங்கள் அதில் ஈடுபடாதபடி செய்து கொள்ள வேண்டும். அப்படி இருப்பதன்மூலம் இதயத்துக்கும் அங்கங்களுக்கும் இம்மைக்குரியவற்றிலிருந்தும், அல்லாஹ் வைத்துள்ள நன்மையானவைகளிலிருந்தும், மறுமைக்குரியவற்றிலிருந்தும் வெகு விரைவில் சம்மானங்கள் அருளப்படும். நாம் யாவருக்கும் இக்குணங்களின்படி நடக்கும் சக்தியைத் தந்தருளி, இவ்வுலக இச்சைகளை அல்லாஹ் தம் இதயங்களிலிருந்து அகற்றி அருள்வானாக!

எட்டாவதாக, யார் மீதும் சிறியதோ பெரியதோ எப்பாரத்தையும் சுமத்தக்கூடாது. அதற்குப் பதிலாக பிறருடைய பளுவை அவர்கள் கேட்டோ, கேட்காமலோ குறைக்க வேண்டும். ஆகவே, அல்லாஹ்வின் அடியார்களுக்கு இதன் மூலம் பொருத்த கௌரவமும், பக்திமான் களுக்குக் கண்ணியத்தின் உச்சமும் கிடைக்கப் பெறுகின்றன. இதன் மூலம் நன்மை

செய்யும் படியும் தீமையை விட்டு விலகும்படியும் ஜனங்களைக் கண்டித்துக் கூறவும் அடியானுக்குப் பலம் உண்டாகிறது. அல்லாஹ்வின் அடியார்களான பக்திமான்களுக்கு இதன்மூலம் பெரும் கௌரவமும் கண்ணியமும் உண்டாவதுடன், நன்மையைக் கைக்கொண்டு தீமையை ஒதுக்கும்படி மக்களிடையே பிரசாரம் செய்யவும் வசதி ஏற்படுகிறது. இந்த நிலையில் இவர்களுக்குச் சகல சிருஷ்டிகளுமே ஒரே அந்தஸ்தில் இருப்பது புலப்படுகிறது. இந்தப் பதவியை அடைந்த அடியானுடைய இதயத்தைத் தேவைகளற்றதாயும் நிச்சயமான நிலையை எய்தியதாயும், அல்லாஹ்வின் மீது பூரண நம்பிக்கை வைப்பதாயும் அல்லாஹ் ஆக்கி வைத்துவிடுகிறான். உலக இச்சைகளோடு பந்தப்பட்டுக் கிடக்கும் எவனையும் அல்லாஹ் உயர்த்துவது இல்லை. இவ்விதம் பந்தங்களிலிருந்தும் விடுபட்டு அந்தஸ்தில் உயர்ந்த அடியானுக்குச் சகல சிருஷ்டிகளும் சம உரிமைகள் உடையவையாகவே தோன்றுகின்றன. இந்தப் பதவி இறைநேயர்களுக்கு ஒரு கண்ணியமான வாயிலாகவும், நேர்மையானவர்களுக்கு கௌரவந்தரும் வாயிலாகவும், உண்மையானவர்களுக்கு முற்றும் அருகிலுள்ளதாகவும் விளங்குகிறது.

ஒன்பதாவதாக, பிறரிடமிருந்து எதையும் எதிர்பார்ப்பதிலிருந்தும், அவர்களுடைய உடமைகளில் ஆசை வைப்பதிலிருந்தும் அவன் தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டும். அவ்விதமாவது மகா பெரும் கௌரவமும், தேவையற்ற–அப்பழுக்கற்ற தன்மையும், மகத்தான ராஜ்ஜியமும், பாக்கியமான பெருமையும், தெளிவான நிச்சயமும், அல்லாஹ்வின்மீது தெளிவான–சரியான நம்பிக்கை வைத்தலும் கிட்டுவதாலும் அல்லாஹ்வின்மீது நம்பிக்கை வைப்பது வாயில்களில் ஒரு முக்கியமான வாயிலாகும். அல்லாஹ்வுக்கு அஞ்சும்படி செய்வதாகவும் மார்க்க அனுஷ்டானத்தில் பரிபூரணம் முழுக்க முழுக்கவும் பற்றுதல் கொண்டதன் அடையாளமாகவும் இஃது ஆகிவிடுகிறது.

பத்தாவதாக, பணிவு கொள்ள வேண்டும். இதன் மூலம் அடியானின் பதவி முற்றும் உன்னதமானதாக ஆக்கப்படுகிறது. அல்லாஹ் சிருஷ்டியிலும் ஜனங்களின் பார்வையிலும் அவன் நிலை மகத்தானதாகவும், அவன் முக்கியத்துவமும் கௌரவமும் சம்பூரணமானவையாகவும் ஆக்கிப்படுகின்றன, இம்மையிலும் மறுமையிலும் உள்ளவற்றில் அவன் நாடுபவற்றை அவன் அடையும் சக்தியும்

அருளப்படுகிறது இந்தப் பணிவெனும் குணம்தான் கீழ்ப்படிதலின் சம்பூரணத்துவமான ஆணிவேராகவும் கிளைகளாகவும் உள்ளது. அவன் உதவியால் அல்லாஹ்வின் அடியான், சுகத்திலும் கடத்திலும் அல்லாஹ்விடம் திருப்தி பெற்ற நல்லடியார்களின் அந்தஸ்தை அடைகிறான். பயபக்தியின் பரிபூரணமான நிலை இதுதான்.

ஜனங்களில் யாரைக் காணினும் அவரிடம் தன்னைவிட உயர்ந்த தன்மையையன்றி வேறு எதையும் காணாமல் இருப்பதே அல்லாஹ்வின் அடியான் கொள்ளும் பணியாகும். "அனேகமாக அல்லாஹ்வின் பார்வையில் இவர் என்னைவிட நல்ல நிலையிலுள்ளவராகவும் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றவராகவும் இருக்கலாம்" என்று ஒவ்வொருவரைப் பற்றியும் அவன் எண்ணவேண்டும். அவர் சிறியராய் இருப்பின். "இவர் அல்லாஹ்வுக்கு மாறு செய்யவில்லை. நான் அவனுக்கு மாறு செய்துள்ளேன். எனவே, இவர் என்னைவிடச் சிறந்தவர்தான்" என்றே அல்லாஹ்வின் அடியான் எண்ணவேண்டும். சம்பந்தப்பட்ட பெரிய மனிதராயிருப்பின், "எனக்கு முன்பே இவர் அல்லாஹ்வுக்குச் சேவை செய்திருக்கிறார்" என்றும், அவர் கற்ற அறிவாளியாய் இருப்பின், 'எனக்கு எட்டாதவற்றை இவர் அடைந்திருக்கிறார். நான் அறியாதவற்றை இவர் அறிந்திருக்கிறார்: எனக்கு எது தெரியாது என்பது இவருக்குத் தெரியும்; இவர் அறிவுடன் நடந்து கொள்கிறார்" என்றும் பணிவு காட்ட வேண்டும், சம்பந்தப்பட்ட மனிதர் அறியாமை உடையாராய் இருப்பின், "இந்த மனிதரோ அறிந்து அல்லாஹ்வுக்கு மாறு செய்து விட்டார்; நானோ அறிந்து இருந்தும் மாறு செய்து விட்டேன்; எனக்கு எவ்வித முடிவு ஏற்படும். இவருக்கு எவ்வித முடிவு ஏற்படும் என்பதை நான் அறிவேன்" என்று எண்ணிப் பணிவு கொள்ள வேண்டும். சம்பந்தப்பட்ட மனிதர் ஒரு காபிராய் இருப்பினும், "நான் அறிய மாட்டேன். ஒரு வேளை இவர் முஸ்லிமாகி நற்செயல்களுடன் மரணம் அடையலாம்! நான் காபிராகித் தீயசெயலுடன் மரணம் அடையவும் நேரலாம்" என்று எண்ணிப் பணிவு காட்ட வேண்டும்.

இதுவே அன்பின், அச்சத்தின் வாயிலாகும். இதன்படி நடப்பது முற்றும் விரும்பத்தக்கது. அல்லாஹ்வின் அடியார்களுடன் இறுதி வரையிலும் இருப்பதுமாகும்.

அல்லாஹ்வின் அடியான் இவ்விதம் ஆன பின்னர், சகல துயரங்களிலிருந்தும் அல்லாஹ் அவனைப் பாதுகாவல் பெற்றவனாக ஆக்குவான்; அல்லாஹுத் தஆலாவின் தோழமையைப் பெறும் அந்தஸ்துக்கு உயர்த்துவான். அவன் அல்லாஹ்வின் நேசர்களின் ஒருவனாவான். அல்லாஹ்வின் பகைவனான இப்லீஸின் எதிரியாகவும் அவன் ஆகிவிடுவான்.

இந்நிலை கருணையின் வாயிலை எய்திய நிலையாகும். இதை எய்தியதும் அகந்தை எனும் வாயில் அடைப்பட்டு விடுகிறது, அகந்தையின் கயிறு அறுபட்டுப் போகிறது: சன்மார்க்க; லௌதீக, ஆத்மீக விஷயங்களில் தன்கீழான மனத்தின் உயர்வு மனப்பான்மை ஒதுக்கப் பட்டதாகிறது. சேவையின் முழுச் சாராம்சமும் இதுவாகவே, மிதமான தன்மையின் பூரண உச்சமும் இதுவாகவே ஆகிவிடுகிறது. அல்லாஹ விடம் சம்பூரணமாகப் பக்தி கொண்டதற்கு இஃது அடையாளமாகி விடுகிறது. எனவே, இதைவிடச் சிறந்தது எதுவும் இல்லை. அடியானானவன் இந்த அந்தஸ்தை அடைந்ததும் அவன் நாவு ஜனங்களைப் பற்றியும் வீணானவைப் பற்றியும் பேசாததாகிவிடவேண்டும். இவ்விதம் ஆகாதவரை அடியானின் எவ்வேலையும் பூரணத்துவமடைந்ததாகாது. துவேஷமும் அகத்தையும், வரம்பு மீறலும் சகலவித நிலைகளிலும் அவன் இதயத்தில் இடம்பெறாதபடி அகற்றப்பட்டு, அவன் நாவும் (பேச்சும்), நோக்கமும் அந்தரங்கத்திலும், வெளிப்படையிலும் ஒன்றாகவே இருக்கும்படி ஆக்கப்பட வேண்டும். கண்டிக்கும் விஷயத்தில் மக்கள் யாவரும் சமமானவர்களாகவே அவன் கண்முன் படவேண்டும். ஜனங்களில் யாரையும் தீய பெயர் கூறியோ, தன் செயல்களை உதாரணமாகக் காட்டியோ கண்டிக்கக் கூடாது. யாரைப் பற்றியும் வேறு யாரும் தன்னிடம் தீயமுறையில் பேசுவதையும் அவன் கேட்கவோ, அதபற்றி மகிழ்ச்சி அடையவோ கூடாது. ஏனெனில், இவ்விதம் கேட்கும், கேட்டு மகிழ்ச்சியடையும் பலஹீனம் அல்லாஹ்வின் அடியார்களுக்குத் துயரத்தையும் அவன் பக்தர்களுக்குக் கடங்களையும் தரும்; அவர்களுக்குக் கேடு உண்டாக்கும். அல்லாஹ தன் கருணை ரஹ்மத்தை அருளி ஸூஃபியாக்களின் நாவையும் இதயத்தையும் பாதுகாப்பாக்கி உதவியருள்வானாக!

உபதேசம் எழுத்து ஒன்பது

ஹஜ்ரத் கௌதுல் அஃலம் முஹியித்தீன் ஆண்டகை அவர்களின் மூத்த புதல்வரான ஷைகு அப்துல் வஹ்ஹாப் அவர்கள் ஆண்டகை அவர்களின் அந்நிய காலத்தில் தங்களுக்குப் பிரிவு உபதேசம் செய்யும்படி கேட்டபோது ஆண்டகை அவர்கள் இவ்வாறு உபதேசித்தார்கள். "அல்லாஹு ஸுப்ஹானஹுவத் தஆலாவுக்குப் பயந்து நடப்பது உன் கடமை; அவனைத் தவிர வேறு யாருக்கும் அஞ்சக்கூடாது. அவனைத் தவிர வேறு யாரிடமிருந்தும் எதையும் எதிர்பார்க்கவே கூடாது. உன்தேவைகளை எல்லாம் அவனிடமே ஒப்படைத்து விடவேண்டும். அவனையன்றி வேறு யார்மீதும் நம்பிக்கை கொள்ள வேண்டாம். சகலவற்றையும் அவனிடமே கேட்க வேண்டும். அவன் ஏகத்துவத்தைப் பற்றிப் பிடித்துக் கொள்!" அவன் ஏகத்துவத்துவத்தைப் பற்றிப் பிடித்துக் கொள்!"

உபதேசம் எண்பது (இறுதி உபதேசம்)

ஆண்டகை அவர்களுடைய அந்நிய காலத்தில் அமரர்களும் இறைநேசர்களின் ஆத்மாக்களும் அவர்களைக் காண வந்து கொண் டிருந்தனர். எனவே, அவர்கள் தங்கள் புத்திரர்களை நோக்கி, "அவர்க ளுக்கு மரியாதை காட்டி இடம் கொடுங்கள். அவர்களுக்கு இங்கே இடம் நெருக்கடி ஏற்படாமல் கவனியுங்கள்" என்று கூறினார்கள். பின்னர் வந்தவர்கள் ஒவ்வொருவருக்கும், "அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத் துல்லாஹி வ பரக்காத்துஹு" என்று அவர்கள் ஸலாம் கூறிக் கொண்டே இருந்தார்கள். ஓர் இரவும் பகலும் இவ்வாறு அவர்கள் ஸலாம் கூறினார்கள்: "வெளிரங்கத்தில் நான் உங்களோடுதான் இருப்பினும், அந்தரங்கத்தில் நான் அவர்களோடுதான் இருக்கிறேன். எனக்கும் உங்களுக்கும் இடையிலுள்ள தூரம் வானத்துக்கும் பூமிக்கும் இடையிலுள்ள தூரம் போன்றதாகும் மற்றவர்களைப் போல் என்னையும் கருதாதீர்கள்.

அதன்பின் அவர்களுடைய மூத்த புதல்வர் அவர்களிடம் வேதனை எப்படி இருக்கிறது என வினவினார்கள் அதற்கு அவர்கள் அருளியதாவது: "என்னிடம் ஒன்றும் கேட்க வேண்டாம்; நான் அல்லாஹ்வின் ஞானத்தில் புரட்டி எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

என் பிணியை மனிதராய் இருப்பினும் சரி, ஜின்னுகளாய் இருப்பினும் சரி அமரர்களாய் இருப்பினும் சரி யாரும் அறிய முடியாது. அல்லாஹ்வின் சக்தியால் ஆகக்கூடியவைகளும், அவனுடைய சர்வஞானத்தில் இருப்பவைகளும் ஒருக்காலும் முரண்பட மாட்டா. விதிவசம் மாறினால்கூட அவனுடைய சர்வ ஞானத்தில் இருப்பவை மாறமாட்டா. அவன் நாடியதை உண்டாக்குபவன்; நாடியதை இல்லாமல் ஆக்குபவன். லௌஹுல் மஹ்பூல் எனும் விதிவசப் பட்டோலை அவனிடமே இருக்கிறது. யாரும் அவனைக் கேள்விக் கேட்க முடியாது; அவனே யாவரையும் கேள்வி கேட்பான். ஹதீஸ்களில் கூறப்பட்டுள்ள தெய்வீக குணங்களுக்கு வியாக்கியானஞ் செய்ய முற்படாதீர்கள். அவற்றின் வெளி அர்த்தத்தையே நம்புங்கள்."

புதூஹுல் கைப்

(மறைவான அகமியத்தின் திறவுகோல்)

முற்றுப் பெற்றது.

அல்லாஹ்வின் நல்லருளால்

முதல் பாகம் முற்றியது.